ஏப்ரல்

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளி அரசி

ஒளி 04 இதழ் 04

பக்கங்கள் : 80 (64 + 8 + VIII)

மங்கையரின் தோழி

அரசியலோ ஆபாசமோ கலக்காத அற்புத படைப்பு

PERIODICAL
JAFFNA PUBL...



தமிழே உயிரானேன்



மனைவி அமைவதெல்லாம்



பட்டங்கள் எல்லை அல்ல

## கண்ணில் தெரியுதடி கண்ணம்மா



## மாற்றம் எங்கே போகிறது?

## இன்பங்கள் இனிமையாய் பூப்பதில்லை

+ அறிவுக்கொத்து + ஆரோக்கிய கையேடு + தரம் 5 திருத்தற்சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...




சங்கதி தெரியுமோ? (8)



வார்த்தைகளை வடிகட்டுங்கள் (10)



ஒரு தேவதையாய் (12)



சொந்தக்காலில் நிற்றல் (24)



மனமிருந்தால் இடமும் இருக்கும் (42)



கம்பர் காட்டும் திருமேனி அழகு (47)



அலுவலகத்தில் உயர்வடைய ஐந்து வழிகள் (56)

ஜென் கதை (58)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலக்கிய நயம்



# கம்பர் காட்டும் இராமன் திருமேனி அழகு

கம்பராமாயணம் இதிகாசங்களிலே சிறப்புடையது. இராம பிரானின் வரலாற்றினை தன் கவிக் கூறுகளால் அழகுறப் பாடியிருப்பவர் கம்பர். கம்பரின் கவித்துவம் கம்பராமாயண காவியத்தில் இழையோடியிருக்கின்ற தன்மையினை நாம் அழகுறக் கண்டு கொள்ளலாம்.

இத்தகைய கம்பராமாயணத்தில் இராம பிரானின் அழகின்னைத் தன் பாடல்களில் சிறப்புற வர்ணிக்கின்றார் கம்பர். இராமர் கருணையின் வடிவமாக விளங்குபவர். இத்தகைய இராமபிரான் தன் தந்தையின் ஆணை ஏற்று தன் மனைவி சீதையுடனும், தம்பி இலக்குவணனுடனும் வனவாசம் செல்கின்றார். இராமபிரான் வனத்திலே ஓர் காலைப் பொழுதில் நடந்து செல்கின்றார். அப்போது இராம பிரான் திருமேனியழகினை கம்பர் அழகுற பாடுகின்றார். பாடல் இது தான்,

**வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியின் மறைய பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்! மையோ மரகதமோ மறி கடலோ மழை முகிலோ ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்!**

அதாவது, சூரியனது ஒளிக் கதிரானது மேனியில் வெளிப்படும் சோதியுடன் இணைந்து கொள்ள, இருக்கின்றதோ, இல்லையோ என்று சொல்லும் படியான சிறிய இடையினைக் கொண்ட சீதையுடனும், இளையவனாகிய இலக்குவணனுடன் வனத்திலே செல்கின்றான். மையோ, அல்லது மரகதமோ, அலைகளையுடைய கடலோ, கரிய மழை முகிலோ, ஐயோ, இவனது அழகு என்பது அழியாத தன்மை கொண்டதாக விளங்குகின்றது என்கின்றார் கம்பர்.


இப்பாடலில் வெளிப்படும் சிறப்பினையும், நயத்தினையும் இங்கு காண்புறுவோம். இராமன் திருமேனியில் இருந்து வெளிப்பட்ட ஒளியானது சூரியனின் ஒளிக்கதிரையும் மங்கச் செய்து விடுகின்றது. மேலும், இராமனின் திருமேனி அழகினை வர்ணிப்பதற்கு கம்பனே வார்த்தைகளை தேடுகின்றான். ஒவ்வொன்றாக சொல்லுகின்றார். மையோ, மையின் நிறமோ? என்றால் அது இல்லை. பின் மரகதமோ என்கின்றான். அதன் நிறமும் இல்லை. பின் மறிகடலோ, என்கின்றான். அதிலும் திருப்தியில்லை. மழை முகிலோ என்கின்றான். மழை முகில் போன்றவனோ, ஆனால் அதிலும் நிறைவு இல்லை கம்பருக்கு. இறுதியில் ஐயோ, எனச் சொல்லியே விடுகின்றார் கம்பர்.

இவன் அழகு என்ன அழகு. அவ் அழகினை வர்ணிப்பதற்கு எத்தனை வார்த்தைகள் கோர்த்தாலும் இணையாகவில்லை என்கின்ற ஆதங்கம் கம்பருக்கு. ஏனெனில் என்றும் அழிவில்லாத அழகாக இருக்கின்றதே இராமன் திருமேனி அழகு என ஒருவாறு நிறைவு கொள்கின்றார் கம்பர். இத்துடன், இராமபிரான் திருமேனி நிறத்தை பொதுவாக கருமை நிறம் படைத்தது என்கின்றார் கம்பர். இதனை,

**துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணலோடு**

எனக் காட்டுகின்றார். அதாவது, பளவத்தை கொண்ட வலிமையான கடலின் நீரை மிகுதியாக சுமந்து கருக் கொண்ட கரிய மழை மேகத்தை போன்றவன் இராமன் என்கின்றார் கம்பர். மழை மேகம் பொதுவாக கருமை நிறம் கொண்டது. அதன் நிறத்தினை இராமன் மேனியின் நிறத்திற்கு உவமை செய்கின்றார் கம்பர். மேலும், மற்றொரு இடத்தில், மை போன்ற கருமையான நிறம் படைத்தவன் இராமபிரான் என்கின்றார் கம்பர்.


கட்டுரையாக்கம்
(இரா. நிஷாந்தன் ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் ம. வி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கவிஞர் முல்லைதிவ்வியனின் முல்லை நிலமும் நந்திக்கடலும் நூல் வெளியீடு அண்மையில் பொலிகண்டி கடற்கரையோரத்தில் இடம்பெற்றது. அரசியல் பிரமுகர்கள் மூத்த கலைஞர்கள், கவிஞர்கள், படைப்பாளிகள், கல்வியாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். வரலாற்றில் மறக்கமுடியாத பெயரான முல்லைநிலத்தினையும் நந்திக்கடலையும் தலைப்பாக கொண்ட இந்நூல் வரலாற்றின் பதிவாகவும் மாறும் என்பதில் ஐயமில்லை. சமூகப் பார்வையும் சீரிய சிந்தனைகளும் கொண்ட முல்லை திவ்வியனின் எழுத்துப்பயணம் மேலும் சிறந்தோங்க ஒளிஅரசியின் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.


# பிறந்தநாள் வாழ்த்து



ர.பவிசானன்
24.03.2018
கொடிகாமம்



து. பிருதுவி
20.04.2018
தருமபுரம்



ரா.நேரிஜன்
10.04.2018
கரவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த குடும்ப சஞ்சிகை
# ஒளி அரசி
மங்கையரின் தோழி

**வெளியீட்டாளர்** மாஸ்மீடியா சேவிஸ்
இல. 70, டேவிட்சன் றோட், கொழும்பு - 04

**ஆசிரியர்கள்**

பிரதம ஆசிரியர் : திருமதி யசோதை சரவணபவன்
ஆசிரியர் : திரு. இ. ஜனதன்
இணை ஆசிரியர் : திருமதி பா. ஜயிலா

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| திரு. ச. லலீசன் | அச்சுவேலி |
| நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் | கொழும்பு |
| திருமதி தேவா மாதவன் | கொழும்பு |
| இரா. நிசாந்தன் | வட்டக்கச்சி |
| ஸகீட். எச். சப்றின் | மருதமுனை |
| கவிஞர் பிறேம்ராஜ் | கொழும்பு |
| திருமதி சூர்யா சிவரூபன் | வட்டுக்கோட்டை |
| எஸ். எல். மன்சூர் | அட்டாளைச்சேனை |
| செல்வி பாலாஜினி | பளை |
| திருமதி சுமித்ரா ராகவன் | கிளிநொச்சி |
| து.திலக் (கிரி) | சுவிஸ் |
| வே. முல்லைத்தீபன் | ஒட்டுசுட்டான் |
| காரை. எம். பி. அருளானந்தம் | யாழ்ப்பாணம் |
| இ.அன்ரன் இருதயகுமாரன் | நெல்லியடி |

**ஆலோசகர்கள்**

திருமதி. கோகிலா மகேந்திரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், பிரபல எழுத்தாளர்)
திரு. த. ஜெயசீலன் (கவிஞர், மாநகர சபை ஆணையாளர்)
திரு. எஸ். செல்வராஜா (ஓய்வுநிலை மாகாண கல்விப்பணிப்பாளர்)
திரு. எஸ். மகேஸ் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி சிவமலர் சுந்தரபாரதி (அதிபர்)
மைமூனா அகமட் (ஓய்வுபெற்ற நீதியரசர்)
திரு. சி. நற்குணலிங்கம் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் (சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர்)
திரு. ஏ. ஜெயக்குமார் (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. எஸ்.சரவணபாவானந்தன் (கோட்டக்கல்வி அதிகாரி )
திரு. ஏ.ஜே.ஞானேந்திரன் (சிரேஸ்ட எழுத்தாளர் - சுவிஸ்)
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் (ஊடகவியளாலர்)

**சட்டஆலோசகர் :** திரு. ரட்ணம் ரகுராஜா

**தபால் முகவரி**

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**தொடர்புகளுக்கு :**

தொலைபேசி : 0114320695
துரித அழைப்பு : 0718628369,0714273035
தொலைநகல் : 0112506610
E-mail : oliarazi33@gmail.com
Viber - 0714273035

**இதழ் வடிவமைப்பு**

எஸ்.மகாவிஷ்ணு
எம்.ஜீவநீதன்

பிரதம ஆசிரியரின்
உள்ளத்திலிருந்து

# இன்பங்கள் இனிமையாய் பூப்பதில்லை.

**அனைத்து வாசக நெஞ்சங்களுக்கும் ஒளிஅரசியின் சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.**

இன்பமும் துன்பமும் வாழ்வின் இரு சக்கரங்கள். அவை ஒன்றுக்கொன்று சமனானவை. வாழ்வியல் இயக்கத்திற்கு பெரும் பங்காற்றுபவை. இன்பங்களை சுகிப்பதும் துன்பங்களை வெறுப்பதும் மனித இயல்பு. ஆனால் நாம் ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். இன்பங்கள் மனதிற்கு எவ்வளவு மகிழ்வு தருகின்றதோ அதே போன்று துன்பங்களும் அனுபவம் என்னும் பாடத்தை தருகின்றது. அனுபவம் என்ற பாடமே வாழ்க்கையை வெற்றிகொள்ள உதவுகின்றது. துன்பங்களில் வரும் அனுபவத்தைக்கொண்டு சிந்தனைகளைச் செம்மைப்படுத்தவும் சரியான முறையில் திட்டமிடவும் முடியும். சட்டெனக் கிடைக்கும் இன்பம் நின்று நிலைப்பதில்லை. போராடி அடையும் வெற்றியில் தான் முழுமை கிடைக்கின்றது.

செல்வச் சீமாட்டியாய் வாழ்ந்தவர் புளோறன்ஸ் நைற்றிங்கேல். அவர் இன்பங்களைத் தேடியது பணத்திலோ பொருளிலோ அல்ல. மற்றவர் மீது காட்டும் அன்பில், தான் காட்டும் இரக்கத்தில். விளக்கேந்திய பெருமாட்டி என்ற மாறாத நாமத்துடன் நாம் பார்க்கும் அவர், தன் வாழ்வில் தாண்டிய துன்பங்கள் ஏராளம். ஒரு சீமாட்டியாய் வாழ்ந்தவர் களமுனையில் வீரர்களின் துன்பங்களுடன் போராடி தன்னையும் வதைத்துக்கொண்டார். அந்த துயரத்தில்தான் அவர் இன்பத்தைக் கண்டார். அதனாலேயே தாதியச் சேவையின் தாயாய் போற்றப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரதம ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

அரிச்சந்திரன் கதையை அறிவோமல்லவா. நாடு நகரிழந்து மனைவி பிள்ளைகளை இழந்து சுடலைக் காப்போனாய் தன் சுயத்தை இழந்து நின்றபோதும் தனது உண்மைத் தன்மையைக் காப்பதற்காய் போராடி சொல்லொணாத துன்பங்களை அனுபவித்து ஆண்டுகள் பல கடந்தே அரசுரிமையையும் மனைவி மகனையும் மீட்டுக்கொள்கின்றார். அவ்வாறு துன்பங்களைத் தாங்கியதால் தான் அவரை உலகம் இன்னும் நினைத்துக்கொள்கிறது.

உதாரணமாக ஒரு சம்பவத்தை கூறலாம். மிகுந்த வறுமையில் உழன்ற ஒரு குடும்பம், அன்றாட உணவிற்கே அல்லல்பட்டவர்கள், மாற்றி அணியும் ஆடைக்கு கூட வழியற்று நின்றவர்கள், இன்று கோடீஸ்வரர் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர் என்றால் அது சாதாரண விடயமா? அந்த வீட்டின் மூத்தமகன் மிகுந்த வறுமையிலும் பாடுபட்டு படித்தான். வீட்டுக்கூரை வானத்தின் அத்தனை விம்பங்களையும் காட்டும் அளவிற்கு எக்கச்சக்கமாய் ஓட்டைகளைக் கொண்டிருந்தது. கடுங்குளிரிலும் அதனைப் பொருட்படுத்தாது கல்வியில் நாட்டம் கொண்டிருந்தான். தனக்கு உடல் குளிர்வதையே அவன் விரும்பினான். அப்போதுதான் நித்திரை வராது, அவ்வேளையையும் படிப்பிற்கு செலவழிக்கலாம் என எண்ணினான். சுகங்களோ சந்தோசங்களோ இல்லாமல் கல்விகற்ற அவன் பிற்காலத்தில் முகாமைத்துவ அதிகாரியாகி ஒரு மிகப்பெரிய கம்பனியின் முதலாளியானான். இன்று ஐநூறுக்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் அவனது இளமைக்காலம் எத்தகைய துன்பம் நிறைந்தது என்று பார்த்தீர்களா?

இன்பங்கள் ஒருபோதும் இனிமையாய் பூப்பதில்லை என்ற உண்மையை உணர்ந்தால் துன்பங்களால் துவண்டுபோகாமல் வாழ்க்கையை போராடி வெல்லமுடியும்.

பிரதம ஆசிரியர் ✍

**இம்மாத சிந்தனைக்கு:**

**பொதுமறையில் இருந்து.** **அதிகாரம் : 1** **குறள் : 6**

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்**

**எடுத்துக்காட்டு**

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளின் வழி பிறக்கும் தீய ஆசைகளை அழித்து கடவுளின் பொய்யற்ற ஒழுக்க வழியிலே நின்றவர் நெடுங்காலம் வாழ்வார்


## ஒளிஅரசி சந்தா விபரம்

## அன்பு வாசகர்களே!

ஒளிஅரசியை உங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ள வேண்டுமா? கீழுள்ள வங்கி கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பிட்டு வைப்புத்துண்டு, தொலைபேசி இல, தபால் முகவரி என்பவற்றை தெளிவாக எழுதி ஒளிஅரசியின் கடிததொடர்பு முகவரிக்கோ அல்லது 071 4273035 என்ற வைபர் இலக்கத்திற்கோ அனுப்பவும்.

| | |
|---|---|
| **கட்டணத்தொகை** | **உள்நாடு - ரூ. 1000.00** |
| **வங்கியின் பெயர்** | **ஹற்றன் நஷனல் வங்கி.** |
| **வைப்பிடவேண்டிய பெயர்** | mass media services |
| **வங்கி கணக்கு இலக்கம்** | **009010383405** |

**வெளிநாடு 40$**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கதி தெரியுமோ?

என்னடி சின்னக்கிளி
எங்கயடி திரியிறாய்
ஏதேனும் புதினம் வைச்சிருந்தா
இருந்த எடுத்து விடண்டி..

உன்னாணை சொல்லுறன்
உதுக்கு இப்ப நேரம் இல்லை,
இருக்குத்தான் ஒருகதை
இருந்தாலும் பிறகு வாறன்

உந்த கதையை விட்டுட்டு
உதில கொஞ்சம் குந்துறியே,
வந்த விசயத்தை
சொல்லிப்போட்டு போறியே...

ஐயோ மாமி அவர் வந்தா
கொல்லுவார்
உதுக்குத்தான் நான்
இந்தப் பக்கம் வாறதில்ல

சும்மா கெப்பர் விடாமல்
கேள்விப்பட்டத சொல்லிட்டு போ,

உனக்கு சொன்னால் என்ன
ஊருக்கே சொன்னால் என்ன
சொல்லி போகமுன்
உளறிக்கொட்டுவியே,

ஐயோ சின்னக்கிளி
அதுவெல்லம் ஒருகாலம்
இப்ப எல்லாம் நான்
இருக்குமிடம் தெரியாது ..

மலிஞ்சால் சந்தக்கு
வந்து தானே ஆகவேணும்
அதுக்கு முன்னால நான்
சொன்னத சொல்லிடாத
சத்தியமா சொல்லமாட்டன்
சந்தேக படாம சொல்லுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராசன்ர பொட்டைக்கு
வரன் எல்லோ பாக்கினம்
நேத்து காத்தால
நேர வந்து பாத்தவயாம்...
வெளிநாட்டில மாப்பிளையாம்
சீதனம் வேண்டாமாம்
சரியான உழைப்பாம்
பொறுப்பான பொடியனாம்
எடுக்கிற சப்பளம் எல்லாம்
வங்கியில சேமிப்பாம்
சொந்த விடு வாங்க
ஓடித் திரியிறானாம்

நல்ல பொடியன் எண்டு
நாலுபேர் சொல்லினமாம்
அட சின்ராசனுக்கு
சின்னனிலே தெரியுமாம்
அதவிட நர்ராயர் வீட்டுக்கு
நாலாவது தெருவாம்
செல்லம்மாக் கிழவிக்கு
நெருங்கிய சொந்தமாம்
ஐயோ உந்த கோவிந்தனோட
கூட படிச்சவனாம்

என்ன தலையில கொஞ்சம்
மயிர் இல்லையாம்
ஆள் கொஞ்சம் கறுப்பாம்
இருந்தாலும் நல்ல வடிவாம்
வீடும் வேலையெண்டு
வித்தியாசமான பொடியனாம்
தானும் தன்பாடும் என்று
தன்பாட்டிலே இருப்பானாம்
பொட்டைக்கு சொன்னதும்
பொல்லாத விருப்பமாம்


அப்புறம் என்ன
நல்ல விடயம் தானே
சட்டுப் பொட்டெண்டு
பேசி முடிக்கவேண்டியது தானே
ஆறப் போடாமல்
அலுவல பாக்கசொல்லு
அதிஷ்டம் அடிச்சிருக்கு
அப்படியே அப்ப சொல்லு

அண போண நீ கிடந்த
உதெல்லாம் நம்பித்தான்
கிறகம் பிடிச்சதுகள்
கிறு கிறுகெண்டு
ஊரெல்லாம் சொல்லிச்சினம்
உதுக்கு பிறகுதான்
கதையே இருக்குதண...

அங்க விசாரித்ததில
அதுவொண்டும் இல்லையாம்
ஆக்களோட சேந்து
நல்ல குடியாம்
அலம்பல் கேசாம்
ஊரெல்லாம் கடனாம்
உருப்படியான
வேலை இல்லையாம்
வயித்துக்குள்ள புண்ணாம்
வாய்திறந்தால் பொய்யாம்
ஊருக்குள்ள தலைகாட்டாமல்
ஒளிச்சு திரியிறானாம்

கோதாரிவிழ உப்புடியும்
நடக்கொதோடி
பாவம் பொட்டை
ஒருமாதிரி தப்பிட்டாள்
அந்த நாச்சிமார் ஆச்சிதாண்டி
பொட்டயை காத்திருக்கு
உப்புடிதான் சிலது
உதவாமல் போகுதுகள்..

நல்லா சொன்னாயண
நான் கிளம்ப போறனண
இனிமேலாவது
இருக்கிறத விட்டுட்டு
பறக்குறதுக்கு ஆசைப்படாதேங்கோ
சரி நான் போட்டு வாறனண
மாமாவையும் கேட்டத சொல்லண.



கண்ணன்
கண்ணராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வார்த்தைகளை வடிகட்டுங்கள்

உலகப்பந்தில் உன்னதமாய் படைக்கப்பட்டவர்கள் மனிதர்கள். பகுத்தறிந்து வாழும் பக்குவம் மனிதர்களுக்கே உண்டு. அதாவது ஆறாம் அறிவைக்கொண்டிருக்கும் மனிதர் சகல விடயங்களிலும் சிந்தித்து செயலாற்றுதலே அவ்அறிவைப் பெற்றதன் பொருளாகும். ஆனாலும் நாம் சில வேளைகளில் அதற்கான பக்குவத்தினை இழந்துவிடுகின்றோம். அதாவது கோபம் வந்ததும் என்ன செய்கின்றோம்? எப்படி நடந்துகொள்கின்றோம் எனப்புரியாது வார்த்தைகளில் விஷத்தை கொட்டிவிடுகின்றோம்.

சிறிது நேரத்தில் கோபம் தணிந்ததும் நடந்ததை எண்ணி வருந்தவே செய்கின்றோம். ஆனாலும் கொட்டிவிட்ட வார்த்தைகளை அள்ள முடியாதே. கேட்டவர் உள்ளத்தில் கால வடுவாய் அவ்வார்த்தை பதிந்துவிடுகின்றது.

அன்றாட வாழ்வில் நாம் பேசுகின்ற ஒரு வார்த்தை கூட மற்றொருவரை உயர்ந்தவனாகவும், தாழ்ந்தவனாகவும் மாற்றும் அளவுக்கு வீரியம் கொண்டது என்பதை அறியாமல் மிக அநேகமானோர் சர்வ சாதாரணமாக வார்த்தைகளைக் கொட்டிவிட்டு பிறகு ஏன் இதைச் சொன்னேன் என வருத்தப்படுகின்றனர். இவ்வுலகத்திலே மனிதனுக்கு மட்டுமே உரித்தான தொடர்பாடல் நுட்பமான பேச்சானது இன்று மற்றவர்களைப் பற்றி அலசுகின்ற ஊடகமாகவே உள்ளது எனச்சொல்லுமளவுக்கு இன்றைய மனிதநாவுகள் மற்றவனை ஒரு வார்த்தையால் அப்படியே மறுபக்கம் மாற்றிவிடுகின்றது. இதனை இன்னும் சற்று ஆழமாக நோக்குவோம்.

'இவன் ஒரு சர்வதிகாரி' என ஒருவன் ஒரு நாட்டுத் தலைவனைப் பற்றிக் கூறும் போது அதை நம்புகின்ற ஒரு சாரார் சமூகத்தில் இருப்பர். ஆனால் உண்மையில் அந்த தலைவர் நல்லவராகவும், சமூகநலன் விரும்பியாகவும் இருக்கக்கூடும். தவறாகப் பேசியவனுக்கு தலைவரைப் பற்றியோ, அவரின் பின்னணி பற்றியோ யாதும் தெரியாது. ஆனால் சர்வசாதாரணமாக சர்வதிகாரி எனக் கூறி அவரை ஒரு மோசமானவராக அடையாளப்படுத்தி விடுகின்றான்.

'அந்த டொக்டருக்கு பணம் சம்பாதிப்பது தான் நோக்கம்' பல்கலையும் கற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வைத்தியராக வந்த ஒருவரைப் பார்த்து இவ்வாறு கூறும்போது அச்சமூகத்தில் அவருக்கு என்ன பெயர் கிடைக்கும்? உண்மையில் அவர் சேவை செய்தாலும் மக்கள் அவரை ஏற்றுக்கொள்வார்களா?

'இந்த ஆசிரியர் கள்ளத்தனம் காட்டுபவர்' என பாடசாலையில் படிக்காத, சமூக அக்கறையற்ற ஒருவர் கூறும் போது இக்கருத்தின் பால் கவரப்படக்கூடியவர்களும் இருக்கத்தானே செய்வர்.

'இவன் சரியான குழப்பவாதி' என ஒரு ஆசிரியர் மாணவனொருவனை பார்த்துச் சொல்லும்போது அந்த மாணவன் குழப்பம் செய்கின்றவர்களுடன் இருந்திருந்தால் அவனின் மனோநிலை எவ்வாறு இருக்கும்.

'நீ எப்போதும் பொய் தான் சொல்கிறாய்' என தந்தை மகனைப் பார்த்துச் சொல்லும் போது உண்மையில் மகன் பொய்யை வெறுப்பவனாக இருப்பான். ஆனால் தந்தையோ வெறுப்பால், கோபத்தால் இவ்வாறு சொல்லிவிடும் போது மகனின் உள்ளத்திற்கு ஒத்தடம் கொடுப்பது யார்?

'உன்னைப்பற்றி எனக்கு தெரியாதா? சுயநலவாதியே!' என ஒரு நண்பன் இன்னொரு நண்பனுக்கு கூறும் போது கூறப்பட்டவன் உண்மையான அன்புக்காக வாழ்பவனாக இருந்தால் உயர் மட்டம் முதல் சாதாரண மட்டம் வரை அனைவராலும் பின்விளைவுகள் பற்றி சிந்திக்காமல் பேசப்படுகின்ற வார்த்தைகளையே மேற்கூறப்பட்ட உதாரணங்கள் சொல்லுகின்றன. இவ்வுதாரணங்கள் எம்மைச்சூழ அன்றாடம் நிகழ்பவையாகும். இவற்றை ஒரு பொருட்டாகவே

**நம் வாழ்வு நாம் வாழவே, பிறரைப் பற்றிப் பேசி எம் வாழ்க்கைப் பக்கங்களை கசக்கிக்கொள்ளாமல் ஒரு வார்த்தையேனும் பார்த்து பக்குவமாக பேசும் போது வாழ்வை மென்மேலும் சுவைமிக்கதாக மாற்றமுடியும்.**

எடுக்காமல் வாழப்பழகிவிட்டது தான் கவலைக்குரிய விடயமாகும்.

நாம் பிறர் பற்றி ஆழமாக அறியாமல் வெறும் வாய் வார்த்தைகளால் தவறான சான்றிதழை அடுத்தவருக்கு வழங்கிவிடுகின்றோம் எனின் எமது சிந்தனை எந்தளவுக்கு கேவலமாக உள்ளது என்பதை சிந்திக்க கடமைப்பட்டு உள்ளோம். மறுபுறம் ஒருவன் மோசமானவனாக, கெட்டவார்த்தை பேசக்கூடியவனாக, பொய்யனாக, துரோகம் செய்பவனாக இருப்பான் ஆனால் அவனுக்கோ நல்லவன், உண்மை பேசுபவன், நீதியாளன் என்றெல்லாம் நற்சான்றிதழ் அளித்துவிடுகின்றோம்.



அவனைப் பற்றி ஆழமாக அறியாமல் அவனின் பாசாங்கான நடத்தையை வைத்தே நாம் இவ்வாறு முடிவெடுக்கிறோம்.

நாம் ஒருவனை நல்லவன் என்றோ, கெட்டவன் என்றோ கூற வேண்டுமானால் அவனைப்பற்றி முழுமையாக அறியவேண்டும் என்பதை மனதில் பதியுங்கள். ஏனெனில் அவ்வாறு கூறும் போது அவன் கூறப்படுவதற்கு எதிராக இருக்கும் பட்சத்தில் அவனை நம்புகின்ற அல்லது வெறுக்கின்ற அனைவரின் பாவத்தையும் கூறியவரே சுமக்கவேண்டிய நிலை ஏற்படும். ஏனென்றால் நாம் இல்லாததை இருப்பதாகவும், இருப்பதை இல்லை என்றும் இட்டுக் கட்டி கூறியிருக்கிறோம். அவ்வாறு நாம் கூறிய கெட்டபண்பு அவரிடம் இருக்கும் பட்சத்தில் அவரின் அனுமதியின்றி அவரைப் பற்றிப் பேசிய குற்றத்திற்கு ஆளாகநேரிடும். சுருங்கக்கூறின், பிறரை பற்றிப் பேசுவதே தவறாகும்.

ஆகவே, வெறும் வார்த்தைகளால் ஒருவனை நல்லவனாக, கெட்டவனாக மாற்றியமைக்கின்ற இந்தக் கொடிய நோயிலிருந்து நாம் ஒவ்வொருவரும் தப்பித்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடின் நமக்கு சான்றிதழ் வழங்க ஒருவன் இருக்கிறான், என்பதை நினைவில் வையுங்கள்.

மருதமுனையான்
இப்னுஅபுல் மாஸ்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனைவி அமைவதெல்லாம்

படைப்புகள் பெருகிவரும் இக்காலத்தில் கவிஞர்களும் படைப்பாளர்களும் உதித்தவண்ணமே உள்ளனர். கவிமணி நஜ்முல் ஹுசைன் என்ற பெயர் கவி உலகிற்கு நன்கு பிரபலமான பெயராகும். இவர் நாடறிந்த நற்கவிஞர் மட்டுமல்ல சர்வதேசமும் அறிந்த கவிஞர்.



மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு கவியரங்கில் பல நாட்டின் கவிஞர்களுடன் கவி பாடி இலங்கைக்கு பெருமை சேர்த்தவர். இன்றும் நஜ்முல் ஹுசைன் கவி பாடாத மேடைகளே இல்லை எனலாம். கவிதையையே தனது வாழ்க்கையாக்கிக் கொண்டிருக்கும் இவர் இலங்கையின் கவிப்பிரியர்களுக்கு இலக்கியப் பிரியர்களுக்கு தனது இரண்டு கவிதை நூல்களை தரவிருக்கிறார் என்ற இனிப்பான செய்தியறிந்து 'ஒளி அரசி'யின் சார்பில் அவரை அணுகினோம்.

கவிமணி நஜ்முல் ஹுசைனின் துணைவியார் கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைனும் எமது ஒளி அரசி குடும்பத்தைச் சேர்ந்தவர். எமது ஆசிரியர் பீட ஆலோசகர்களில் அவரும் ஒருவர். எனவே அன்னாரின் நேர்காணல் ஒன்றை பிரசுரிப்பதில் ஒளி அரசியும் மகுடம் சூடிக்கொள்கிறது.

கொழும்பு 12, பீர் சாஹிபு வீதியைப் பிறப்பிடமாக கொண்ட இவர் கல்வி கற்றது ஹமீத் அல் ஹுசைனி மகா வித்தியாலயத்தில். இவரது தந்தை கே.கே.எம். மொஹிதீன், ஒரு தந்தையாக மட்டுமல்ல நல்ல நண்பராகவும் திகழ்ந்து தன்னை வளர்த்தெடுத்ததோடு எனக்கு மட்டுமல்ல எனது நண்பர்கள் எல்லோருக்கும் நல்ல நண்பராக இருந்தார் எனவும் கூறுகின்றார். தாயார் சித்தி செளதா உம்மா. இரண்டு சகோதரர்கள், ஒரு சகோதரி . மனைவி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன். ஒரேயொரு மகள் சட்டத்தரணி திருமதி நூருஸ் ஷப்னா சிராஜுதீன். சிறிது காலம் தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களத்தில் தமிழ் பிரிவில் பணிபுரிந்தவர் அதன் பின்னர் 'சூட்டர்ஸ்' எனும் தனியார் நிறுவனத்தில் முகாமையாளராக 1979 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பணியாற்றுகின்றார்.

சிறு வயது முதல் இருந்த வாசிப்பு பழக்கத்தினால் நிறைய சிறுவர் சஞ்சிகைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY




வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. நன்கு ஓவியம் வரையத் தெரிந்த எனது சிறுவயது நண்பரான ஜயதிஸ்ஸ பெரேரா 'சுஜாதா' (1967) என்ற சிங்கள தமிழ் கையெழுத்து சஞ்சிகையை ஆரம்பித்து என்னை தமிழ் பகுதி ஆசிரியராக்கினான். அதுமட்டுமன்றி காலஞ்சென்ற அனீஸ் அஷ்ரப். அவரோடிருந்த நட்பும் அவர் தந்த உற்சாகமும் அதுபோன்றே அவரது சகோதரர் எனது நண்பர் நயீம் அஸ்ரப் வழங்கிய ஒத்துழைப்பும் என்னை எழுதத் தூண்டியது. எனது ஆக்கத்தினை தமிழகத்தின் 'குமுதம்' சஞ்சிகைக்கு அனுப்பி வைத்தவரும் அவர்தான்.

கவிதை எழுதுவதும் வாசிப்பும் எனக்கு கரும்பு போல இனிப்பவை. எழுதியவற்றை பத்திரிகைகளில் பிரசுரித்துத் தரும் பொறுப்பை எனது அன்பு நண்பர் எம். எஸ். எம். ஜின்னா ஏற்றுக் கொண்டார். 1981ல் வலம்புரி கவிதா வட்டத்தில் கவியரங்கில் இணைந்து கொண்டேன். அது எனக்கு புதுக்கவிதையிலும், மேடைகளில் கவிதை வாசிப்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. எழுத ஆரம்பித்த காலத்திலேயே சிறுகதைகளையும் எழுத ஆரம்பித்து விட்டேன். அவை கையெழுத்துப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. வானொலியிலும் ஒலிபரப்பாகியுள்ளன. ஆனால் அக் கதைகளை நான் பத்திரப்படுத்தி வைக்கவில்லை. பிறகு 'தினகரன் வாரமஞ்சரி' 'செந்தூரம்', 'விடிவெள்ளி', 'ஞானம்' போன்றவற்றில் எனது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. எனது சிறுகதை தொகுதி ஒன்றை வெளியிடும் ஆசையும் எனக்குண்டு.

எனது தந்தை சுவையாகக் கதைக்கக் கூடியவர். அவர் அடிக்கடி பழம் பெரும் கவிதைகளையெல்லாம் தனது பேச்சுக்கிடையில் கூறுவார். அவை எனக்கும் இலக்கியத்தில் ஈடுபாட்டை கொண்டு வந்தது எனலாம். அத்துடன் சிறுவயதில் தமிழகத்திலிருந்து வெளிவந்த 'கண்ணன்' போன்ற சஞ்சிகைகளுடன் அதிக ஈடுபாடு இருந்தது. அது தமிழிலே ஒரு பிடிப்பை ஏற்படுத்தியது. பாடசாலை காலங்களில் பொது நூலகத்தோடு ஏற்பட்ட தொடர்பு பல இலக்கிய நூல்களை பரிச்சயம் ஆக்கியது. பிற்காலத்தில் க.பொ.த. படிக்கும் போது இலக்கியத்தில் ஈடுபாடு ஏற்படலாயிற்று. ஆனாலும் அதற்கு முன்பே கவிதை என்றால் என்ன என்று தெரியாதபோதே எனது கொப்பி புத்தக உள் அட்டையில் நான் கவிதை என்று நினைத்தவற்றை நிறைய எழுதியிருக்கிறேன். எனது மனைவியும் இலக்கிய உலகுடன் நெருங்கிய தொடர்புடையவர். பத்திரிகையாளர். எழுத்தாளர். கவிஞர். எனது மகளும் கவிதையிலே ஆர்வமுள்ளவள். சட்டத்தரணி. சட்டக்கல்லூரியில் கவிதைக்காக தங்கப்பதக்கம் பெற்றவர். ஆகவே அவர்களது உற்சாகமும் நான் தங்கு தடையின்றி எழுதக் காரணமாயிருக்கிறது.

வகவத்தின் செயற்பாடுகள் குறித்து கூறுங்களேன் என்ற போது 2013 இல் மீள ஆரம்பிக்கப்பட்டதும் நான் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன். நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் மூத்த கவிஞர்கள், இளங் கவிஞர்கள், கவிதை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொள்கின்றனர். காத்திரமான கவிதைகள் எழுதுவது பற்றிய அறிவினையும், மேடைகளில் கவிதை வாசிக்கும் பயிற்சியையும் இந்த கவியரங்கினூடாக அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் என்றார்.

சிறு வயதிலேயே இலங்கை வானொலியில் காலடியெடுத்து வைத்து சிறுவர் நிகழ்ச்சி, இளைஞர் நிகழ்ச்சி ஆகியவற்றில் குரல் கொடுத்துள்ளார். முஸ்லிம் சேவையில் 'இஸ்லாமிய சமய பாடசாலை' நிகழ்ச்சியில் தொடங்கி பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி 'இளைஞர் இதயம்' நிகழ்ச்சியை சுமார் இரண்டு வருட காலமாக நடாத்தி வந்தார்.


நேத்ரா தொலைக்காட்சியில் கவியரங்கங்களில் அடிக்கடி பங்கு கொண்டதுன் வசந்தம், சக்தி, உதயம் ஆகிய தொலைக்காட்சிகளிலும் பங்கு பற்றியுள்ளார். கவியரங்குகளிற்கு தலைமை தாங்கியும் உள்ளார். தொலைக்காட்சிக்காக இவர் எழுதிய பல பாடல்கள் இலங்கையின் பிரபல்யமான பாடகர்களான நூர்ஜஹான் மர்சூக், கலைக்கமல், டோனி ஹசன், அமீர்கான்,மொயினா பேகம் மரியம் நாமிஸ் உட்பட மற்றும் பல பாடகர்களால் பாடப்பட்டு ஒளிபரப்பாகி வருகின்றன.

அரச விருதான கலாபூஷணம் இன நல்லுறவு ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட 'கவிமணி,' என்ற பட்டம், இலங்கையில் நடைபெற்ற 2012 இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் 'படைப்பாளர் விருது' மலேசியாவில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கிடைத்த விருது போன்றவற்றின் சொந்தக்காரர்.

1992 ல் 'பனித்தீ' எனும் கவிதை நூலினை வெளியிட்ட இவர் அதன் பின்னர் நீண்ட இடைவெளிக்குப்பிறகுதான் தனது இரண்டாவது நூலான 'இனிவரும் நாட்களெல்லாம்...' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட உள்ளார். இதில் ஒரு அதிசயம் என்னவெனில், துணைவியார், அவருக்குத் தெரியாமலேயே பலரது நூல் வெளியீட்டு விழாக்களில் இவர் வாசித்த வாழ்த்துக்கவிதைகளையும் மறைந்த சிலருக்காகப் பாடிய இரங்கல் கவிதைகளையும் பத்திரப்படுத்திவைத்து அவற்றை 'நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள்' என்ற பெயரில் அதே நாளில் வெளியிட ஏற்பாடுசெய்து தனது துணைவருக்கு சிறப்பு பரிசினை கொடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கவியரசு கண்ணதாசனின் உபதேசங்கள்

அனுபவத்தைப்போல ஒரு பாடம் எதுவுமே இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. காலத்தால் என்றுமே மறக்க முடியாத மனிதராக உள்ளவர் கவியரசு கண்ணதாசன். அவர் தனது அனுபவங்களை அர்த்த முள்ள இந்துமதம் என்ற ஏட்டின் மூலம் உலகிற்கு பகிர்ந்தளித் திருந்தார். அவரது பகிர்வின் ஒரு துளி எமது வாசகர்களுக்காக.

✱ படிக்கும்போது, ஒரு இளைஞனுக்கு எல்லாமே வேடிக்கையாகத் தெரிகிறது.

✱கல்யாணமாகிக் குழந்தை குட்டிக ளோடு அவன் வாழ்க்கை நடத்தும்போது, ஒவ்வொரு வேடிக்கைக்குள்ளும் வேதனை இருப்பது அவனுக்குப் புரிகிறது.

✱இளமைக் காலத்து ஆரவாரம், முதுமை அடைய அடைய குறைந்து வருகிறது.

✱ஒவ்வொரு துறையிலும், நிதானம் வரு கிறது.

✱இளம் பருவத்தில் இறைவனைப் பற்றிய சிந்தனை அர்த்த புஷ்டியற்றதாகத் தோன்றும்.

✱வாழ்வில் அடிபட்டு வெந்து, நொந்து ஆண்டவனைச் சரணடைய வரும்போது, அவனது மாபெரும் இயக்கம் ஒன்று பூமி யில் நடைபெறுவது புத்தியில் படும்.

✱ பக்குவமற்றவனுக்கு நாத்திகம், அரா ஜகம் எல்லாமே குஷியான தத்துவங்கள்.

✱பக்குவம் வர வர, ரத்தம் வற்ற வற்ற இந்தத் தத்துவங்கள் எல்லாம் மறுபரிசீலனைக்கு வரும்.

✱நடைமுறைக்கு ஒத்த சிந்தனை, பக்கு வப்பட்ட பிறகே தோன்றும்.

✱இருபது வயது இளைஞனை, பெண் பார்க்கச்சொன்னால் எல்லாப் பெண்களுமே அவன் கண்களுக்கு அழகாய்த்தான் தெரிவார் கள்.

✱நாற்பது வயதிற்கு மேலேதான், நல்ல பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் தெளிவு அவ னுக்கு வரும்.

✱கல்லூரி மாணவனைப் படிக்கச் சொன்னால் காதல் கதையையும், மர்மக் கதையையும் படிப்பதில்தான் அவன் கவ னம் செலுத்துவான்.

✱காதலித்துத் தோற்றபின்தான், அவனுக் குப் பகவத் கீதையைப் படிக்கும் எண்ணம் வரும்.

✱விளையாட்டுத்தனமான மனோபாவம் பிடிவாதத்திற்குப் பெயர் போனது.

✱எதையும் சுலபத்தில் ஏற்றுக்கொண்டு அதைவிட உலகமே கிடையாது என்று வாதாடும்.

✱எதிர்த்தால் வேரோடு பிடுங்க முயலும்.

✱பக்குவமற்ற நிலை என்பது இரண்டு சூஎக்ஸ்ட்ரீம் நிலை.

✱ஒன்று, இந்த மூலையில் நின்று குதிக் கும், அல்லது அந்த மூலையில் இருந்து குதிக்கும்.

✱பக்குவ நிலைக்குப் பெயரே நடு நிலை. மேலை நாட்டில் ஒரு பழமொழி உண்டு.

✱இருபது வயதிற்குள் ஒருவன் கம்யூ னிஸ்ட் ஆகவில்லை என்றால் அவன் அப்பாவி முப்பது வயதிற்கு மேலும் அவன் கம்யூனிஸ்டாக இருந்தால் அவன் மடை யன்!

✱ பரபரப்பான பருவ காலத்தில் கோயிலுக்குப் போனால் தெய்வம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

தெரியாது என்பது மட்டுமல்ல, அங்கே சிலையில் இருக்கும் அழகுகூடத் தெரியாது.

✦ஐம்பது வயதில் கோயிலுக்குப் போனால், சிலையில் இருக்கும் ஜீவனும் தெரியும்.

✦இதில் வெறும் பருவங்களின் வித்தியாசம் மட்டுமில்லை.

✦பக்குவத்தின் பரிணாம வளர்ச்சியும் அடங்கியிருக்கிறது.

✦ஏன், உடம்பேகூட இருபது வயதில் எந்த உணவையும் ஜீரணிக்கிறது.

✦நாற்பதிற்கு மேலேதானே இது வாய்வு, இது பித்தம், என்கிற புத்தி வருகிறது.

✦டென்ஷன் என்ற ஆங்கில வார்த்தைக்குச் சரியான தமிழ் வார்த்தை எனக்குப் புரியவில்லை.

✦முறுக்கான நிலை என்று அதைக் கூறலாம்.

✦அந்த நிலையில் எதையும் செய்யலாம், எப்படியும் செய்யலாம் என்கிற சூதிமிர் வருகிறது.

✦அதில் நன்கு அனுபவப்பட்ட பிறகு, இதைத்தான் செய்யலாம், இப்படித்தான் செய்யலாம் என்ற புத்தி வருகிறது.

✦இனி விஷயத்திற்கு வருகிறேன்.

✦ஞான மார்க்கப் பக்குவமும் அப்படிப் பட்டது தான் என்பதைக் கூறவே இவற்றைக் கூறினேன்.

✦உள்ளம் உடலுக்குத் தாவி, உடல் ஆன்மாவுக்குத் தாவிய நிலையே, பக்குவப்பட்ட நிலை.

✦தேளைப் பிடிக்கப் போகும் குழந்தை, அதையே அடிக்கப் போகும் மனிதனாக வளர்ச்சியடைகிறது.

✦அதற்குப் பிறகு, அந்தத் தேளிடமே கூட அனுதாபம் காட்டும் ஞானியாக அந்த மனிதன் மாறி விடுகிறான்.

✦இன்றைய பக்குவம் இருபதாண்டுகளுக்கு முன் எனக்கு இருந்திருந்தால், எனது அரசியலில்கூட முரண்பாடு தோன்றியிருக்காது.

✦வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்பில், நன்மை தீமைகளை உணரும் நிதானம் அடிபட்டுப் போகிறது.

✦ஆரம்பத்தில் சூஇதுதான் சரி என்று ஒன்றை முடிவு கட்டிவிட்டு, பின்னால் சூஇது தவறு என நாமே சொல்ல வேண்டிய நிலை வருகிறது.

✦சரியாகக் கணக்கிட்டால், மனித வாழ்க்கைக்கு மூன்று கட்டங்கள்.

✦முதற் கட்டம் ஒன்றுமே புரியாத உணர்ச்சிக் கூத்து.

✦இரண்டாவது கட்டம் ஏதோ இருப்பதாக, ஆனால் தெளிவாகத் தெரியாத, மயங்கிய நிலை.

✦மூன்றாவது கட்டம் பிரபஞ்சம் எவ்வளவு பெரியது என்றும், நமக்கும் மேலே ஒரு நாயகன் இருக்கிறான் என்றும் முழு நம்பிக்கை கொண்ட ஞானநிலை.

✦இந்த மூன்றாவது நிலையை முதற் கட்டத்திலேயே எய்தியவர்கள் பலர் உண்டு.

✦சுவாமி விவேகானந்தரைப் போல, வளைந்து கொண்டே வளர்ந்த மரங்கள் உண்டு.

✦அவர்கள் எல்லாம் பூர்வ ஜென்ம புண்ணியத்தால் அந்த நிலையை எய்தியவர்கள்.

✦மற்றவர்கள், அனுபவத்தின் மூலமாகத் தானே பக்குவ நிலையை அடைய வேண்டியிருக்கிறது!

✦எகிப்து மன்னன் பாரூக், பட்டம் துறந்து பாரிஸ் நகரில் சீரழிந்த போதுதான் சூமனிதாபிமானம் என்றால் என்ன என்பதை உணர முடிந்தது.

✦ஆனால், அரண்மனை வாசத்திலேயே அதனை உணர்ந்து கொண்ட சித்தார்த்தன், கௌதம புத்தரான வரலாறும் உண்டு.

✦தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் நடுவே தடுமாறும் மனிதர்கள் மிக அதிகம்.

✦ஒன்று, தூங்குவதென்றால் நிம்மதியாகத் தூங்கி விடவேண்டும்.

✦விழிப்பதென்றால் சுறுசுறுப்பாக விழித்துக் கொள்ள வேண்டும்.

✦தூக்கமும் விழிப்புமாக இருப்பதால் தூக்கத்தின் பலனும் கிட்டாது, விழிப்பின் பலனும் கிட்டாது.

✦மனப்பக்குவம் என்பது அனுபவங்கள் முற்றிப் பழுத்த நிலை.

✦அந்த நிலையில் எதையுமே இல்லை என்று மறுக்கின்ற எண்ணம் வராது.

✦இருக்கக்கூடும் என்றே சொல்லத் தோன்றும்.

✦இல்லை என்று சொல்பவனுக்கு எந்தப் புத்தியும் தேவையில்லை.

✦எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்ல முட்டாளாலும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ஆனால் உண்டு என்று சொல்பவனுக்குத்தான் அதை நிலைநாட்டப் போதுமான அறிவு தேவைப்படும்.

✦பூமிக்குக் கீழே என்ன இருக்கிறது என்று கேட்டால் எதுவுமே இல்லை, என்று குழந்தைகூடப் பதில் சொல்லிவிட முடியும்.

✦ஆனால், அடியிலே நீர் அதன் கீழே நெருப்பு என்று சொல்ல விஞ்ஞான அறிவு வேண்டும்.

✦பாத்திரம் செய்பவனுக்குப் பல நாள் வேலை போட்டு உடைப்பவனுக்கு ஒரு நாள் வேலை.

நாஸ்திகன் எப்போதுமே தெளிவாக இருக்க முடியும்.

✦காரணம் எதைக் கேட்டாலும், எந்திரம் போல் இல்லை இல்லை என்று மட்டுமே அவன் பதில் சொல்லப் போகிறான்.

✦நன்றாகத் தலையாட்டத் தெரிந்த அழகர் கோயில் மாட்டை விடவா அவன் உயர்ந்து விட்டான்.

✦ஆனால், ஆஸ்திகனோ, விபூதிக்கு ஒரு காரணம், குங்குமத்திற்கு ஒரு காரணம், திரு மண்ணுக்கு ஒரு காரணம் சொல்லியாக வேண்டும்.

✦சொல்வது மட்டுமல்ல, எதிரியையும் ஒப்புக் கொள்ள வைக்க வேண்டும்.

✦ஒன்றை ஒப்புக்கொண்டு, அதன் உட்கீற்றுகளை விவரிப்பதற்குத் தகுந்த பக்குவம் தேவை.

✦ஆஸ்திகன், பிரபஞ்சத்தின் தோற்றம் முதல் இயக்கம் வரையில் கண்டுபிடிக்க முயலுகிறான்.

✦ஜனனம், மரணம் இரண்டையும் அவன்தான் ஆராய்கிறான்.

✦அப்படி ஆராய்ந்து, இந்து வேதாந்திகள் செய்த முடிவை இதுவரை விஞ்ஞானம் தாண்டியதில்லை.

✦வேதங்களின் முடிவையே, விஞ்ஞானம் தன் முடிவாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

✦ஆனால், விஞ்ஞானமும் அறியாமல், மெய்ஞ்ஞானமும் அறியாமல், அஞ்ஞானத்தைக் கொண்டு உழலும் நாஸ்திகனுக்கு, எல்லாம் இயற்கையாக நடக்கின்றன என்று சொல்லத் தெரிகிறதே தவிர,

✦அந்த இயற்கை என்பது என்னவென்று சொல்லத் தெரியவில்லை.

✦பக்குவ நிலைக்கும், பக்குவ மற்ற நிலைக்கும் வேறுபாடு இதுதான்.

✦கோயிலுக்குப் போய் ஏன் தேங்காய் உடைக்க வேண்டும்?

✦அப்படிக் கோயிலிலே என்ன இருக்கிறது? என்று நாஸ்திகன் கேட்கிறான்.

✦அந்தத் தேங்காயை உடைக்கும் வரையில், அந்தத் தேங்காய்க்குள் என்ன இருக்கிறது? என்பது அவனுக்குத் தெரியுமா?

✦அதில் வழுக்கையும் இருக்கலாம், முற்றிய காயும் இருக்கலாம்.

✦ஆகவே, உடைத்த பின்பே காயைக் கண்டு கொள்ளும் மனிதன், உணர்ந்த பின்பு தெய்வத்தைக் காண முடியும் என்பது உறுதி.

✦கடவுளே இல்லை என்று வாதாடியவன் எவனும் சூஎனக்கு மரணமே இல்லை என்று வாதாட முடியவில்லையே!

✦மரணம் என்று உணரப்படும்போதே சிலருக்குப் பக்குவம் வருகிறது.

✦எனக்குத் தெரிந்த மிகப் பெரிய நாஸ்திகர் கூட தமது அந்திம காலத்தில் யார் கொடுத்த விபூதிகளையும் பூசிக் கொண்டார்கள்.

✦மரணத்தின் பின் எங்கே போகப் போகிறோம் என்று நிச்சயமாகத் தெரியும் வரை ஈசுவரன் ஒருவன் இருப்பது உறுதி.

✦நன்கு பக்குவப்பட்டவர்கள், தம் வாழ்நாளிலேயே காணமுடிகிறது.

✦இப்போதெல்லாம், போலித்தனம் எது? பொய் எது? என்பதைக் கண்டு கொள்ளக்கூடிய தெளிவு எனக்கு வந்து விட்டது.

✦காரணம், வயது மட்டுமல்ல, பக்குவம்.

✦செருப்புப் போடாத காலத்தில், மலத்தை மிதித்திருக்கிறேன். அதனால், இப்போது செருப்புப் போடுகிறேன்.

✦கடலை மாவில் செய்த பலகாரத்தைச் சிறுவயதில் விரும்பிச் சாப்பிட்டேன். இப்போது அது தவறு என்பதை உணருகிறேன்.


✦என் முன்னால் ஒரு வாதியையும், பிரதிவாதியையும் கொண்டு வந்து நிறுத்தி, யார் நிரபராதி என்று சொல்லச் சொன்னால் அவர்களது வாக்குமூலங்கள் இல்லாமலேயே, நான் அவர்களைக் கண்டுபிடிப்பேன்.

✦என்னுடைய தீர்க்கதரிசனத்துக்கு முதல் அடிப்படை அறிவல்ல அனுபவம்.

**✦தலைப்பை மீண்டும் நினைவுபடுத்தினால், அதன் பெயரே பக்குவம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



ராஜகவி ராகில்
சீசெல்ஸ்

# எங்கட நட்புக்கு வயசு ஐம்பது

நானும் கமாலும் நீண்ட காலக் கூட்டாளிமாரு . ஒரே ரோட்லதான் அவண்ட ஊடும் இருந்துச்சி.

சின்னப் பருவத்திலிருந்தே நாங்க ரெண்டு பேரும் காக்கா தம்பிய விட அவ்வளவு பாசமும் நெருக்கமும்.

அப்ப பத்து வயசி இருக்கணும் . அது கெறவல் ரோடு . அதான் நாங்க வெளையாடுற கிரவுண்டு .

பந்து வெளையாடுவோம் . ஒரு கோடு கீறி சின்னப் பால் டின்கள அடுக்கி வெச்சி ஒரு பக்கம் பத்தடி தள்ளி நாலு பேரு நிப்போம்.

அதப் போல மத்தப் பக்கமா நாலு பேரு பத்தடி தள்ளி நிப்பானுகள் . இப்ப ரப்பர் பந்தால அடுக்கி வெச்ச பேணிகளப் பாத்து பந்தால எறிஞ்சி அந்தப் பேணிகள கலைக்கணும் .

மத்தப் பக்கமா நிக்கிறவங்க கலைச்ச பேணிகள கீழ இருந்து ஒவ்வொண்டா ஒயரமா அடுக்கணும்.

அவங்கள அடுக்க உடாம எறிஞ்சி பேணிகள கலச்சவங்க, அவங்கள அடுக்க விடாமா துரத்தித் துரத்தி பந்தால எறிஞ்சி அடிக்கணும்.

கலஞ்ச பேணிகள் எல்லாத்தையும் அவங்க சரியா அடுக்கினா திரும்ப மத்தவங்க பந்தால பேணிகள குறி பாத்து அடிப்பாங்க.

இந்த வெளயாட்டுக்கு கட்டப் பந்து எண்டு பேரு.

நானும் கமாலும் அந்த ரோட்ல மத்த கூட்டாளிகளோட சேந்து விளையாடுவோம்.

உத்தி விளையாட்டு நாங்க விரும்பி ஆசையா விளையாடும் விளையாட்டு.

ஆனா இது ஆபத்தான விளையாட்டு.

ஒண்ணர அடி நீளத்துல வைரமான ஒரு தடி.

ஆறு இஞ்சி அளவுல வைரமான சுள்ளி .

ரோட்ல ஒரு சின்னக் குழிய தோண்டி அந்தக் குழி மேல சுள்ளிய வெச்சி அதத் தடியால ஒசத்தி உந்தணும்.

அப்ப சுள்ளி மேலே எழும்பி தூரத்தில போய் விழும் . அந்தச் சுள்ளிய யாராச்சும் புடிச்சா உந்திய ஆள் அவுட்டு.

சுள்ளியப் புடிக்காட்டி அந்தச் சுள்ளிய எடுத்து உந்திய ஆளப் பாத்து குழிக்குக் கிட்ட எறியணும்.

அந்தத் தடி அளவும் சுள்ளி விழுந்த இடமும் குழியளவு இருந்தா உந்தியவரு அவுட்டு.

அப்புடி இல்லாம தடியால சுள்ளிக்கு அடிச்சி அது விழும் இடத்தில இருந்து குழிவர அந்தக் கம்பால அளந்து எத்தன எண்டு எண்ணி கணக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெச்சிக்கணும்.


நூறு வந்தா சுள்ளியால நெறைய தரம் அடிச்சி அடிச்சி குறிப்பிட்ட தூரம் வர அந்த எடத்திலிருந்து மூச்சி நிப்பாட்டாம ஹம்மிங் பாடிக்கிட்டு குழி வர ஓடிவரணும்.

இந்த விளையாட்டும் நிறைய தடவ நானும் கமாலும் விளையாடி இருக்கம்.

நேத்து ஒன்னக் காணல, எங்க போனாய் நான் ஒன்னத் தேடினன் தெரியுமா ?

கமால் என்னப் பாக்காம இருக்க மாட்டான். நானும் அப்புடித்தான். வட்டக்க.. பசள எறிய வாப்பாவோட போன. ஊட்ல சோறாக்காட்டி கமால் ஊட்ல தின்பன். கமால்ற உம்மா என்னோட நல்ல இரக்கம்.

கமால்ற வாப்பா அடிக்கடி ஏசுவாரு . ரெண்டு பேரும் படிக்காம விளைடித் திரியிறமெண்டு, எண்டாலும் நாங்க விளையாட்டக் குறைக்கல.



பாக்கு விளையாடுவமா ...?

கமால் கேப்பான். பாக்கு விளையாடுறதில கமால் கெட்டிக்காரன் .

கூப்பன் மா போட்டு வெக்கிற பெரிய டின்ல நிறய பாக்குகளப் போட்டு அடச்சி வெச்சிருப்பான்.

காசுக்கும் விப்பான் . பத்து சதக் காசுக்கு அஞ்சி பாக்குத் தருவான்.

நானும் கமாலுக்கிட்டப் பாக்கு வேண்டுவன்.

கையான் பாக்கு எனக்கிட்ட எப்பவும் இருக்கும் . கமாலுக்கிட்ட மிச்சம் இருந்துச்சி.

கையான் பாக்கெண்டா எங்கட உள்ளங்கைக்குள அடக்குற அளவுக்குப் பெரிய கொட்டப் பாக்கு.

பாக்கு வெளாட்டுக்கு கையான் பாக்குத்தான் அவசியம்.

ரோட்ல ஒரு கோட குறுக்கால கீறி அந்தக் கோட்ல இருந்து எங்கட கால்ல அளவுக்கு பதினஞ்சி தரம் அளந்த பொறகு அந்த இடத்தில ஒரு மாக் வெக்கணும் .

இப்ப அஞ்சி பேரு விளையாடுறமெண்டா ஒருத்தர் ஒருத்தரா ஒரு கொட்டப் பாக்க கீறின கோட்டுக்குள மெதுவா வீசணும் . இப்ப கோட்டுக்குப் பக்கத்துல யார்ர பாக்கு கிடக்குதோ அவரு

மாக் இருக்குற எடத்துலருந்து கையான் பாக்கால கோட்டுக்குள்ளே கெடக்கிற ஒரு பாக்குக்கு அடிக்கணும். அப்புடி அடிச்சா அங்க கிடக்கிற அஞ்சி பாக்கும் அடிச்சவருக்குச் சொந்தம்.

இந்தக் கொட்டப் பாக்கு விளையாட்டில குறி வெச்சி அடிக்கிறதுல கமால் கில்லாடி.

அதனால இந்த விளையாட்டு கமாலுக்கு மிச்சம் விருப்பம் .

நானும் கொஞ்சம் நல்லா விளையாடுவன் எண்டாலும் கமாலுக்குக் கிட்டவும் நிக்கயேலா.

சில நேரம் நான் சோலி எடுப்பன். சோலி எண்டா வேணுமெண்டு பிழை பிடிச்சி சண்டை பிடிக்கிறது .

லீவு நாளு வந்தா செட்டியா வட்ட, நொச்சியடி , பெரிய பாலம் எண்டு நானும் கமாலும் போவம்.

இப்புடித்தான் ஒரு நாள் நான் கமால கூப்பிட்டன்.

தூண்டப் போடப் போவமா ...?

எங்க ?

நம்மட ஊர்த் தேட்டர்ல எம்சி யார்ர ஒளி வெளக்கு படம் போட்டிருக்காம்

அதான் ...தூண்டல் போட்டு மீன் புடிச்சி வித்தா மெட்னி பாக்கப் போகலாம்

வாப்பா இருக்கார்ரா ...இண்டைக்கில்ல நாளக்கிப் போவம்

நாளக்கிண்டா என்ர உம்மாக்கிட்டக் காசு வேண்டலாம்.

..தயிர் வாத்து இருக்கா கடக்கிக் கொண்டு போய்க் குடுத்தா

எனக்குக் காசு தருவாடா கமால்

எம் சி ஆர்ர படமெண்டா எனக்கு உசிரு போல.

எப்புடியாச்சும் பாப்பன் .

அம்பத்தஞ்சி சதம் இருந்தா கலரிக்கு டிக்கட் எடுத்துப் பாப்பது வழக்கம்.

ஸ்க்கூலுக்குப் போற நேரம் உம்மா தாற காசில அஞ்சி பத்துச் சதம் மிச்சம் புடிச்சி வெப்பன்.

அது கொஞ்சம் சேந்ததும் நானும் கமாலும் யாருக்கும் தெரியாமப் படம் பாக்கப் போவம்.

ஒரு மொற என்ர வாப்பா எப்புடியோ கேள்விப் பட்டு நிந்தவூர் சினிமாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

தியேட்டருக்குள்ள உழுபட்டு என்னக் கையும் களவுமா புடிச்சி

சைக்கிள்ள என்னயும் ஏத்தி வந்து கிணத்த டில நிண்ட கமுக மரத்துல கட்டிப் போட்டு முசுறுக் கொப்ப உடைச்சி என்ர மேல கடிக்க உட்டாரு.

அதப் பாத்த என்ர உம்மா துடிச்சிப் பதறிப் பெய்த்தா.

அண்டு நான் தனியாத்தான் படம் பாக்கப் போனன். நல்ல காலம் கமால் வரல்ல

வந்திருந்தா கமால்ட வாப்பா என்னத்தான் திட்டியிருப்பாரு.

கமால் தப்புச்சது எனக்கு சந்தோஷ மெண்டாலும் என்ர வாப்பா எனக்குத் தந்த தண்டன

என்ர வாழ்கையில மறக்க ஏலா .

அதுக்குப் பொறகு நானும் கமாலும் பட்ம் பாக்கப் போறத உட்டுட்டம் .

ஆனா எங்கட ஊட்டுக்குப் பக்கத்துல சின்ராசா எண்டு என்ன விட அஞ்சி வயசி கூடின ஒரு நண்பன் இருந்தான்.

அவன் எங்கட ஊட்டுக்கும் நெனச்ச நேரம் வருவான், போவான்.

என்ர வாப்பா அவனோட சேரோணாம் எண்டு புத்தியும் சொல்லியிருக்காரு.

அவன் வீடி குடிச்சத என்ர வாப்பா கண்டா ராம்,

என்ர வாப்பா இல்லாத நேரம் பாத்துத்தான் சின்ராசா வருவான்.

அண்டு ஞாயித்துக் கிழம . வாப்பா வட்டக்க போயிட்டாரு . சின்ராசா வந்தான்

நவக்கிரகம் படம் போட்டிருக்கான் ...பாக்கப் போவமா? ....நல்ல படமாம்

எண்டு கூப்புட்டான் . படம் பாக்கப் போக ஆச எண்டாலும் வாப்பாவ நெனக்கத்தான்

எண்ட நெஞ்சிக்குள பக் பக் எண்டு துடிச்சது.

எனக்குப் பயமா இருக்கு ...நா வரல நீ போடா ...படத்தப் பாத்து வந்து எனக்கிட்ட கதய செல்லு ...என்ன ...?

நீ ஓசில படம் பாக்கணும் ...நான் எண்ட நாக்கால படத்த ஓட்டணும்...

அவன் கோவத்தில சென்னான் .

அப்ப நீ ஒண்டு செய்வியா ?

என்ன ...?

படம் பாக்க நீ காசு தந்தா நான் படத்தப் பாத்து வந்து உனக்கிட்ட கதய செல்லுவன் ...என்ன செரியா ..?

அவன் செல்லிப் போட்டு என்ர மொகத்த கூர்மயாப் பாத்தான்.

நானும் யோசிச்சுப் பாத்தன் . அவன் சென்னது நல்லாத்தான் இருந்துச்சி.

சரி... காசு தாறன் ..இண்டைக்கே படத்தப் பாத்து வந்து எனக்கிட்ட கத செல்லணும்..என்ன ..சரியா ?

சரி..சரி ..சரி.. ...மொதல்ல காச குடுடா ...

நான் ஊட்டுக்குள்ள என்ர பொத்தக வேக்குக்குள ஒழிச்சி வெச்சிருந்த காசில

அம்பத்தஞ்சி சதம் கொண்டாந்து குடுத்தன். அவண்ட மொகத்துல அவ்வளவு சந்தோசம்.

ஹிய்..ஹிய் ஈஈஈஈ முப்பத்திரண்டு பல்லும் வெளங்கச் சிரிச்சான்

கரும்பு திங்க கூலி மாதிரி தானே அது ...அப்ப சின்ராசா சிரிக்காம வேறென்ன செய்வான்.

நானும் அவனுக்குப் படம் பாக்கக் காசி குடுத்ததுக்கு ஒரு காரணம் இருந்திச்சி

அதென்னடாண்டா பள்ளிக் கூடத்துல என்ர வகுப்பில சமது எண்டு ஒருவன் இருக்கான் .

அவன் படம் பாக்குறதில விண்ணன் .

பாடத்துக்கு சேரு வராத நேரத்தில அவன் படக்கத செல்லுவான் .

அவனச் சுத்தி எல்லாரும் இருக்க அவன் பொய்யும் மெய்யும் கலந்து கதயளப்பான்.

அவனுக்கு வகுப்பில மிச்சம் கூட்டாளி மாரு.

அவங்கள நானும் கூட்டாளியாக்கணு மெண்டா படம் பாத்ததப் போல கத செல்லணும்.

அதுக்குத்தான் நானும் சின்ராசாக்கு காசு குடுத்தன்...எப்புடி என்ர ஐடியா ?

அண்டு சின்ராசா ரெண்டு முப்பது மெட்னி பாத்துட்டு என்னத் தேடி வந்தான்.

அவன் ரோட்ல நிண்டு சிக்னல் தந்தான் . வாப்பா இருந்ததால அவன உள்ள நான் வரச் செல்லாம

தொழப் போறன் எண்டு செல்லிட்டு

அவண்ட வளவுக்க நிண்ட வேப்பமரதின் கீழ ரெண்டு பேரும் போய் குந்தினம்.

என்ன ..நல்ல படமா.. கதய கெரியாச் செல்லுடா ...டக்குன்னப் போகணும்.. வாப்பா வெளியால வந்து கண்டுட்டா நல்ல சாப்பாடுதான் கிடைக்கும் ..

சின்ராசா உம்மையா படம் நாக்கால ஓட்டினான் ..எனக்குப் படம் பாக்குற மாதிரியே இருந்துச்சி.

அவனுக்குப் படம் பாத்துப் பாத்து சேவி சாச்சி போல எண்டு நெனச்சன்.

அர மணித்தியால நேரத்துக்குள்ள கதயச் செல்லி முடிச்சான் அவன் . நான் பள்ளிக்குப் போய் தொழுதுட்டு வந்தன்.

தொழுற நேரம் சின்ராசா என்ர மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



சுக்குள்ள கத சென்னான்

நான் ஊட்டுக்கு வந்த பொறகும் அவன் சென்ன கதைய திரும்ப எனக்குள்ள ஒரு முறை செ ால்லிப் பாத்தன். மறந்து போகக்கூடா தல்லவா .

அடுத்த நாள் காத்தால பள்ளிக்கூடத்துக் குப் போகக்குள்ள கமாலும் என்ர கூட வந்து சேந்தான்.

நேத்து நான் படம் பாத்தன்

ஏண்டா என்ன கூப்புடல ..

அது அவசரமா பாக்க போனன் ..உங்கட வாப்பா நேத்து ஊட்டுல இருந்துருப்பாரெண் டுதான்

அங்காலப் பக்கம் நான் வரல ...

ஓண்டா ...வாப்பா இருந்தாரு ...

கமால் வேற வகுப்பு . நான் வேற வகுப்பு எப்ப சேரு வராத பாடம் வருமெண்டு காத் திட்டிருந்தன். மூணாம் பாடத்துக்கு சேரு வரல்லஇ நான் படம் பாத்ததச் சென்னன் .

கத செல்லச் சொன்னான்கள்.

பலமுறை ஒத்திபாத்த கதைய அப்புடியே சென்னன் .

சா ஆ ...நல்ல படம்

எண்டு எல்லாருமே சென்னான்கள்.

எனக்கு அந்த அம்பத்தஞ்சி சதம் ஒரு சதமாத்தான் தெரிஞ்சிச்சி.

கமால் ஓலெவல் படிச்சி முடிச்சான்.

இதுக்கிடயில நாங்க செய்யாத வேலை களே இல்ல, வயலுக்க புல் புடுங்கப் போயி ருக்கம், கதிரு பொறுக்கப் போயிருக்கம், பாயிழைக்கப் பன் புடுங்கப் போயிருக்கம், பொன்னங்கணி இலக்கறி நோண்டப் போயி ருக்கம், கமால் ஓலெவல் படிச்சி முடிச்சான்.. நல்லாப் பாஸ் பண்ணினான், ஆனா அவன் தொடந்து படிக்கல ..ஏனோ தெரியல.. கமால் நல்ல கெட்டிக்காரன்.

தொழிற்பயிற்சி நிறுவனத்துல இன்ர விக்கு கடிதம் ரெண்டு பேருக்கும் வந்ததால நானும் கமாலும் ஒருமுறை கொழும்புக்குப் போனம்.

இங்கிலீசு தெரியாததால ரெண்டு பேருமே எடுபடல, ஊரில அரிசி மில்லில கமாலுக்கு கணக்கப்புள்ள வேல கெடைச்சது, அந்த நேரம் நான் ஓலெவல் பாஸ் பண்ணி ஏலெ வல் படிச்சிக் கொண்டுருந்தன், நான் நெனக் கிற நேரமெல்லாம் கமாலத் தேடி மில்லுக்குப் போவன். கமாலப் பிரிஞ்சி இருப்பது சரியான கவல.

அடிக்கடி நான் மில்லுக்குப் போற தால கமால அந்த முதலாளி வேலய உட்டு போகச் சொல்லிட்டாரு, அந்த வேல போனது கமாலுக்கு கவல இல்ல .

நான் அவன் கூட இருப்பத சந்தோசமா நெனச்சான்.

இன்னொரு மொற நிந்தவூருத் தியேட்டரில கமாலுக்கு ஒரு வேல கெடைச்சது, இந்த உல கத்துல மிச்சம் ஒசத்தியான வேல தியேட்டரில கிடைக்கிற வேலதான்.

உனக்கும் எனக்கும் மிச்சம் பொருத்தமான வேல இதான், கமால் நல்லாப் படம் பாக்க லாம் ஒரு படத்த மிச்சம் தரம் பாக்கலாம்டா எண்டு நான் சென்ன நேரம் அவன் சிரிச்சான்.

ஏண்டா சிரிக்காய்..?

சிரிப்பு வந்திச்சி டா

ஒரு நாள் பாபு படம் பாக்க நான் நிந்தவூரு தியேட்டருக்குப் போனன்.

கமால் அங்க வேல செய்றதால கிரவுட் பெரிசா இருந்தாலும் எனக்கு டிக்கட் எடுத்துத் தருவான்.

நான் டிக்கட் எடுத்து கலரியில இருந்தன்.

பின்னுக்குத் திரும்பிப் பாத்தன் ஸ்க்கூல்ல எனக்கு சைட் அடிக்கிற சாந்தி இருந்தா, என் னக் கண்டதும் கூப்பிட்டா. நான் உடனே ஓடி சி க்கு டிக்கட்ட மாத்தி அவளுக்குப் பக்கத்துல போய் குந்தினன். படம் ஓடிக்கிட்டு இருக்கு . அந்த நேரம் பாத்து ஒத்தன் எனக்கிட்ட வந்து அடிக்க வந்தான்.

இத அறிஞ்ச கமால் ஒடனே ஓடியாந்து கைல இருந்த டோச் லைட்டால அவண்ட மண்டையில அடிக்க, ரத்தம் வர திரும்பவும் கமால்ட வேல பறிபோச்சி.

அடிபட்டவன் சாந்திட அண்ணன் எண்டும் அவன்தான் அங்க மிசினில் படம் ஓட்டுறவன் எண்டும் கமால் பொறகு சென்னான்.

அண்டு நான் சிரிச்சதிர அர்த்தம் இப்ப புரிதா ?

கமால் கேட்டதும் சிரிப்பதத் தவிர வேறொண்டும் அப்ப எனக்குத் தெரியல.

அதுக்குப் பொறகு எண்ட வாழ்க்க மாறிப் போச்சி

யூனிவ சிட்டி ...படிப்பு ..பட்டம் ..வாத்தி வேல எண்டு நானும் மாறிப்போனன்.

நீண்ட காலம் கமாலப் பிரிஞ்சி இருந்தன்.

கமால்ட வாழ்க்கையும் மாறிப்போச்சிஇ அரசாங்க வேல ..கல்யாணம் ...புள்ள குட்டி எண்டு

நான் உடலால பிருஞ்சிருந்தாலும் கமால்ட நெனப்பும் நானும் அவனும் செஞ்ச வேலக ளும் மனசு நெறையக் கிடக்கும். கொஞ்ச நாளக்கிப் பொறகு அடிக்கடி நான் ஊருக்குப் போற நேரமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறுகதை

நானும் கமாலும் கடற்கரை ஆறு குளமெண்டு சுத்துவம், எங்கட பழய காலம் திரும்பவும் கிடைச்சது போல பழைய சம்பவங் களக் கதச்சிட்டு இருப்பம்.

எங்கட நட்புக்கு வயச நான் இப்ப செ ான்னா மூக்கில விரல வைப்பீங்க ..சொல்லட் டா...

ஐம்பது வயசு....

இத ஒரு விழாவா கொண்டாடணும் எண்டு மனசுக்குள அடிக்கடி நெனப்பு வரும்.

எண்டாலும் நான் தூரத்துல இருக்கன் . அடுத்த மொற அல்லாஹ் சீவனப் போட்டா

எங்கட நட்புக்கு வயசி அம்பது வருச மெண்டு பேர வெச்சிக் கொண்டாடணும்.

போன மொற ஊருக்கு நான் போன நேரம் கமாலோடுதான் மிச்சம் நாள் கழிஞ்சது.

நீ தூரத்துல இருக்குற ஒரு வகையில நல்லந் தான் எண்டு சென்னான் கமால் நான் கோவத் துல அவண்ட மொகத்தப் பாத்தன் . அவன் என்னைப் புரிஞ்சிக்கிட்டான்.

ஏ..அப்புடிச் செல்றாய் ...எண்ட வாழ்க்கை பிரிவுகளால நெறைஞ்சது

இப்ப எல்லாம் இருக்கு ..ஆனா சந் தோசம் நிம்மதி இல்ல ...இன்னும் ஒரு மாசத் தில திரும்ப நான் போகணும்.

இனி அல்லா நாடினா ஒரு வருசத்துக்குப் பொறகுதான் வரக் கிடைக்கும் ..

நான் அதுக்காகச் செல்லல... நான் இப்ப இருக்கிற தொழில்ல நிரந்தரமா நிம்மதியா இருக்கன்.

நீ இங்க இருந்துருந்தா எண்ட இந்த வேலை யும் எப்பவோ போயிருக்கும் ஹா ஹா ஹா ஹா ....

ஓ...ஹா ஹா ஹா ஹா ...

எங்கட சிரிப்பு அடங்க மிச்ச நேரமாச்சி

- முற்றும்

★★★★★★

# அன்பே நீ எதுவானாய்?

தேவா மாதவன்

அன்னையாவது அன்பு
அகிம்சை என்பது அன்பு.
அறநெறி போதிப்பது அன்பு
அலட்சியப்படுத்தாதது அன்பு
அஞ்சாமை கொள்வது அன்பு
தன்னலம் கருதாதது அன்பு
தன்னம்பிக்கை தருவது அன்பு
தற்பெருமை அற்றது அன்பு
பாசம் கொண்டு பற்றிய இதயத்தை
பரிதவிக்க விடாதது அன்பு
பக்தனையும் பரமனையும் இணைப்பது அன்பு.
பாராளுபவனையும் பண்பாளனாக்குவது அன்பு.
அன்பிலா இதயமதில் இரக்கம் காண்பதரிது.
அன்பிலா நெஞ்சமதில் நேர்மையை காண்பதரிது.
அன்பிலா மானிடம் அடிக்கடி மாறுவதுண்டு.
அன்பிலார் வார்த்தை நீரில் எழுத்தாகும்.
அன்பினை உணரா நெஞ்சம்
அவனியில் இருந்தென்ன லாபம்?
அன்பினை மதியா மானிடம்
ஜடமென எண்ணத்தோன்றும்.
அரைகுறைப் பிதற்றலை
அன்பென எண்ணாதே நெஞ்சமே.
அன்புதான் நித்தியம். இந்த
அன்புதான் சத்தியம்.
சொன்னசொல் மாறாதவர்
அன்பிற்கோர் இலக்கணம்.
உள்ளொன்றுவைத்து
புறமொன்று பேசுவோர்
நஞ்சுகொண்ட நாகம் போலாவார்.
தன்குணம் மறைத்து
தத்துவம் பேசினால்
நல்மகன் இவனென்று
நாலுபேர் புகழுவாரே
இது தானே இவரென்று
இனம்கண்ட பின்பும்
அன்புதான் நானென்று-வெறும்
வாய்ப்பேச்சு பேசுவோரை
நம்பிக்கைகொண்டு
நாடிவரும் நெஞ்சமது
போலி அன்பு தோற்றுவிக்கும்
நடிகரே இவரென்று கண்டால்
நிழலைக்கூட தீண்டாத
நித்தியமாகுமே நெஞ்சமது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இன்றைய காலத்தில் படைப்புகள் என்பவை பரவலாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதிலும் பெண்களின் எழுத்துக்கள் அதிகமாகவே சமூகத்தை நிறைத்துக்கொண்டிருக்கின்றன என்றால் மிகையல்ல. பெண்களின் மென்மையான உணர்வுகளை சமூகத்தின் அவலச்சத்தங்களை கவிதைகளாய் கொட்டுவதில் பெண்களே வல்லவர்களாகவும் உள்ளனர். பெண்படைப்பாளர்களின் உள்ளத்தின் எண்ணங்களை வண்ணமாக்கி ஆவணப்படுத்துவதன் அவசியத்தினையும் பெண் ஆளுமைகளை வெளிப்படுத்துவதன் அவசியத்தினையும் உணர்ந்தே ஒளிஅரசியும் நட்சத்திர இல்லத்தரசி, இம்மாத மங்கை என்ற பகுதிகளைப் பிரசுரித்து வருகின்றாள். ஏப்ரல் மாத ஒளிஅரசியின் இம்மாத மங்கையாக ஜொலிப்பவர் சிமாரா அலி.



நேர்கண்டவர் :
வே. முல்லைதீபன்



# பட்டங்கள் எல்லை அல்ல

**1.உங்களைப்பற்றி..?**

நான் சிமாரா அலி.படித்தது கொழும்பு 12 பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி மற்றும் மடவலை மதீனா தேசிய பாடசாலை.13 வயது முதல் கவிதைகள் எழுதி வருகிறேன். சென்ற ஆண்டு எனது முதல் கவிதைத் தொகுதியான கரையைத் தழுவும் அலைகள் நூலை வெளியிட்டேன்.



**2. படைப்புத்துறைகளில் எந்தத்துறையில் விருப்பம் அதிகமாகவுள்ளது..?**

கவிதைதுறையில்தான் நாட்டம் அதிகம். ஆனால் இப்போது கொஞ்சம் கதைகளையும் எழுத முயற்சி செய்கிறேன்.

**3. உங்கள் படைப்புகள் எவ்வாறான எண்ணக்கருக்களைக்கொண்டுள்ளது?**

எனது படைப்புகள் எப்போதும் வாழ்வியல் சம்பந்தமானதாகவே இருக்கும். நிஜத்தோடு ஒன்றியவைகளுக்கேசிறிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

கற்பனை வண்ணத்தினையும் பூசியுள்ளேன். எனது படைப்புகள் யதார்த்த வாழ்வை ஒட்டியிருக்கவேண்டும் என்பதில் நான் அக்கறை கொண்டுள்ளேன்.

**4. எவ்வகையான படைப்புகளை எழுதவில்லையென ஆதங்கப்படுகிறீர்கள்..?**

முடிந்தவரை எல்லா வகையானதும் எழுதி இருக்கிறேன். சில விடயங்கள் இன்னும் அழமாகச் சிந்தித்து எழுதவில்லை என ஆதங்கப்படுவதுண்டு.

**5. முகநூலில் படைப்புக்களைப் பதிவிடும் பெண்களது அடையாளம் எத்தகையது..?**

முகநூலில் நல்ல படைப்புக்களைப் பகிர்ந்தாலும் பெண்களுக்கு ஒரு எதிர்ப்பு மறைமுகமாகவே இருந்து வருகிறது. முகநூல் ஒரு நல்ல விடயம் என்றாலும் மிகக் கவனமாக எமது படைப்புகளையும் கருத்துக்களையும் பதிவிட வேண்டும் ஏன் என்றால் கற்பனைகளை கூட நிஜம் என்றே நினைக்கிறார்கள்.ஆகவே பெண்கள் முகநூலைத் தாண்டி தன்னை அடையாளப்படுத்தவேண்டியது அவசியம்.

**6. கலை இலக்கியத்துறையில் பயணிக்கும் குடும்பப்பெண்களது நிலை எவ்வாறுள்ளது..?**

மிகவும் நெருக்கடியான ஒரு நிலைதான். குடும்பம் சார்ந்த தனது பொறுப்புகளையும் புறக்கணிக்காது செய்து அத்துடன் கலை இலக்கியத்துறையோடும் பயணிப்பது மிகக் கடினம். ஆனாலும் சில பெண்கள் இவை எல்லாவறையும் சமாளித்து முன்னேறுகின்றார்கள். வாழ்க்கையில் பல சிக்கல்கள் வரும் . இவைகளை மனத்தைரியத்துடனும் தெளிவாகவும் கையாண்டு நிலைத்திருப்பதே வெற்றியாகும்.

**7. அவரவர் சமயசம்பிரதாயங்கள், சுயாதீனமான கருத்துக்களுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் தடையாக இருப்பதாக உணருகிறீர்களா..?**

சமயசம்பிரதாயங்களை வெளிப்படுத்துவது ஒரு தடையாக இல்லை, ஆனால் சுயாதீனமான கருத்துக்களை பெண்கள் சொல்லும் போது அவர்கள் விமர்சனத்துக்கு உள்ளாகி ஏதாவது ஒரு முத்திரை குத்தப்பட்டு விடுகிறார்கள். ஏன் என்றால் எமது பெண் உரிமை உடை அலங்காரத்துடனேயே இருக்கு. கருத்து சுதந்திரம் இல்லை.

**8. அதீதமான புதுக்கவிதை வரவுகளால், ஏதாவது மாற்றம் ஏற்படுவதாக கருதுகிறீர்களா..?**

மாற்றம் உண்டு. பலரும் விதவிதமாக எழுதத் துவங்கி இருக்கிறார்கள். ஆனால் அவைகள் சில வேளைகளில் கவிதையாக வருவதில்லை. முதலில் மரபுபற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். புதுகவிதையின் வரவால் பலர் இப்போது கவிதை எழுத வாசிக்கத் துவங்கி இருப்பது பெரிய மாற்றம்

**9. பரவிப்பறக்கும் பட்டங்கள் பற்றிய உங்கள் நிலைப்பாடு யாது..?**

பட்டங்கள் என்பது ஒரு எல்லை அல்ல, அதை தாண்டிச் செல்ல வேண்டும். பட்டங்களைவைத்து ஒருவரின் திறமையை முடிவு செய்தல் கூடாது.

**10. உங்கள் வளர்ச்சியின் படிக்கற்கள் எவை..?**

எனது வளர்ச்சியின் படிக்கற்கள் எனது அனுபவங்கள். பலதரப்பட்ட மனிதர்களின் அறிமுகம். இன்பம், துன்பம், தோல்வி, இழப்பு எனப்பலவும் எனது வெற்றியின் படிக்கற்கள்.

**11. இறுதியாக, கல்விகற்கும் பிள்ளைகளுக்கு எவ்வாறான ஆலோசனைகள் கூறவிரும்புகின்றீர்கள்?**

இப்போது அருகிவரும் ஒரு விடயம் வாசிப்பு. வாசிப்பு ஒரு மனிதனை முழுமை அடையச்செய்யும். நூல்களைத்தான் வாசிக்க வேண்டும். ஆனால் இணையத்தில் அல்ல. இணைய வாசிப்புக்கும் நூல் வாசிப்புக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. நூல்களை கையில் பிடித்து வாசிக்கும் போது ஒருவித உணர்வுபூர்வமான மனநிலை ஏற்படுகின்றது. ஆகவே இயன்றளவிற்கு நூல்களை வாசிக்க வேண்டும். அதேபோலத்தான் கைகளால் எழுதி பிழையை அழிப்பதும். நாம் பிழைகளை இறப்பர் கொண்டு அழித்து எழுதும் போது மனதில் தன்னம்பிக்கை உண்டாகும். இதைச் சிறுபராயத்தில நிச்சயமாக பிள்ளைகளைச் செய்யவைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் எதிர்கால சமுதாயம் மிகச்சிறப்பானதாக உருவாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# சொந்தக் காலில் நிற்றல்

ஒரு பசுக்கன்றானது தான் இம் மண்ணில் வாழ்வதற்காய் பிரசவிக்கப்பட்டிருப்பதை அறிவு பூர்வமாக உணரும் முதற்கணமே அது செய்யும் முதற் காரியம் எழுந்து தனது சொந்தக்காலில் நிற்பதுதான்! அடுத்துஎந்த வித முன் அனுபவமோ அறிவோ இன்றியும் எவரது தூண்டுதலின்றியும் தாய் மடியை தேடி அறிந்து கொண்டு தனது பசியை போக்குகின்றது! அது ஐந்தறிவு படைத்த ஜீவனாகும். ஆறறிவு படைத்த ஜீவனுக்கு தாய் தனது மடியில் வைத்து பால் புகட்ட வேண்டியுள்ளது. எது எடுத்தடி வைக்க எட்டு மாதங்கள் ஆகின்றன.!

இறைவன் இயற்கையின் வாயிலாக மனிதனுக்கு பல செய்திகளை பகிர்ந்துள்ளான். அதை சரியாக புரிந்து கொள்வதில் தான் வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது. மேற்கூறப்பட்ட உதாரணம் இரண்டு தகவல்களை எமக்கு தெரிவிக்கின்றது. ஒன்று எமது பாதுகாப்பு நாம் சொந்த காலில் நிற்பதிலேயே தங்கியுள்ளது. இரண்டாவது எமது வாழ்க்கைக்கான ஜீவனோபாயத்தை நாமே தெரிந்து கொண்டு அடியெடுத்து வைக்கவேண்டும்.

எமது நாட்டில் சில வருடங்களுக்கு முன்புவரை யுத்தம் நிமித்தமான அசாதாரண நிலைமை ஒன்று மூன்று தசாப்தங்களாக நீடித்தது. எமது மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்ததுடன், இடம் பெயரவும் நேரிட்டது. உயிரிழப்புக்கள் ஏற்பட்டது. பலர் அவயவங்களை இழந்தார்கள். பலர் பெற்றோர், சகோதரங்கள், கணவன், மனைவி என்ற உறவுகளை இழக்க நேரிட்டது. குழந்தைகளையும் பெண்களையும் பாதுகாத்துக்கொண்டிருந்த உயிர்கள் பறிக்கப்பட்டன. அல்லது சிறையில் அடைக்கப்பட்டன. வன்னியில் சொந்த நிலப்பரப்பில் விவசாயம், பயிர்செய்கை, கால்நடைவளர்ப்பு ஆகிய முயற்சிகளின் மூலம் சொந்த காலில் நின்ற மக்கள் என்ன செய்வதென்று அறியாது திகைத்தார்கள்.

அப்போதுதான் வெளிநாடுகளிலிருந்து எம் மக்கள் நோக்கி உதவிக்கரம் நீண்டது. அவையே அரசசார்பற்ற நிறுவனங்களாகும். உண்மையில் அரசசார்பற்ற



வீ.என்.சந்திரகாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் மக்களுக்கு இலவசமாக பணத்தை வாரி இறைக்கவில்லை. அவை மக்கள் சொந்தகாலில் நிற்ப தற்கும் தமது எதிர்காலத்தை நல்ல முறையில் அமைப்பதற்குமே உதவி செய்தன. அவர்களது பிரதான நோக்கம் மக்களை வலுவூட்டி அவர்களது வாழ் வாதாரத்தை கிடைக்கும் வளங்களை கொண்டும் சுய ஆற்றலுடனுன் அபி விருத்தி செய்தலாகும்.

அந்த நடைமுறை உண்மையை மக் கள் ஒவ்வொருவரும் தமது மனதில் இருத்தல் கட்டாயமானதாகும். நாம் மற்றவர்களின் உதவியில் தங்கியிருப்ப வர்களாக இருந்தால் அவர்களது உதவி கிட்டாமல் போகும் சந்தர்ப்பத்தில் எங் கள் நிலை என்ன?

அதனால் தான் கல்வி அமைச்சு கூட ஒரு செயற்திட்டத்தை முன்னெடுக்க உத்தேசித்துள்ளது. அதன் பிரகாரம் க.பொ.த உயர்தரத்தை பூர்த்தி செய்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப் பெற்ற ஒவ்வொரு மாணவனும் ஆறுமா தகால தொழில் கல்வி ஒன்றை கட்டாய மாக பெறவேண்டும்.

ஒரு மாணவன் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் போது உத்தியோகத்தை மட்டும் நம்பியிருப் பதால் அவன் அரசாங்கத்துடனும் ஏன் பெற்றோருடனும் கூட முரண்படுகின் றான். ஆனால் அவன் தொழில்கல் வியை கற்றிருப்பானேயானால் தனது கற்கை முடிவுற்று வெளியேறியதுமே ஒரு வருவாயை ஏற்படுத்திக்கொண்டு சொந்தக்காலில் நிற்கக்கூடியதாக இருக் குமல்லவா?

அதுவே நம் ஒவ்வொருவருக்கும் வேண்டுவதாகும். எமது திறமையை நாமே புரிந்து கொள்ள வேண்டும். விஞ் ஞானம், கைத்தொழில், பொறியியல், சட்டம், விளையாட்டு, எழுத்தாற்றல் ஓவியம், ஹோட்டல் முகாமைத்துவம், மருத்துவம் என்று பல துறைகள் இருந் தாலும் நாம் அவற்றில் பிரகாசிக்க கூடிய தொழில்கள் சிலவாகவே இருக்கும். நாம் தெரிவு செய்யும் துறை களில் எமது திறனை வேக மாக வளர்த்துக்கொள்ள வேண்டும். அது அத்துறையில் மற்றவர்களுக்கு இருக்கும் திறனை விட குறைந்ததாக இருக்கக்கூடாது. அதே சம யம் நாம் நிபுணத்துவம் பெற்ற துறை யில் காலதாமதம் செய்தலாகாது. அது எமது சந்தர்ப்பத்தை மற்றவர்களுக்கு வழங்குவதாக முடிந்துவிடும்.

அதே சமயம் மற்றவர்கள் அவரவர் துறையில் வேகமாக முன்னேறி இருப் பர். புகழின் உச்சிக்கும் சென்றிருப்பர். தமது சொந்தகாலில் நிற்பதிலும் வெற்றி பெற்றிருப்பர்.

அதை பார்த்து சோர்வுறக்கூடாது. பெரும் பெரும் தலைவர்களினதும், மகான்களினதும் அவதார புருஷர்களி னதும் வெற்றிக்கான காரணங்களை புரிந்து கொண்டு நாமும் அவ் வழியில் வேகமாக முன்னேற முயற்சிக்க வேண் டும்.

அதைவிடுத்து மற்றவர்களைப் பார்த்து பொறாமை, வெறுப்பு, பகை உணர்வு கொண்டு எமது திறமையை மழுங்கடிக்கக் கூடாது. அது அனாவசிய நேர விரயத்திற்கும், வீழ்ச்சிக்கும் வழி வகுக்கும்.

சோம்பல் உங்களை அண்டவிடாது அகற்றுங்கள். மனச்சோர்வுதான் சோம்ப லுக்கு ஆதாரம். எமது தாழ்வு மனப்பான் மைதான் மனச்சோர்வுக்கான காரண மாகும். சிலர் வீட்டின் ஒரு மூலையில் அமர்ந்திருந்து சிந்தித்துக்கொண்டிருப் பர். அதனால் எந்த இலாபமும் ஏற்ப டப்போவதில்லை.

முயற்சி செய்யாமல் முன்னேறமுடி யாது. எம் மீதான எம் நம்பிக்கைதான் வெற்றி தரும். சிந்தியுங்கள். அதை விரைந்து செயற்படுத்துங்கள்.

மற்றவர்கள் உதவியில் தங்கியிருப் பதை அவமானம் என உணருங்கள். அந்த ஒரு உணர்வே வெற்றிக்கான உந்து சக்தி யாக அமைந்து விடும். உங்களுக்கு உதவுபவர்கள் உங்கள் பெற்றோராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இருக்கலாம். அவர்களை எதிர்பார்க்காது உங்களுக்கான ஜீவனோபாயத்தை நீங்களே அமைத்துக்கொள்ளுங்கள். அது எந்தத் தொழிலாகவும் இருக்கலாம். செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள். அனாவசிய கௌரவத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். சிறிது சிந்தித்துப் பாருங்கள். எத்தனை பெற்றோர் கூலி வேலை செய்தும் கூட தமது பிள்ளைகளை பொறியியல் பீடத்திற்கும் மருத்துவ பீடத்திற்கும் அனுப்பி கல்வி கற்க வைத்திருப்பார்கள். அவர்கள் தமது தொழிலில் கௌரவத்தை பார்த்திருந்தால் உங்களை நல்ல நிலைக்கு ஆளாக்க முடியுமா? நீங்கள் மட்டும் எந்த வகையில் விதிவிலக்காவீர்கள்.

உங்களுக்கு உதவி செய்தவர்களை தாங்க வேண்டும் என்ற நல்லெண்ணம் உங்களிடம் இருக்கின்றதா? அப்படியாயின் உடனே உங்களை சொந்தக்காலில் ஸ்திரப்படுத்திக்கொண்டு அவர்களை ஆராதியுங்கள். இன்று என்பதே உண்மை. நாளை என்பதும் பின்னர் என்பதும் உங்களுக்கு எட்டாமலே போகலாம். உங்களுக்கு உதவி புரிந்தவர்களின் இறப்பில் நீங்கள் சிகரத்தை தொட்டால் கூட பிரயோசனம் இல்லை.அவர்கள் முன்பாகவே சிறப்புற வாழ்ந்து காட்டுங்கள்.

இன்னும் சொல்லப்போனல் பிறர் உதவியில் தமது இளமை காலத்தை கழித்தவர்கள் முதிர்ச்சியில் முயற்சியில் ஈடுபட முடியாது. மறுவளமாக நாம் மற்றொரு விடயத்தையும் கருத்துக்கு எடுக்க வேண்டும். அது நாம் பிறருக்கு உதவிசெய்தல் ஆகும்.

எம்மை சார்ந்தவர்களுக்கு நாம் செய்யக்கூடிய பெரும் உதவி அவர்களை விரைந்து அவர்களது சொந்த காலில் நிற்க கூடியதாக உருவாக்குவதே. அவர்கள் முழுமை பெற்றவர்களாக உருவாக்கினால்தான் சமுதாயத்திற்கு உதவ முடியும். சமுதாயம் நம் கண்முன்னால் அவர்களை போற்றும். நாமும் மகிழ்ச்சியடைவோம். பலர் சுயநலமிகளாக வளர்ந்துவிடுகிறார்கள். அவர்களால் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் எந்த விமோசனமும் ஏற்படாது. எம்மை சார்ந்தவர்கள் பொது நல சிந்தனையுடன் வளர்வதை நாம் உறுதி செய்து கொள்ளல் வேண்டும். அதுவே நமக்கு பெருமையை குவிக்கும்.

பாத்திரம் அறிந்து பிச்சை போடு என்று ஒரு பழமொழி உண்டு. ஒருவனது தகுதியையும் தேவையையும் அறிந்தே உதவி செய்ய வேண்டும். ஒருவனை கெடுக்க திட்டமிட்டால் அவன் கையில் பணத்தை கொடு என்று சொல்லுவார்கள்.

எமது பிள்ளைகளுக்காயினும் பணத்தையும், செல்லத்தையும் தொடர்ந்து கொடுத்தால் அது உருப்படாமல் போய் விடுமல்லவா? எனவே உதவி செய்யும் விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும்.

பதினெட்டு வயதின் மேல் குழந்தைகள் பருவ வயதை அடைகின்றார்கள். பிள்ளைகள் சிறு வயது முதலே பெற்றோரின் வழிகாட்டலில் வளர்பவர்கள். அவர்களது வளர்ச்சிக்கேற்ப அவர்களை சுயமாக சிந்திக்கவும் சுயமாக தமது கடமைகளை நிறைவேற்றவும் தகுந்தவர்களாக உருவாக்க வேண்டும். அவர்களை சுயசம்பாத்தியத்தில் வாழ வழிகாட்டவேண்டியது பெற்றோரின் கடமையாகும். தவறின் அவர்கள் பொற்றோரில் தங்கியிருப்பதில் சுகம் காண்பதுடன் வரட்டுக்கௌரவம் பேசிக்கொண்டு எந்த தொழிலும் தமக்கு, தமது தகுதிக்கு ஏற்றதல்ல என்று பெருமை பேசித்திரிவர்.

ஒரு சமயம் அவரது பெற்றோர் இறந்து விட்டால் செய்வதறியாது மலைத்துநிற்பார். அல்லது சகோதரர்களின் உதவிக்காக கையேந்துவர்.

சரி இனி எமக்கென்று பொதுவாக ஒரு பணி இருக்குமாக இருந்தால் அது பிறர் உதவியில் தொடர்ந்து வாழ்பவர்களை அடையாளம் கண்டு ஒதுக்குவதே ஆகும்.!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பர். அந்த குடும்பத்தை தாங்குகின்ற இடமே வீடு எனப்படுகின்றது. வீடு என்பது சந்தோசச் சாரல்கள் சொரியும் இடம். இன்பங்கள் பூக்கும் நந்தவனம். அதனை மெருகூட்டுவதும் தரிசல் நிலமாக்குவதும் அந்தக் குடும்பத்திலுள்ள உறவுகளின் கைகளிலேயே தங்கியுள்ளது.

முக்கியமல்லவா? ஏனோ, தானோ எனச்சமைக்கும் உணவு ருசிப்பதில்லை. ருசியான உணவில் சமைப்பவரின் அன்பும் அக்கறையும் கலந்திருக்கும். நேரம் எடுத்து பார்த்துப் பார்த்து அவர்கள் செய்து தரும் உணவினை இப்படியா சாப்பிடுவது? அதனைத் தயாரித்தவரின் கைப்பக்குவத்தை



# கூடிக்குலவி உண்போம்

வீட்டிலுள்ள அனைவரும் ஒரு நேரமாவது ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணவேண்டும். பண்டிகை, பிறந்தநாள் போன்ற விசேட நாட்களில் கூட ஒன்றாக அமர்ந்து உண்ணும் பழக்கம் அருகிவருகின்றது. சாப்பாட்டு அறை என்பது குதூகலம் நிறைந்த இடமாக மாறவேண்டும். ஒரு வேளையேனும் வீட்டிலுள்ள அனைவரும் மகிழ்வுடன் கதைத்தபடி உணவு உண்பது அவசியமானது. அதன்போது ஏற்படும் மகிழ்வும் சுகிப்பும் நிறைந்த உணர்வானது குடும்ப வளர்ச்சிக்கான பலமாகும்.

இன்றைய காலத்தில் அவரவரது படிப்பு மற்றும் வேலைப்பழு போன்ற காரணங்களால் அவரவருக்கு பிடித்த நேரத்தில் உணவைப் போட்டு உண்பது வழக்கமாகியுள்ளது. ஒரு சிலர் தட்டிலே உணவை எடுத்துக்கொண்டு தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்துவிடுவார்கள். வேறு சிலர் கணினிக்கு முன்னால் அமர்ந்துவிடுவார்கள். வெற்றுப் பையினுள் பொருட்களை நிறைப்பது போல உணவை உண்டு விட்டு எழுந்துகொள்வார்கள்.

வயிறு நிறைந்தால் போதும் என்ற நினைப்பு போதுமா? உடல் ஆரோக்கியத்திற்கு உணவு எந்தளவிற்கு முக்கியமோ அதே அளவிற்கு அவ் உணவினைத் தயாரிப்பது

சொல்லிச்சொல்லி அனுபவித்துச் சாப்பிட வேண்டாமா? சாப்பிட்டுவிட்டு அதனைப் பாராட்டும் போது யாருக்குத்தான் அந்த இன்பம் கசக்கும்? அம்மாவோ மனைவியோ அக்காவோ தங்கையோ அல்லது வேறுயாரோ உங்கள் பாராட்டால் உளம்குளிர்ந்து போவார்கள் என்பது நிஜம்.

உணவு என்பது கடவுளுக்குச் சமனானது என்பது தான் ஆன்றோர் வாக்கு. உணவிலிருந்து தான் மனது உண்டாகிறது. உணவு என்பது வாய் வழியாக உண்பது மட்டுமல்ல. கண், காது, மூக்கு. தோல், வாய் இவற்றின் வழியாகச் செல்வது எல்லாமே உடலுக்கான உணவுகளே. ஐந்து ஆகாரமும் நன்றாக இருந்தாலே மனது ஆரோக்கியமாக இருக்கும். அப்போது தான் மனம் மகிழ்வடையும். அந்த மகிழ்வே குடும்ப சந்தோசத்தின் உயிர்நாடி.

ஒன்றாக அமர்ந்து உண்ணும் போது தேவையற்ற விடயங்களைப் பேசாது மகிழ்ச்சியான, ஆக்கபூர்வமான, நல்லவிடயங்களை மட்டுமே பேசவேண்டும். இன்று முதல் ஒரு வேளையேனும் கூடியிருந்து உணவு உண்டு பாருங்கள், குடும்பத்தில் பல பிரச்சினைகள் காணாமல் போய் வீட்டில் இன்பம் பொங்கும்.

தமிழரசி (நன்றி சினேகிதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









பத்திரிகைகளிலும் தமிழ் வானொலியிலும் தனது இலக்கியத்தடங்களைப் பதித்திருந்தார். பாரதியாரின் கவிதைகள் மீது தீராத பற்றுக் கொண்டிருக்கும் இவர் தனது மகள் அனன்யா வையும் அவ்விதமே வளர்த்திருப்பதில் வியப் பேதுமில்லை. இயற்கையோடு இணைந்த இலக்கியத்தினையும் கிராமத்து வாசனைகளை நுகரும் கணங்களையும் தந்த வானொலி ஒன்றோடு தனது ஆரம்பகால இலக்கியப்ப யணம் தொடர்ந்ததாக கூறுகின்றார். இலத்திர னியல் சாதனங்களின் பாவனை பெருகிவிட்ட இக்காலத்திலும் தனது சிந்தனை வளமானது புத்தகங்களின் மூலமே வளப்படுத்தப்படுவ தாக கூறுகின்றார். இவரது படைப்புகள் இந் தியாவின் தமிழ்நாட்டில் வெளிவரும் ஒரு சிறந்தசஞ்சிகையான முற்றம் சஞ்சிகையிலேயே வெளிவருவதாக கூறுகின்றார். தனது மகள்

# கண்ணில் தெரியுதடி கண்ணம்மா

காலம் பல வித சாதனையாளர்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது. தேசத்தை நேசிக்கும் கலைஞர்களைத் தந்துகொண்டிருக்கின்றது.

அத்தகைய சாதனையார்கள் ஒவ்வொருவரது சாதனைகளும் அடையாளப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப் படவேண்டியது அவசியமாகும். அந்த வகையிலேயே புலம்பெயர் தேசமான லண்டனில் வசிக்கும் தமிழ்ப் பெண்ணான எட்டு வயது நிரம்பிய அனன்யாவின் சாதனை பற்றிய பதிவினை இங்கு பதிவிடுகின்றோம்.

தமிழின் மீதும் தமிழ் இனத்தின் மீதும் தீராத பற்று கொண்டுள்ள அனன்யாவின் இத்தகைய பற்றிற்கு அவரது தந்தையார் மற்றும் தாயார் இருவரினதும் ஒப்பற்ற தூரநோக்கான சிந்தனையே காரணமாகும். கவிஞரும் எழுத்தாளருமான தங்கராஜா ரஜீந்திரன் அவர்கள் முன்னைய காலங்களில்



நேர்காணல் து. திலக் (கிரி)
சுவிற்சர்லாந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA ... LIBRARY
PERIODICAL



மாதம் ஒரு முறை தேசிய ரீதியான திருத்தற் சேவையுடன் உங்கள் பிள்ளைகளின் (2018) பரீட்சைப் பெறுபேற்று அடைவினை அறிந்துகொள்வதற்கு ஒளிஅரசி நடத்தும் தனித்துவப் பரீட்சை



செயற்றிட்டம் தரம் - 5

# சிங்கள மொழிபெயர்ப்பு மாதிரி வினாத்தாள்

## 5 வினாத்தாள் I, II 2018 நேரம் : 2 மணித்தியாலம்

**★ 1, 2 ஆகிய வினாக்களில் நான்கு அடைப்புக்களில் மூன்றில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த அடைப்பை தெரிவு செய்க.**

01) 01.  02.  03.  04. 

02) 01.  02.  03.  04. 


03) கமலனின் ஊருக்கு ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றது. காலையில் பாடசாலை மாணவர்களையும் வேலைக்குச் செல்பவர்களையும் எற்றிவரும் பேருந்து மாலை ஐந்து மணிக்கு மீண்டும் அவனது ஊருக்குத் திரும்பிச் செல்லும். தினமும் தவறாது பாடசாலைக்கு பேருந்தில் வரும் கமல் இன்று பாடசாலைக்கு வரவில்லை. அதற்குரிய காரணமாக இருக்கக்கூடியது,

1. பேருந்து தரிப்பிடத்தில் நிற்காமல் சென்றமை.
2. பேருந்து சேவையில் ஈடுபடாமை.
3. பேருந்தை அவன் தவறவிட்டமை
4. பேருந்தின் சாரதி வேலைக்குச் செல்லாமை.

04) விமலின் அக்கா பொதுஅறிவு வினாக்களிற்கு விடை அளிப்பதில் கெட்டிக்காரி. அவளை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒருநாள் விமலனின் வீட்டிற்கு வந்த அவனது நண்பனின் தங்கை கேட்டபொது அறிவுக் கேள்விக்கு விமலின் அக்காவால் விடை அளிக்க முடியவில்லை. இந்நிகழ்விற்கு பொருத்தமான பழமொழி,

1. நிறைகுடம் தழும்பாது.
2. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
3. ஆனைக்கும் அடி சறுக்கும்
4. கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

**★ விமலின் நகரத்தில் பாடசாலை, சந்தை, கோயில், வீடு ஆகியன அமைந்துள்ள விதமும் அவற்றை இணைக்கும் வீதிகளும் உருவாக்கப்படுகின்றது. இத்தரவிற்கேற்ப 5ஆம், 6ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




05) வீட்டில் இருந்து காலையில் கோயிலுக்குச் சென்று வழிபட்ட பின்னர் பாடசாலைக்குச் சென்றான். அவன் சென்ற மொத்த தூரம் எவ்வளவு?


1. 1km 150m
2. 1km450m
3. 500m
4. 1km

06) பாடசாலையிலிருந்து சந்தைக்குச் சென்று பின்னர் வீடு செல்ல எடுக்கும் மிகக் குறைந்த தூரம் எவ்வளவு?


1. 1km 300m
2. 1km 400m
3. 1km 200m
4. 1km 100m



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


07) 

01. வேகம் - ஊனுண்ணி - நாடு
02. வேகம் - ஊனுண்ணி - காடு
03. வேகம் - ஊனுண்ணி - பாலைவனம்

08) 

01. விவசாயிகளின் எதிரி - தோட்டமண் - விவசாயம்
02. விவசாயிகளின் நண்பன் - மணல்மண் - விவசாயம்
03. விவசாயிகளின் நண்பன் - தோட்டமண் - விவசாயம்

09) படத்தை நன்கு அவதானித்து சரியான விடையின் கீழ் கோடிடுக.




01. பாய்க்கப்பல் நடுக்கடலை நோக்கி செல்கிறது.
02. பாய்க்கப்பல் கடலில் செல்லுகின்றது.
03. பாய்க்கப்பல் தத்தளிக்கின்றது.

✱ **10ஆம், 11ஆம் வினாக்களிற்கு வேறுபட்ட சொல்லைக் கொண்ட கூட்டத்திற்கு கோடிடுக.**

10) 01. குழந்தை - சிறுவர் - இளைஞர் - முதியவர்
02. உழவர் - பணக்காரர் - வைத்தியர் - ஆசிரியர்
03. வானொலி - பத்திரிகை - இணையம் - தொலைக்காட்சி
04. தமிழ் - சிங்களம் - ஆங்கிலம் - தெழுங்கு

11) 01. காற்சட்டை - மேற்சட்டை - பாவாடை - சேலை
02. பலாப்பழம் - மாம்பழம் - பப்பாசிப்பழம் - விளாம்பழம்
03. கதிரை - மேசை - அலுமாரி - கட்டில்
04. கத்தரிக்காய் - வெண்டிக்காய் - தேங்காய் - பூசணிக்காய்

✱ **தரப்பட்ட உருவை அவதானித்து 12ஆம் 13ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**



12) தரப்பட்ட உருவில் கூடுதலாக உள்ள உரு எது?

01. ↑ 02. → 03. ↓ 04. ←

13) → எத்தனை உள்ளது?

01. 5 02. 6 03. 7 04. 8

✱ **மிருகக்காட்சிச்சாலையில் அனைத்து பறவைகளையும் மிருகங்களையும் மட்டும் பார்வையிட்ட நசீர், தான் 50 தலைகளையும் 130 கால்களையும் பார்வையிட்டதாகக் கூறினான். இவற்றைக் கொண்டு 14ஆம், 15ஆம் வினாக்களிற்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

14) மிருகக்காட்சிச் சாலையில் உள்ள மிருகங்கள் எத்தனை?

01. 10 02. 12 03. 15 04. 18

15) மிருகக்காட்சிச் சாலையில் உள்ள பறவைகள் எத்தனை?

01. 35 02. 37 03. 43 04. 50


16) துளசியின் பிறந்த ஆண்டு 2015 ஆகும். அவளது அண்ணன் சுரேஸ் துளசியைவிட ஐந்து வருடங்கள் கூடுதலாகும். எனவே துளசியின் அண்ணன் பிறந்த நூற்றாண்டு,





01. 18ஆம் நூற்றாண்டு 02. 19ஆம் நூற்றாண்டு
03. 20ஆம் நூற்றாண்டு 04. 21 ஆம் நூற்றாண்டு

17) கஸீமினுடைய பாடசாலை சென்ற வருடம் வைர விழாவைக் கொண்டாடியது எனின், அவனுடைய பாடசாலை ஆரம்பித்த ஆண்டு எது?


01. 1957ஆம் ஆண்டு 02. 1948ஆம் ஆண்டு
03. 1933ஆம் ஆண்டு 04. 1908ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

18)  இவ்வுருவை தாள் ஒன்றில் வரைந்து முகம் பார்க்கும் கண்ணாடியில் காட்டும்போது தோன்றும் சரியான விதம்,

01.  02.  03.  04. 

19) இவ்வுருவில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?



01. 16 02. 20 03. 23 04. 25

★ **ஹசனும், சிவனும் தம்மிடமுள்ள பணத்தை ஒப்பிட்டுப் பார்த்தனர். ஹசன் ''எனக்கு நீ நூறு ரூபாய் கொடுத்தால் உன்னைப்போல் இரண்டு மடங்கு பணம் உள்ளவனாவேன்.'' என்றான். சிவன் ''நீ எனக்கு பத்து ரூபாய் தந்தால் நான் உன்னைப்போல் ஆறு மடங்கு பணமுள்ளவன் ஆகிவிடுவேன்.'' என்றான். இச்சம்பாசணையை அடிப்படையாகக் கொண்டு 20ஆம், 21ஆம் வினாக்களிற்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

20) ஹசனிடம் உள்ள பணம் எவ்வளவு?


01. ரூபா 30.00 02. ரூபா 40.00 03. ரூபா 50.00 04. ரூபா 55.00

21) சிவனிடம் உள்ள பணம் எவ்வளவு?

01. ரூபா 170.00 02. ரூபா 178.00 03. ரூபா 180.00 04. ரூபா 190.00

22) கரீஸ் தனது வீட்டில் இருந்து தெற்கு திசைநோக்கி சிறிது தூரம் சென்று, பின் மேற்கு நோக்கித் திரும்பி சிறிதுதூரம் சென்று, மீண்டும் அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று பின் மீண்டும் இடப்பக்கம் திரும்பி நின்றான் எனின், அவன் தனது வீட்டில் இருந்து தற்பொழுது எத்திசையில் நிற்கிறான்?

01. வடக்கு 02. கிழக்கு 03. தெற்கு 04. மேற்கு

★ 

**கீழே தாயக்கட்டையை ஒத்த சதுரமுகி ஒன்றை செய்வதற்காக வெட்டப் பட்ட கடதாசி மட்டையின் படம் தரப்பட்டுள்ளது. படத்தை அடிப் படையாகக் கொண்டு 23ஆம் 24ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

23)  இதற்கு எதிர்பக்கத்தில் வரும் உரு யாது?

01.  02.  03.  04. 

24)  இதற்கு எதிர்பக்கத்தில் வரும் உரு,

01.  02.  03.  04. 

★ **பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 25ஆம், 26ஆம் வினாக்களுக்கு விடைதருக.**

 +  = 600.00  +  = 475.00

 +  = 425.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25)  ஒன்றின் பெறுமதி யாது?

01. ரூபா 325.00 02. ரூபா 275.00 03. ரூபா 150.00 04. ரூபா 75.00

26)  +  = இன் பெறுமதி யாது?

01. ரூபா 650.00 02. ரூபா 550.00

03. ரூபா 300.00 04. ரூபா 50.00

27) 12 + [47 - 18] = 41 கட்டத்தில் தரப்பட்ட கணிதச் செய்கைக்கு சமனான கணிதச் செய்கை எது?

01. [87 - 28] 02. [59 - 40] 03. [67 - 38] 04. [59 - 41]

28) காந்தியின் அம்மா சுகந்தியின் அப்பாவின் அக்கா ஆவார் எனின், சுகந்தியின் அப்பாவிற்கு காந்தி என்ன உறவு முறை?

01. மச்சான் 02. மருமகன் 03. மாமா 04. பெரியப்பா

29) பஸ்ருக்கின் அப்பாவின் வயதைக் கேட்டால் அவர் நேரடியாகச் சொல்லமால் இவ்வாறு கூறினார். என் வயதில் உள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 வரும். அவ்விரு எண்களையும் இடமாற்றினால் என்வயதில் ஒன்பது கூடிவிடும் என்றார். அப்படியானால் பஸ்ருக்கின் அப்பாவின் வயது யாது?

01. 27 வயது 02. 36 வயது 03. 45 வயது 04. 54 வயது

30) காலையில் பாடசாலை செல்லும் பிரசாத்தின் நிழல் அவனது வலப்பக்கம் விழுந்தது எனின், அவனது பாடசாலை எத்திசையில் உள்ளது?

01. வடக்கு 02. கிழக்கு 03. தெற்கு 04. மேற்கு

✸ **பின்வரும் பாடல் வரியை வாசிக்க.**

''சுத்தம் தெருவில் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்
வண்ணக் குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத்தாயும் நீயாவாய்...


31) இப்பாடலில் குறிப்பிடப்படும் பறவை எது?

01.  02.  03.  04. 




✸ **பின்வரும் பாடல் வரியை வாசித்து அவற்றை அடிப்படையாகக்கொண்டு 32ஆம், 33ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

புறப்படுவோம் மச்சான் புறப்படுவோம்
கட்டு வலையை எடுத்துக்கிட்டு புறப்படுவோம்
கடல் கடந்து செல்வதற்கு தோணியுமுண்டு
கட்டைச்சுறா உழுவை மீன் கடலிலே உண்டு...

32) இப்பாடலில் குறிப்பிடப்படும் தொழில் எது?


01.  02.  03.  04. 

33) கடல் கடந்து செல்ல உதவுவது எது?

01.  02.  03.  04. 



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34) 


8cm ஒருபக்க நீளமுடைய சதுரவடிவான கடதாசி மட்டை ஒன்றின் மேற்பரப்பில் 1cm ஒருபக்க நீளமுடைய சிறிய சதுர வடிவான ஒன்றை பலவர்ணத்தில் வெட்டி ஒட்ட வேண்டும். இம்மட்டையை பூரணமாக ஒட்டி முடிக்கத் தேவையான சிறிய வர்ண கடதாசிகள் எத்தனை தேவை?

01. 5 02. 8 03. 10 04. 12

★ **ஒரு புடைவைக்கடை ஒன்றில் புடைவைகளின் விலை பின்வருமாறு குறிக்கப்பட்டிருந்தது.**

- ● சேலை - KSLY
- ● சேட் - LKY
- ● சட்டை - LYY

**ஒரு சேலையின் விலை ரூபா 5360.00 எனின்**

35) சேட் ஒன்றின் விலை யாது?

01. ரூபா 750.00 02. ரூபா 650.00 03. ரூபா 700.00 04. ரூபா 620.00

36) சட்டை ஒன்றின் விலை யாது?

01. ரூபா 600.00 02. ரூபா 500.00 03. ரூபா550.00 04. ரூபா 650.00

★ **பின்வரும் குறியீடுகளுக்குரிய சொற்களை வைத்து 37ஆம் 38ஆம் வினாக்களிற்கு விடை தருக.**




37)  என்பதன் அர்த்தத்தை எழுதுக.

PERIODICAL
JAFFNA DI... LIBRARY

..............................................................................................

38) நாம் சுற்றுலாவிற்கு சென்றோம் என்பதைக் குறியீட்டில் தருக.

..............................................................................................

39) முதல் எழுத்து தண்ணீரில் உண்டு கண்ணீரில் இல்லை. இரண்டாவது எழுத்து வரத்தில் உண்டு மரத்தில் இல்லை. இறுதி எழுத்து கம்பியில் உண்டு கப்பியில் இல்லை அச் சொல் எது?

..............................................

40) முதல் எழுத்து தேங்காயில் உண்டு மாங்காயில் இல்லை. இரண்டாவது எழுத்து மயிலில் உண்டு மதிலில் இல்லை. இறுதி எழுத்து இலையில் உண்டு இழையில் இல்லை அச் சொல் எது?

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் - II

01) **பின்வரும் பாடலை வாசிக்க.**

துள்ளித் துள்ளி, ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சிப் பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா

**பாடலில் இருந்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) உடல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லைத் தருக. ..........................................

02) கூடி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தருக. ..........................................

03) பின்வரும் சொற்களின் எழுத்து வழக்குச் சொல்லை எழுதுக.

அ) ஓடுது .................................... ஆ) மெல்ல ..........................................

04) பாடலிலுள்ள பெயரடைச் சொல் ஒன்று தருக. ..........................................

05) பாடலிலுள்ள பெயரெச்சம் ஒன்று தருக. ..........................................

06) இங்குள்ள ஒரு உவமானத்தை எழுதுக. ..........................................

07) இப்பாடலிலுள்ள இணைமொழி ஒன்று எழுதுக. ..........................................

08) இப்பாடலில் இடம்பெறும் உயர்திணை தன்மைப் பெயர்ச் சொல் ஒன்று தருக.

..........................................

02) **பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

01) நாளை வரும்போது புதிய அழிப்பான் ஒன்று கொண்டுவர வேண்டுமென்று ஆசிரியர் கூறினார்.

02) சத்தியா அதை உன்னால் செய்ய முடியுமா

03) **பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

01) கத்தரிக்காய் .......................................... உருசியாக இருந்து.
(குலம்பு, குளம்பு, குழம்பு)

02) பேருந்து .......................................... சாமர்த்தியமாக விபத்தை தவிர்த்தார்.
(ஓட்டுநர், ஓட்டுணர், ஓட்டுனர்)

03) கைகூடுதல் என்ற மரபுச்சொல் குறிப்பது,
(ஒன்று சேர்தல், சித்தியடைதல், இணைதல்)

04) சுகந்திரமற்று வாழ்பவன்
(அநாதை, அகதி, அடிமை)

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) பின்வரும் சுருக்கத்தின் கருத்தைத் தருக.

01) இ.போ.ச ................................................

02) ப.நோ.கூ.ச ................................................

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

05) பத்து ஆண்டுகளை எவ்வாறு கூறுவர்? ................................................

06) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை எழுதுக.



01) He is ................................................ the plants.
(Bathing, Washing the , Watering, Drinking)

02) தோட்டம் என்ற சொல்லுக்குரிய ஆங்கிலச்சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

................................................

✱ பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

07) தயவு செய்து அமைதியாக இருங்கள்.

................................................

✱ 8,9, 10 ஆம் வினாக்களிலுள்ள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

08) Let's go home - ................................................

09) ஹால் கிலோவக் கியத? ................................................

10) ருபியல் அசுவாய் ................................................

✱ நாம் சென்ற கல்விச் சுற்றுலா என்னும் தலைப்பில் எழுவாய், பயனிலை தொடர்புடைய வகையில் நான்கு சொற்களுக்கு குறையாத கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக.

11) ................................................


12) ................................................

13) ................................................

✱ விடை எழுதுக.

12) 4000 + 000 + 50 + 5 என்பதால் வகைக் குறிக்கப்படும் எண்ணை எழுதுக.

................................................

13) 

அருகிலுள்ள இலக்கக்கடிகாரத்தில் நள்ளிரவு 12:30 என்பதை சரியாக எழுதவும்.

14) 150m நீளமான விளையாட்டு மைதானத்தை நாதச் சில் ஒன்றினால் அளந்தால் எத்தனை மணி ஒலி கேட்கும்?

................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) ஒரு பக்கத்தில் சிகிரியாக்குன்றும், அதன் மறுபக்கத்தில் அதன் ஓவியமும் வரையப்பட்ட தாள் காசு எது?

..............................

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

★ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) மாட்டின் பற்களின் எண்ணிக்கை,
01. 8 02. 20 03. 32 04. 42

17) வேறு தாவரமொன்றின் தண்டின் மீது ஒட்டிக் காணப்படும் நிலத்துடன் தொடர்புடைய தாவரம்,
01. வெற்றிலை 02. மிளகு 03. அடம்பன் 04. மேலோட்டிப்பன்னம்

18) விலங்கு உணவான பிண்ணாக்கு பெறக்கூடிய வித்து,
01. குரக்கன் 02. எள்ளு 03. இறுங்கு 04. சாமை

19) நாய் நோய் வாய்ப்பட்டிருக்கும் போது விரும்பி உண்ணும் தாவரம்,
01. குப்பைமேனி 02. நாயுருவி 03. பாலறுகு 04. துளசி

20) சூரிய வெப்பத்தை தவிர்ப்பதற்காக பெரிய கல்லின் கீழ் ஒளிந்து கொள்ளும் பிராணி,
01. பல்லி 02. தேரை 03. ஆட்காட்டி 04. ஓணான்

21) நெற்கதிர், மிளகாய் போன்றவற்றிற்கு சேதம் விளைவிக்கும் பிராணி,
01. கிளி 02. அழுக்கணவன் 03. எலி 04. முட்டைப்பூச்சி

22) கோடைக் காலங்களில் உடலிலிருந்து வெளியேறும் நீரிழப்பை ஈடுசெய்ய உண்ணக் கூடிய பழம்,
01. அன்னாசி 02. தூரியன் 03. பலா 04. வெள்ளரி

23) சந்திரனின் உட்புற வளைவு எத்திசையை நோக்கியுள்ளது?
01. வடக்கு 02. தெற்கு 03. கிழக்கு 04. மேற்கு

24) காந்தம் பயன்படுத்தாத கருவி ஒன்று,
01. டைனமோ 02. காற்றுத்திசை காட்டி
03. காற்று வேகமானி 04. மின்மானி

25) குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அரசினால் வழங்கப்படும் போசாக்கு உணவு,
01. திரிபோசா 02. இலைக்கஞ்சி 03. பால் 04. முட்டை

**பெற்ற புள்ளிகள்** [ ]

.............................. ..............................
**மேற்பார்வையாளர் ஒப்பம்** **பொறுப்பாசிரியர் ஒப்பம்**

**குறிப்பு : இப் பரீட்சைத் தொடரில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களும் இவ் வினாத்தாளின் புள்ளியிடல் திட்டமும் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

தனது மொழியை கற்றுக்கொள்ளாது பெற்றுக்கொள்ளவேண்டும் எனும் எண்ணத்தில் அனன்யாவின் மழலைப்பருவத்திலேயே திருக்குறளையும் தமிழ் எழுத்துக்களையும் பார்ப்பதற்கும் பழகுவதற்கும் வழிசமைத்திருக்கின்றார். நாங்கள் வசிக்கும் நாட்டில் தமிழ் மொழி என்பது பெரிதானதாக மதிக்கப்படவில்லை. அதைக்கண்டு நான் மிகவும் பயந்தேன். புரட்சி என்பது முதலில் மொழியில் இருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும். அவளது சிறு பராயத்தில் எனது தாயாரும் நானும் பலவற்றை தியாகம் செய்தே அவளை எமது மொழியோடு இணைத்தோம். ஆரம்பத்தில் நாங்கள் பேசினோம். அவள் கேட்டாள், இப்போது அவள் பேசிக்கொண்டிருக்கின்றாள், நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அவள் தானாகவே இலக்கியங்களை தேடுவதும் வாசிப்பதும் தனக்குப் புரியாத, புதிதான, புதிரான, அருஞ்சொற்களை எம்மிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் அதைப்பற்றி ஆராயவும் செய்கிறாள். என் மகளின் இந்நூல் வெளியீட்டின் மூலம் அவள் மொழிப்புரட்சியில் முதல் அடியை எடுத்துவைத்துள்ளாள் என்றே நினைக்கின்றேன். இதில் கர்வப்பட ஒன்றுமில்லை. தமிழ் அவளது மூச்சாக வேண்டும். தமிழால் அவள் பெயர் நிலைக்கவேண்டும். பெற்றவர்கள் தமது பிள்ளைக்கு பாசத்துடன் அமுதூட்டி சீராட்டி வளர்ப்பது போல அழகுத் தமிழூட்டி தன் மகளை ஆளாக்கியுள்ள கவிஞரும் எழுத்தாளருமான ரஜீந்திரன் அவருடனான உரையாடலுக்கு நன்றி பகர்ந்து சிறுமி அனன்யாவிடம் சென்றோம்.

அனன்யா தனது எட்டாவது வயதில் கண்ணில் தெரியுதடி என்ற கவிதைத் தொகுப்பினைப் பிரசவித்திருக்கின்றார். இவரதுகன்னிப் படைப்பான இப்படைப்பு இயற் கையின் இரசனையையும் தேசிய சிந்தனைகளையும் புரட்சிகரமான எண்ணங்களையும் தாங்கி வெளிவந்திருக்கின்றது. வணக்கம் என்ற பண்பாட்டு மரபோடு அனன்யாவுடனான உரையாடலை ஆரம்பித்தபோது அழகு தமிழில் தூய உச்சரிப்பில் கணீரென்ற குரலில் தன் தாய்த்தமிழுக்கு முதல் வணக்கத்தினைத் தெரிவித்து உலகமெல்லாம் வாழும் தமிழ் நெஞ்சங்களிற்கு இரண்டாவது வணக்கத்தினையும் இயம்பி எம்முடனான உரையாடலை ஆரம்பித்தார்.

அனன்னயா, தமிழ் மீதான உங்கள் பற்று எவ்வாறு உதயமானது எனக்கேட்டதும், எனது அப்பாவும் அம்மாவுமே அதற்குக் காரணம். எனது அப்பா ஒரு தமிழ் ஆராய்ச்சியாளர் என்றே நினைக்கின்றேன். அவர்,



தான் எடுத்த குறிப்புகளை பெரிதாக வாசிப்பார். நான் குழந்தையாக இருக்கும் போது அவற்றை கிரகித்துக்கொள்வேன். அவ்வாறு தோன்றிய பழக்கம் மற்றும் எமது வீட்டில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த தமிழ் எழுத்துக்கள், சுவர்களை அலங்கரித்த தமிழ்ச்சொற்கள் இவற்றுடன் அவற்றை உச்சரிக்கவைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மீண்டும் கேட்டு உற்சாகப்படுத்திய எனது பெற்றோர் எல்லாமே எனது இந்நிலைக்கான காரணங்கள் என்றதுடன் தன் எழுத்துக்கள் சமூக அவலங்களை சுட்டிக்காட்டுவதுடன், புரட்சி விதைகளை உருவாக்கவேண்டும் எனவும் பேனாவின் முனையைக்கொண்டு பல சாதனைகளைப் புரியநினைப்பதாகவும் கூறினார்.

அனன்யா, தனது மூன்றாவது வயதிலேயே தமிழ் மொழிப்பகிர்வில் பரிசினையும் பாராட்டினையும் பெற்றுள்ளார். பாரதியாரின்

**ஓடிவிளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா -----**

என்ற கவிதையைப் போன்றே தனது சிறுபராயமும் இருந்ததாக இருப்பதாக கூறுகின்றார். கேள்விகள் கேட்பது சிந்தனை ஆற்றலை தூண்டும் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த வகையில் எனது முதல் கவிதை கேள்விக்கணைகளால் நிரம்பியதே என்ற அனன்யாவின் முதல் கவிதை இதோ --

***மரம் ஏன் பூக்கிறது?***
***பூக்கள் ஏன் காய்க்கிறது?***
***முழை வருவதற்காக அல்லாமல்***
***உங்களை மகிழ்விக்கவோ?***
***மலர் ஏன் உதிர்கிறது?***
***தேன் ஏன் கொடுக்கிறது?***
***தேனிகள் உண்பதுவோ அல்லது***
***முகங்கள் கமழவோ?***

குழந்தை அனன்யா இயற்கையின் மீது தீராத பற்றுக்கொண்டவர் என்பதை அவரது கவிதை கோடிட்டுக்காட்டியுள்ளது.

தனது எழுத்துக்களால் தமிழ் உணர்வை மேலோங்கச்செய்யவேண்டும் என எண்ணும் அனன்யாவிடம், எதிர்கால இலட்சியம் என்ன எனக்கேட்டோம். பாரதியாரின் கவிதைகளை, தனது கவிதைகளை, தனது அப்பாவின் கவிதைகளை என எல்லாவற்றையும் பாடும் ஒரு சிறந்த பாடகியாக வரவேண்டும் என்பதுடன் ஒரு வைத்தியராகி அதுவும் மகப்பேற்று நிபுணராக மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதுமே தனது இலட்சியம் எனக்கூறும் அனன்யா தனது ஆங்கிலப்பள்ளியில் உள்ள நண்பர்களுக்கு தமிழைச்சொல்லிக்கொடுக்கும் பாரிய பணியையும் ஆற்றிவருகின்றார். தமிழச்சி எனக்கூறுவதில் பெருமையும் மகிழ்வும் அடையும் அனன்யா பள்ளியில் வரைந்த பாரதியாரின் உருவம் பாரதியாரைப்பற்றி அவரது வகுப்பாசிரியர் ஆங்கிலத்தில் கற்பிப்பதற்கும் வழிகோலியுள்ளது. அனன்யா




கவிதை எழுதுவதில் மட்டுமன்றி ஓவியம் வரைவதிலும் பாடல் பாடுவதிலும் சிறந்து விளங்குகின்றார்.

பெற்றவர்கள் தமது பிள்ளைக்கு பாசத்துடன் அமுதூட்டி பாராட்டி சீராட்டி வளர்ப்பது போல அழகுத் தமிழூட்டி வளர்த்த அனன்யாவின் பெற்றோரையும் தன் மொழி மீது தீராத மோகம் கொண்டு தமிழைச் சுவாசிக்கும் அனன்யாவையும் ஒளிஅரசியின்சார்பில்வாழ்த்தி அனன்யாஇன்னும்பல மேடைகள் கண்டு சாதனைப்பெண்ணாய் வலம்வரவேண்டும் என ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்தி விடைபெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ்ச்செல்வி

# தட்டாங்கல்



ஒளிஅரசியின் பார்வைகள் புதிது என்னும் புதிய பார்வையினூடாக எம்மத்தியில் ஆரம்பகாலத்தில் இருந்து மறைந்த பல விளையாட்டுகள் பற்றிய பகிர்வினை தருகிறோம்.

தட்டாங்கல்லின் தோற்றம் பற்றி கூறும் போது இலக்கியத் தில் சுட்டிக்காட்டப்படும் கழங்காடுதல் என்ற விளையாட்டு இன்றைய கொக்கான் வெட்டுதல் விளையாட்டைக் குறிக்கும். தட்டாங்கல் என்ற விளையாட்டே நாளடைவில் மெருகடைந்து கொக்கான் வெட்டுதலாக மாறியிருக்கலாம். இளம் பெண்கள் கழங்கு விளையாடுவதாகவும் அப்போது ஒன்று முதல் ஏழு வரையில் எண்ணிக்கை வரும்படியாக பாடல்கள் பாடுவதாகவும் புலவர்கள் உலா என்னும் பிரபந்தத்தில் அமைத்திருக்கின்றார்கள்.

இந்த விளையாட்டிற்கு சுழற்சிக்காய் (mollucca beans) விளையாட்டு என்ற பெயரும் உண்டு.

கற்களை மேலே தூக்கிப்போட்டு தரையைத் தட்டிப் பிடிப்பதால் தட்டாங்கல் என்ற பெயர் வந்திருக்கலாம். தற்போதைய கொக்கான் வெட்டுதல் விளையாட்டு கல்லைப்போட்டு விழுவதற்குள் கீழே இருக்கும் கல்லை ஒன்று, இரண்டு, மூன்று என்று முறைப்படி எடுக்கவேண்டும். இவ்வாறு பன்னிரு முறை தொடர்ந்து எடுத்தால் வெற்றிபெற்றவராவார். தொடரும் போது மீண்டும் முதலில் இருந்தே தொடரவேண்டும். மேலே எறிந்த கல் தவறி விட்டால் மற்றவர் ஆட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்விளையாட்டில் கற்களுக்கேற்ப ஆட்டமும் விதிமுறைகளும் மாறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விளையாட்டின் மூலமாக பிடிக்கும் திறன் மேம்படுகிறது. கையும் கைநரம்பு களும் வலுப்பெறுகிறது. விரல் நரம்புகள் செயற்படுவதால் இரத்தஓட்டம் அதிகரிக்கும். இவ் விளையாட்டின் பலனாக தன்னம்பிக்கை வளர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போய் வருகின்றேன்

ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு எதிர்பார்ப்புடனே
காலைகள் விடிகிறது.
வந்து நான்காண்டுகளாகியும்
பேராவின் குழந்தைகளாய்.

வரும் போது
உன்னை இப்படி
நேசிப்பேன் என்று
எண்ணவில்லை நான்.
என்னுள் உறைந்துவிட்டாய்
நீ.

முதலாம் ஆண்டு பகிடிவதையும்
பழக்கமில்லா புதுமுகங்களும்
பல்வேறு அரட்டைகளும்
பசுமையாய் வந்துபோகின்றன
என் மனதில்.

படிப்பும்
பம்பரமாய் சுற்றும் வாழ்வும்
அசைமென்டும்
பிரசென்டேசனும்
அமைதியான விரிவுரைகளும்
இன்னும் நீங்கா எண்ணங்களாய்
என் மனதில்.

பசும் புற்களே
பச்சை மரங்களே
போய்வருகின்றேன்.
பொலநறுவையே
விரிவுரை மண்டபங்களே
Wus கெம்பாவே
போய்வருகின்றேன்.

அருகிருந்து அரட்டையடித்த
அன்பாய் இருந்த
தோழர்களே, தோழியரே
போய்வருகின்றேன்.

அன்னையாய் அன்பான
தோழனாய் தோழியாய்
அரவணைத்த எங்கள்
கலைப்பீட தாயே
போய்வருகின்றேன்.

சுதர்சனா
விடுகை வருடம்,
சமூகவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

கவிதைப்புனல்


# ஒற்றைப்பார்வை

கனத்த இருளினிடையே
அந்த ஒற்றைப்பார்வை மட்டும்
எதிர்வீட்டு கொடிதனில்
வெயில்காயும்
வெள்ளைச் சீருடையை
உற்றுப்பார்த்தபடி
தன் மேனியில் கிடக்கும்
சல்லடைக் காற்சட்டையை
தடவிக்கொள்கிறது.

பொறுக்கி வந்த
காகிதக்குப்பையின் நடுவில்
புதைந்து கிடக்கும்
வயதுபோன புத்தகம் ஒன்றை
தேடி எடுத்து புரட்டியபடி
விழிகளை மேயவிடுகிறது.
அகோர தாண்டவத்தின் மத்தியில்
ருத்ரனின் கால்களுக்கிடையில்
அகப்பட்டவனைப்போல்
அன்று தன் தந்தை
காணாமல்போன ஞாபகங்கள்
ஏறிமிதித்து வந்த
சிதைகளின் நடுவில்
தாயின் பிணமதனை
அடையாளம் காணமுடியாது
ஓடிவந்த நினைவுகள்
அந்த ஒற்றைப்பார்வை மட்டும்
வெள்ளைச் சீருடையை
வெறித்துப்பார்த்தபடி
கதிரவன் வருகையில்
வீதியில் பவனிவரும்
பள்ளிக் குழந்தைகளுக்கிடையில்
பழைய காகிதம் பொறுக்கியபடி
ஒரு நேர உணவுக்காய்
ஓட்டம் விற்று
வந்த பணமதில்
பழைய சீருடை ஒன்றை வாங்கி
தங்கைக்களித்து
ஆனந்த கண்ணீருடன்
அதே கண்கள்

சேமித்து வைத்த
பழைய புத்தகத்தை
கரத்தில் ஏந்தியபடி
போய் வா என்கிறது
தன்வயது பிள்ளைகள்
பாடசாலை செல்லும்
அழகை ரசித்தபடி

மோகனதாஸ்



பழங்கதையாய் நானுனக்கு.
நீ தான் புது உலகில்
விரல்கோர்த்துவிட்டாயே
நிதர்சனங்கள் மெதுவாய்
எனக்குள் வேர்விடுகிறது
பொய்மையின் விம்பங்கள்
அறையெங்கும்
சிதறிவிரவுகின்றன.
கெஞ்சி எதையும் பெறுவதில்
உடன்பாடில்லை- எனக்கு,
நமக்கான கண்ணாமுச்சி ஆட்டத்தில்
நான் தோற்றுவிட்டேன்
என் காதல் தோற்கவில்லை.

செம்பரத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

உரையாடல்

# மனமிருந்தால் இடமும் இருக்கும்

நேரம் காலை ஒன்பது மணியைத் தொட்டதைக் கண்டதும் அவசரமாய் சந்தைக்குப் புறப்பட்ட சுமதி எதிர்வீட்டு மாலதி அக்காவையும் அவசரமாய் கூப்பிட்டாள். ஏதோ முணுமுணுத்தபடி படலையைத் திறந்த மாலதி தனது மனஆற்றாமைகளை தோழி சுமதியிடமே கொட்டத் தொடங்கினாள். இருவரும் பேசிக்கொண்டவை வாசகர்களுக்காக

சுமதி : என்னக்கா? ஏன் முணுமுணுத்துக்கொண்டு வாறியள்?

மாலதி : புதுவருசம் வருகுது, உடுப்பு எடுக்கவேணும், வீட்டைத் துப்பரவு செய்து வெள்ளை அடிக்கவேணும், பலகாரம், பண்டம் எண்டு எவ்வளவு செலவு கிடக்கு, உவன் தம்பி இன்னும் காசு போடேல்ல, அதுக்கிடையில மூத்தவள் வீட்டுக்கும் எல்லாச்செலவும் பாக்கவேணும், இளையவள் மோட்டச்சைக்கிள், அதுதான் உந்த ஸ்கூட்டிபெப் வேணுமெண்டு ஒரே பிடியாய் நிக்கிறாள், என்ன செய்யிறது எண்டு தெரியாமல் தான் அவனுக்கு போன் எடுத்தன்,பதில் இல்லை, அதுதான்



சுமதி : அக்கா என்ன சொல்லுறியள், அவன் ஒருத்தன் எத்தினை செலவைத்தான்பாக்கிறது,

மாலதி : நல்ல இருக்கு உன்ராகதை, அவனை எவ்வளவு கஸ்ரப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பினனான், அவர் உழைச்சு அனுப்பட்டுமே.

சுமதி : அதுசரி அக்கா, அவனைக் கஸ்ரப்பட்டு அனுப்பினது உண்மைதான், அதுக்காக அவன் சுமக்கமுடியாத அளவுக்கு அவன்ர தலையில பாரத்தை வைக்கிறது சரியில்லை, அதைத்தான் சொன்னன்.

மாலதி : என்ன செய்யிறது? கேட்ட சீதனத்தை லொட்டா குடுத்துத்தான் நாங்கள் மூத்தவளின்ர கலியாணத்தை முடிச்சனாங்கள். ஆனால் தைப்பொங்கல் , தீபாவளி நாளிலயும் அவரின்ர ஆக்கள் எங்களட்டத்தான் எதிர்பாக்கினம், குடுக்காட்டி மகள் கண்ணைக் கசக்கிக்கொண்டு வந்து நிக்கிறாள்.

சுமதி : நீங்கள் என்னக்கா சொல்லுறியள்? அவைக்கு அவன்ர நிலமை புரியாது, ஆனால் உங்களுக்குத் தெரியாதே, நீங்கள் தான் மற்றவைக்குச் சொல்லிப் புரியவைக்க வேணும். எடுத்துச் சொன்னால் எல்லாருக்கும் விளங்கும் தானே. குறைநினைச்சால் நினைக்கட்டும் எண்டு விடுங்கோ, இவையளைப் பாத்தால் அவன்ர மனசு சுக்குநூறாகிப்போடும்.

மாலதி : நீ சொல்லுறதும் சரிதான். நான் இவ்வளவு நாளும் இதைப்பற்றி யோசிக்கேல்ல. என்ர பிள்ளை யேசுநாதர் போல சிலுவை சுமக்குது, இதுகள் இஞ்ச ஆடம்பரம் எண்டு பாடாய்ப்படுகுதுகள்.

சுமதி : சரியாய் சொன்னியள் அக்கா, இனியெண்டாலும் தெரிஞ்சு நடவுங்கோ, அவனும் வாழுற வயசு வந்திட்டுது.

மாலதி : அடுத்து முறை என்ர பிள்ளை வரேக்க அவனுக்கு ஏற்ற துணையைத்தான் பரிசா குடுக்கப்போறன்.

சுமதி : நல்ல சந்தோசம் அக்கா, அப்ப கெதியில கலியாணச்சாப்பாடு கிடைக்கும் எண்டு சொல்லுங்கோ?

மாலதி : அதில என்ன சந்தேகம், கெதியா வா, நல்ல மீனைப் பாத்துவாங்கவேணும்.

(இருவரும் விரைந்து நடந்தனர் சந்தை நோக்கி)

ஜனநாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்




மரத்தில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி அதற்குள் ஒளிந்திருக்கும் தத்துவத்தை கண்டுபிடிக்கவும்.

## கண்டுபிடியுங்கள்...

விடைகள் கையேட்டில்





இரண்டு படத்திற்கும் இடையே உள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின வாழ்த்து

# ராஜராஜ சோழன் வரலாறு



மும்முடிச் சோழன் என புகழப்பெறும் ராஜ ராஜ சோழனின் வரலாற்றினை சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

இரண்டாம் பராந்தக சோழனான சுந்தர சோழனுக்கும் அவன் பட்டத்தரசி வானவன் மாதேவிக்கும் ஐப்பசி மாதத்தில் சதய நட்சத்திரத்தில் பிறந்தான் அருண்மொழிவர்மன்.

இது **''சதய நாள் விழா உதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்''**

என்ற கலிங்கத்துபரணி அடிகளால் பெறப்படுகிறது.

திருவாலங்காட்டு செப்பேடுகள் இவன் கைகளில் சங்கு, சக்கர ரேகைகள் இடம் பெற்று இருந்தன என்று குறிப்பிடுகின்றன.

சுந்தர சோழனுக்கு மூன்று பெரிய தந்தையர் இருந்தனர். ஆகையால் சுந்தர சோழன் ஆட்சி பீடம் ஏறமாட்டார் என்றே அனைவரும் நினைத்தனர். ஆனால் முதலாம் பராந்தகனின் புதல்வன் உத்தமசீலி என்பான் பாண்டிய நாட்டு போரில் உயிர் துறந்தான். அதுபோலவே முதல் பராந்தகனின் முதல் புதல்வனும் மிக பெரும் வீரனுமாகிய ராசாதித்தன் ராட்டிட கூட போரில் ஆனை மேலமர்ந்த படியே வீரசொர்க்கம் எய்தினான்.

முதலாம் பராந்தகனுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்தார் அவரது இரண்டாம் புதல்வர் கண்டராதித்தர்.கண்டராதித்தனின் புதல்வன் சிறிய குழந்தை என்பதால் அவருக்கு பின்னர் அவனது இளவலும் சுந்தர சோழனின் தந்தையுமாகிய அரிஞ்சய சோழன் ஆட்சிக்கு வந்தான்.சில திங்களில் அவனும் காலமானதால் அவனது புதல்வனாகிய இரண்டாம் பராந்தக சோழனாகிய சுந்தர சோழன் ஆட்சிக்கு வந்தார்.

சுந்தர சோழருக்கு மூன்று குழந்தைகள்.முதலாமவன் பெரும் வீரனாகிய ஆதித்ய கரிகாலன். அவனுக்கடுத்து குந்தவை என்னும் பெண் பிறந்தாள். இவர்களுக்கு பின்னர் கடைக்குட்டியாக பிறந்தவன் தான் அருண்மொழிவர்மன்.

குந்தவி பிராட்டியார் வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் கீழை சாளுக்கிய மன்னனை மணந்தார்.

அந்நாளில் பாண்டிய நாடு சோழரின் ஆதிக்கத்திற்கு உட்படாததால் பாண்டிய நாட்டின் மீது படையெடுப்பது இன்றியமையாததாகி விட்டது.கி.பி.966 இல் சுந்தர சோழனின் புதல்வன் ஆதித்ய கரிகாலன், கொடும்பாளூர் பூதி விக்கிரமகேசரி, தொண்டை நாட்டு சிற்றரசன் பார்த்திபேந்திரவர்மன் ஆகியோர் பாண்டிய நாட்டின் மீது போர் தொடுத்தனர். அப்போரில் வீரபாண்டியனை கொன்று ஆதித்ய கரிகாலன் அப்போரில் பெரும் வெற்றி பெற்றான்.

''வீரபாண்டியனை தலை கொண்ட கோப் பரகேசரிவர்மன்''

என்றே ஆதித்ய கரிகாலன் திருவாலங்காடு செப்பேடுகளில் குறிப்பிடப்படுகிறான். இவனது பெரும் ஆற்றலை கண்ட சுந்தர சோழன் இவனுக்கு கி.பி.966இல் இளவரசு பட்டம் சூட்டினான். இத்துணை பெரிய ஆற்றலை உடைய இவன் கி.பி969இல் சோழ நாட்டிலேயே சில வஞ்சகர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

கொல்லப்பட்டான். போர்க்களத்தில் எதிரிகளின் வாளுக்கு மடியாத கரிகாலன் சதிவலையில் வீழ்ந்து மடிந்தான்.

திருவாலங்காடு கல்வெட்டு,

**''வானுலகை பார்க்கும் ஆசையினால் ஆதித்தன் அஸ்தமனத்தை அடைந்தான். உலகில் கலி என்னும் இருள் சூழ்ந்தது.''**

என்கின்றது.

ஆதித்த கரிகாலன் போன்றதொரு வீரனை அது நாள் வரை கண்டிராத சோழ நாடு அவனது மறைவால் சோகத்தில் ஆழ்ந்தது. ஆதித்தனின் மறைவை தாங்க இயலாத சுந்தர



சோழன் சில திங்களில் வானுலகம் எய்தினான். சுந்தர சோழனின் மறைவுக்கு பின்னர் சோழ நாட்டில் பெரும் அரசியல் குழப்பம் நிகழ்ந்தது.சோழ நாட்டின் கீழ் இருந்த சிற்றரசர்களில் ஒரு சாரார் கண்டராதித்தரின் புதல்வரான உத்தம சோழர் ஆட்சி பீடத்தில் ஏற வேண்டும் என்றும் மற்றொரு சாரர் அருண்மொழி வர்மனே ஆட்சி பீடம் ஏறவேண்டும் என்றும் தங்களுக்குள் பிரிந்தனர்.

சங்கு சக்கர ரேகைகளை உடைய அருண்மொழிவர்மனுக்கு மக்களின் ஆதரவு பெரும் அளவில் இருந்தது.இந்த அரசியல் குழப்பத்தை பயன்படுத்தி எதிரிகள் மீண்டும் சோழ நாட்டின் மீது படைஎடுக்க கூடாது என்று நினைத்த அருண்மொழிவர்மன் இந்த பிரச்னையை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக ஆட்சி பீடத்தின் மீதான தனது உரிமையை கண்டராதித்தரின் புதல்வனான உத்தம சோழனுக்கு விட்டுகொடுத்தார்.

மிக பெரும் தொன்மை வாய்ந்த சோழ நாட்டின் அரசுரிமையை தனது சிறியதந்தைக்காக விட்டு கொடுத்தது அருன்மொழிவர்மனின் தாராள குணத்தை காட்டுகிறது.

உத்தம சோழனின் பதினைந்து ஆண்டு கால ஆட்சிக்கு பின்னர் கி.பி985 இல் அரசு கட்டில் ஏறினான் ராஜகேசரி அருண்மொழி வர்மன். தனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டில் (கி.பி988) சேரனையும் பாண்டியனையும் கந்தாளூர் சாலை போரில் வென்றான். இப்போருக்குப் பிறகே அரசருக்கெல்லாம் அரசர் என்று பொருள் படும் ''ராஜராஜன்'' என்னும் அபிஷேக பெயரை சூடினான். அதுவே அவனது பெயராக பின்னாளில் மாறிப் போனது.

விசயாலய சோழனால் அடிகோலப்பட்ட பிற்கால சோழ அரசு மகோன்னதம் அடைந்தது இவனது ஆட்சியிலே தான். அது நாள் வரை தேங்கி இருந்த சோழரின் ஆற்றலை அனைத்து துறைகளிலும் வெளிக்கொண்டு வந்து சோழர் பரம்பரையை ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னரும் பேச செய்தவன் இவனே. இவன் இயற்கைலேயே நுண்ணறிவும், பெரும் ஆற்றலும், மக்களின் செல்வாக்கும்,இறைவனின் ஆசியும் உடையவனாய் இருந்து இருக்க வேண்டும். இவனது முப்பது ஆண்டு கால நீண்ட ஆட்சியும் இவனது சாதனைகளுக்கு பெருந்துணை புரிந்துள்ளது.

அது நாள் வரை எந்த தமிழ் மன்னரும் செய்திராத ஒன்றை ராஜராஜன் செய்தார். தனது ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்று உண்மைகளை அனைவரும் நன்குணரும் பொருட்டு அவற்றை விளக்கும் மெய்க்கீர்த்தியை இனிய தமிழில் அகவற்பாவில் அமைத்து தன் கல்வெட்டுகளின் தொடக்கதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

பொறிக்கும் வழக்கத்தை தொடங்கினான்.

மன்னனது ஆட்சி வளர வளர மெய்க்கீர்த்தியும் வளர்ந்து கொண்டே போகும். மெய்க்கீர்த்திகளில் இருப்பனவெல்லாம் கற்பனை அல்ல. அவை அனைத்தும் அந்த மன்னனின் ஆட்சியில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களே.

இறுதி காலங்களில் கிடைத்த ராஜராஜனின் மெய்க்கீர்த்தி,

"திருமகள் போல பெருநில செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனங்கொளக்கருதி
காந்தளூர் சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களரீழமண்டலமும்
இரட்டை பாடி எழரை இலக்கமும்
முந்நீர் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில் வளர் ஊழியுளெல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோ ராசா கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்..."

இந்த மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளை ராஜராஜன் கைப்பற்றி இருந்தான் என்பது இதன் மூலம் புலப்படு கிறது. பாண்டி மண்டலமும், சேர மண்டல



மும் அடங்கிய ராஜராஜ தென்மண்டலமும், தொண்டை மண்டலமாகிய சயங்கொண்ட சோழமண்டலமும், கங்க மண்டலமும், கொங்கு மண்டலமும், நுளம்பாடி மண்டலமும், கலிங்க மண்டல மும், ஈழமாகிய மும்முடி சோழ மண்டலமும் இவனது ஆட்சியில் சோழ நாட்டிற்கு உட்பட்டு இருந்தது என்பது பெறப்படு கிறது.

வளர்ந்து கொண்டே வநத சோழ சாம்ராஜ்யத்தின் நிதிநிலையை சமாளிக்க அது வரையில் யாரும் யோசிக்காத வண்ணம் தனது சாம்ராஜ்யத்தை அளக்க உத்தரவிட்டான் ராஜ ராஜன். இப்பெரும் பணியை மிககுறுகிய காலத்தில் செய்து முடித்தவன் சேனாதிபதி குர வன் உலகளந்தானான ராஜராஜ மாராயன்.எவ்வளவு நன்செய் நிலங்கள், புன்செய் நிலங்கள், காடுகள், விளைநிலங்கள் என்பதை புலப்ப டுத்தி அவற்றுள் விளைநிலங்களுக்கு மட்டும் வரி விதிக்குமாறு பரிந்துரைத்தான்.

இவ்வாறு பலதுறைகளில் சிறப்புற்று விளங்கிய ராஜராஜனுக்கு பல்வேறு அபிஷேக பெயர்கள் இருந்தன.

ஷத்திரிய சிகாமணி, ராசேந்திர சிங்கன், உய்யக்கொண்டான், பாண்டிய குலாசினி, கேரளாந்தகன், நித்த வினோதன், ராசாசிரையன், சிவபாதசேகரன், சநநாதன், சிங்களாந்தகன், சயங்கோண்டசோழன், மும்முடி சோழன், ரவிகுல மாணிக்கம், நிகரிலி சோழன், சோழேந்திர சிங்கன், சோழமார்த் தாண்டன், ராஜ மார்த்தாண்டன், தெலுங்குகுல காலன், கீர்த்தி பராக்கிரமன் என்பன ஆகும்.

மன்னர்கள் கோயில் கட்டுவது என்பது புதிது அன்று. எதையும் புதிதாக முயற்சி செய்யும் ராஜராஜன் இதிலும் தனது புதுமையை கட்டினார்.அதாவது அதுவரை தென்னாட்டில் எங்குமே இல்லாத பரிமாணத்தில் 793 அடி நீளத்தில் 397 அடி அகலத்தில் 216 அடி உயரத்தில் ராஜ ராஜேச்வரம் என்னும் கோயிலை கட்டினான்,இக்கோயில் ஆயிரம் ஆண்டுகள் கடந்து தமிழரின் கட்டிட கலையை உலகிற்கு உணர்த் துவது திண்ணம்.

இவ்வாறாக பலதுறைகளில் சோழர்களின் முத்திரையைப் பதித்த ராஜராஜன் கி,பி1012 இல் தனது புதல்வனாகிய, பின்னாளில் ராஜேந்திரசோழன் என்னும் அபிஷேக பெயரை அடைந்த இளங்கோ மதுராந்தகருக்கு இளவரசு பட்டம் சூட்டினான்.

**வாழ்க ராஜராஜ சோழர்!**
**வளர்க அவர் கீர்த்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை

மங்கும் மார்கழி இரவுகளில்
மங்கையரின் கோபம் தனிமை
சாலையோரம் நடக்கையிலே
தோழியின் நினைவுகள் தனிமை
பள்ளியை பிரியும் நாட்களிலே
நண்பனின் நினைவுகள் தனிமை
விடுதிநேர வாழ்க்கையிலே
அம்மாவின் வார்த்தைகள் தனிமை
இருள்சூழும் வேளைகளில்
பகல்கள் வானில் தனிமை
பூக்கள் உதிரும் போதினிலே
பூமரம் அடைவது தனிமை
நாட்கள் முடியும் போதினிலே
நாட்காட்டி உணர்வதும் தனிமை
வருடங்கள் கடக்கும் வேளைகளில்
நூற்றாண்டுகள் அடைவதும் தனிமை

சி. சாந்தகுமார்.

# போராடும் ஆயுள்கள்

முட்களுக்கு மூச்சிருக்கும் வரை
பூக்களைக் காயப்படுத்துவது
சாதாரணமானதல்ல. ஆனாலும்
முட்கள் கவசமாயிருக்கும்
பூக்கள் மட்டும்
தப்பித்துக்கொள்ளலாம்
காயங்களிலிருந்து -காயங்கள்
காயப்படுத்துகிறவனுக்கல்ல,
பூக்களுக்கு மட்டுமே. அதன்
இதயம் தீயும் வாசம் முகர்ந்தால்
ஒருவேளை காயப்படுத்துகிறவன்
காயங்களைக் கொடுக்காமலிருக்கலாம்.
தெருவில் அந்தரத்தில் தொங்கும்
கூழைக்கூத்தாடிக்கும்
பூக்களுக்குமான வித்தியாசம்
பெரிதானதல்ல.
கொஞ்சம் விலகிப்போனால்
அவன் வாழ்வைத்தின்னத்
தயாராகும் மரணத்தைப்போலல்லாது
தன் ஆயுளைக்கூட்டக்
காத்திருக்கலாம் பூக்களும்.

சகிலாதுரைராஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சமூகம், சூழலினை நேசிக்கிற செயற்பாட்டாளர்கள் அலட்சிப்படுத்திக் கொண்டு போகிற செயற்பாடுகளை பொதுவெளிக்குள் பறக்கவிடுகின்ற ஊடகமாக எழுத்துக்களை சமர்ப்பிக்கின்றேன்.


தீவிரமாக சூழல் பாதிப்படைந்து போகிறது என சொற்களை உச்சரிக்கிறோமே தவிர குறைந்தது சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலாவது சூழல் பற்றிச் சிந்திக்கிறோமா என்றால் விடை இல்லையென்றே முடியலாம்.

சர்ச்சைக்குரிய விடை தான். ஆனால் சர்ச்சையை உருவாக்குவதல்ல என் எண்ணம். ஆதலால் சமூகத்தின் மீது அன்பு செலுத்தக்கூடிய இயற்கையை நேசிக்கிற நெஞ்சங்கள் செய்கிற மட்டமான செயற்பாடுகளை சில சூரியோதயங்களில் பார்த்து மன உளைச்சல் அடைந்த எனது கோபத்தை எழுதுவதற்கு எழுத்து என் ஊடகமே தவிர இது என்னால் மட்டும் செய்யக்கூடிய செயலல்ல, எல்லோரும் செயற்பட்டால் செய்துமுடிக்கக்கூடிய பக்கங்களே இனி.

# எங்கே போகிறது மாற்றம்




அருளானந்
வவுனியா



எங்கள் ஊரில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு கண்களை பயணப்படுத்துங்கள். கருத்தரங்குகள், தமிழ்த்தின நிகழ்வுகள், வாசிப்பு மாதங்கள், இலக்கிய நிகழ்வுகள், சுகாதார தினங்கள், விவசாயத்திரு விழா, மரநடுகை மாதம், பொதுக்கூட்டங்கள், சமூக செயற்பாட்டுக்கூட்டங்கள், புத்தக வெளியீடுகள் என பல நிகழ்வுகளில் நடக்கின்ற சூழலைப் பற்றிச் சிந்திக்காமல். செய்கிற தவறுகளை பார்வையிடுவது என் கண்கள் மட்டும் தானா? யாருக்காவது அந்த தவறுகளை இனங்கண்டு சிறு மாற்றத்தை நிகழ்த்த வேட்கையில்லையா? சமூக மற்றத்தை பற்றி உரையாடுகிற, கொண்டாடுகிற தரப்பினரே சின்னஞ்சிறிய சமூக மாற்றத்தை மக்கள் மத்தியில் நிகழ்த்த முன்வரத் தயங்குவது அபத்தம் இல்லையா?

அபத்தங்கள் கீழே

**i. குளிர்பானம் வழங்கல் :**

நீரை அதிகம் சுரண்டுகின்ற, நச்சுப் பதார்த்தங்களும், உயர் சீனியும் கொண்ட குளிர்பானங்களை சமூக மட்டத்தில் செயற்படுகிற அமைப்புகள் வழங்குவது வேடிக்கையான செயலாக இருக்கிறது. சர்க்கரை வியாதியுடன் அலைகிற சமுதாயத்தினை உருவாக்க இவர்களின் பங்களிப்பும் ஏன் துணை நிற்க வேண்டும். குளிர்பானங்களுக்கு மாற்றீடாக பசும்பால், பழச்சாறு, தயிர், தேனீர், நன்னாரி முதலிய பானங்களை வழங்குவதால் மக்களிடம் விழிப்புணர்வு மலருவதோடு தங்கள் தயாரிப்புகளை விற்க தடுமாறிக் கொண்டிருக்கும் பிரதேசத்து மக்களிற்கு வருமானம், சந்தை வாய்ப்பும் கிடைத்து உழைப்பதற்கேற்ற மூலதனமும் போய்ச்சேரும். ஒரே கல்லில் இரண்டு மாங்காயை பறிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தை நிகழ்த்த வேண்டும். நாம் பணத்தை கொடுத்து உடல்நலத்தை வீணாக்குவதை விட நம்மவரின் பானங்களை வாங்கி நம்மவருக்கு கைகொடுக்கலாம்.



ii. **சமூக விழிப்புணர்வு பாதைகள்**

நம் சூழல் பற்றி சற்றுச் சிந்திப்போம் என்கிற தலைப்பில் பதாதைகள் சில மாதங்களுக்கு முன்னால் காணக்கிடைத்தது. மலத்திற்கு மேலே அரிசி இருக்கிறது. மலத்தில் கை படாமல் அரிசியை மட்டும் எடு என்கிறது போல் இருந்தது. சூழல் தொடர்பான விழிப்புணர்வை முன்னெடுக்கும் அரச நிறுவனங்களில் பிளாஸ்ரிக் பாவனையை ஊக்குவிக்கும் செயலை சுட்டிக்காட்டக் கூட மூளைசாலிகள் யாரும் இல்லையா? முன்னர்தான் கைகளினால் பதாதைகள் வடிவமைப்பது கடினமாக இருந்தது. இப்போது துணிகளில் அச்சு அசலாக பிரதி செய்யக் கூடிய தொழிநுட்பம் அச்சகங்களில் இருக்கின்றதே? ஏன் வீணாக குப்பைகளை அதிகரித்துக் கொண்டிருக்கிறோம். எங்கே போகிறது மாற்றம்.



iii. One day Cup **பாவனையும் தண்ணீர்ப் போத்தலும்**

ஐயா நான் தெரியாமத்தான் கேட்கிறேன். நிகழ்வு நடைபெறும் இடங்களில் எல்லோரும் பொதுவாக நீர் அருந்தக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்த முடியாதா? தண்ணீர் கொள்கலன்களை, டம்ளர்களை வாடகைக்கு வழங்கும் கடைகள் நம் ஊரில் நிரம்பி வழிகின்றதே, அப்படியிருக்க ஏன் இப்படியான குப்பைகளைச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் வழங்கிய தண்ணீர்ப் போத்தலினை முழுவதும் அருந்துகிறார்களா? அரை வாசித் தண்ணீருடன் குப்பைகளில் போடும் தண்ணீர்ப் போத்தல்களை நீங்கள் அறிவீர்களா? ஒரு மாதத்திற்கு இரண்டு நிகழ்வுகள் படி 300 மனிதர்களுக்கு 300 One day Cup, தண்ணீர்ப் போத்தல் எனும் குப்பையையும் இந்த மண்ணிற்கு மங்கலம் பாடிக்கொண்டிருக்கிறோம். நம் தேசத்தில் மறுசுழற்சி எனும் வீரச் செயல்கள் நடப்பது கூட அரிது.

தனி மனிதரில் இருந்து மாற்றங்களை ஆரம்பிப்பதற்கு முதல் கூட்டங்கள் கூடும் இடங்களில் விழிப்புணர்வை செயல் வடிவமாக்கினாலே அவர்களுடைய வீட்டு நிகழ்வுகளிலும் வாழை இலைப் பாவனை எனும் செயலை யாவது செய்ய முன்வருவார்கள், ஆனால் சமூக இயக்கிகள் மூளையை கழற்றி வைத்துவிட்டு முட்டாள்தனமாக செயற்படும் போது மக்கள் மாற்றத்தை ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லை என்று தங்கள் பக்கத்தில் நியாயம் உள்ளது போல் காட்டிக் கொள்ள உங்கள் மனச்சாட்சி வருந்தவில்லையா? நான் சொன்ன 3 விடயங்களை விடவும் பொது வெளியில் எக்கச்சக்கமாக தவறுகள் நிகழ்கிறது. ஆனால் இம் மூன்றையும் சீர்திருத்த நம்மிடம் சக்தியும், வளங்களும் இருக்கிறன.

மாற்றத்தைப் பற்றிப்பேசிக் கொண்டிருப்பதை விட செயலுக்கு வருவோம். செயல் அமுலுக்கு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

தொடர்கதை

முன்கதைச்சுருக்கம்:

சில வருடங்களாக லண்டனில் வசித்து வரும் துர்கா, குடும்பத்தோடு திருமண வரவேற்பொன்றுக்குச் செல்கிறாள். அங்கே, சயந்தன் என்பவனைச் சந்திக்கிறாள். குழந்தையோடு இருப்பவனிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ளவும் நினைக்கிறாள். அவனோ, இவள் துர்காவா என்ற கேள்வியோடு, அங்கே தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் கதைத்துவிட்டுவாறன். என, தன்னோடு வந்திருந்த பெண்ணிடம் கூறிவிட்டு எழுந்துவருகிறான்.



ரோசிகஜன்

# மெல்லிசையாய் என் வசமானாய்

ஹாய்ஆன்ட்டி! என்றபடி தன்னருகில் வந்து நின்றவனைக் கேள்வியாகப் பார்த்த துர்காவின் அன்னை, யார்இந்தத்தம்பி? என்ற யோசனையும் வரவேற்பு முறுவலுமாக சொல்லுங்கோ! என்றார்.

நீங்க துர்காவின் அம்மாதானே? இக்கேள்வியே தேவையில்லை எனும் வகையில், அவள் சாயலில் தான் இருந்தார் அவர்.

ஓம். நீங்க? அவனைப் பார்க்க ஏதுவாக சற்றே நகர்ந்து திரும்பி அமர்ந்து கொண்டார் அவர்.

அருகிலிருந்த பெண்மணியோடு உரையாடிக் கொண்டிருந்த பர்வதமோ, வந்தவனை ஆராய்ச்சிப்பார்வை பார்த்தார். சற்றுமுன் வரை சந்தோசமாக அமர்ந்திருந்த பேத்தி, முகம் சுணங்க எழுந்து போனாள் அல்லவா? அதையே எண்ணிக் கொண்டிருந்தவருக்கு, இவன் அவளையே கேட்டுவர, இவனைக்கண்டு விட்டுத்தான் எழுந்து போனாளோ? என்கின்ற சந்தேகம் வேறுவந்தது.

ஒஹ்! அப்போ கொஞ்சம் முதல் இங்கிருந்து எழுந்து போனவர் துர்காதான் இல்லையா? நிறைய வருடங்களுக்கு முதல் கண்டது ஆன்ட்டி. அதுதான் சரியாக அடையாளம் காணமுடியாமல் கொஞ்சம் தடுமாற்றமாக இருந்தது. இயல்பு தொலைத்துப் படபடத்தவனுள் எக்கச்சக்க மகிழ்வு!

இப்போ, துர்காவின் அன்னையின் விழிகளோடு இணைந்த பர்வத்தின் விழிகளிலும் கூர்மை!

நீங்க யாரெண்டு நினைவில்லையே தம்பி! யோசனையோடு சொன்னார் அவள் அன்னை.

நான்..நான் .. எப்படிச்சொல்வதென, கணம் தடுமாறினான். துர்காவோடு படித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

## தொடர்கதை

அஞ்சனாவைத் தெரியுமா ஆன்ட்டி?

அஞ்சனா...ம்ம்...வீடு டெம்பில் ரோட்டில...அந்தப் பிள்ளைதானே? நல்லாத் தெரியுமே!

அவளேதான் ஆன்ட்டி. நான் அவளின் அண்ணன் சயந்தன். சந்தோசமாக முறுவலித்தவன். அவன் தங்கையைத் தெரியுதே! வெளியூரில் சந்திக்கையில் நட்பு வளர்க்க இது ஒன்று போதாதா!

அப்படியா தம்பி? உங்களைச் சந்தித்ததில நல்ல சந்தோசம். உங்கட அம்மாஅப்பா எல்லாரையும் நல்லாத்தெரியும். உங்களைத்தான் சந்தித்ததில்லை. அப்ப, கொழும்பில் இருந்தீங்கபோல! என்றதும், இவன் முகத்தில் பிரகாசம். தங்கையை மட்டுமில்லாது குடும்பத்தையே தெரியுதே! மகிழ்ந்து போனான்.

என்னை உங்களுக்குத் தெரியவில்லையென்றால் என்ன? உங்கமகளுக்கு நல்லாவே தெரியும்! மனதுள் சொல்லியபடி, ம்ம்...அப்போ அங்க படித்துக்கொண்டிருந்தேன் ஆன்ட்டி என்றவன், இப்போ நீங்களும் இங்கயா இருக்கிறீங்க? என்று இடையிட்டவருக்கு, இல்ல ஆன்ட்டி வேலை விஷயமாக ஒரு வருடத்துக்கென்று வந்திருக்கிறன். வந்து நான்கு மாதங்களாச்சு! என்றான்.

அப்படியா? எங்கேஇருக்கிறீங்க? அஞ்சனா எப்படி இருக்கிறா? என்ன செய்கிறா? மாறிமாறி பரஸ்பர விசாரிப்புகள்.

அவனோடு கதைத்தபடி அவன் கழுத்தைக்கட்டிக் கொண்டிருந்த குழந்தையைப் பார்த்த துர்காவின் அன்னை, உங்க குழந்தையா தம்பி? எத்தனைவயது? இரண்டிருக்குமா? குழந்தையின் கரத்தில் அன்பாக வருடி முறுவலித்தபடி கேட்க, குழந்தையோ, அவர் கரத்திலிருந்து தன் கரத்தை இழுத்துக்கொண்டு அவன் கழுத்து வளைவில் தலையைப் புதைத்துக்கொண்டு மெல்ல இவரைப் பார்த்தான்.

இவர் இலேசில யாரோடும் சேரமாட்டார் ஆன்ட்டி. குழந்தையின் தலையில் செல்லமாக முட்டியவன், என் மகன் இல்லை. ஒன்றுவிட்ட தங்கையின் மகன். அவர்களோடு தான் தங்கியிருக்கிறன். ஒன்றரை வயதாகுது. பெரியவர் மாமாட்ட வந்தால் அங்க இங்க அசையமாட்டார். இல்லையா குட்டியன்? அவனை அன்போடு அணைத்தவாறே கதைத்தவனை, துர்காவின் அன்னை தேவகிக்குப் பிடித்தது போலவே பர்வதத்துக்கும் பிடித்திருந்தது. அதுவே, அருகிலிருந்த பிள்ளை எழுந்து செல்ல, நின்று கொண்டே கதைக்கிறீங்களே! இருங்கோவன் தம்பி! என, உபசரித்தார் அவள் அன்னை. மறுப்பதை நினைக்கவும் மறந்து அமர்ந்து கொண்டவன், தொடர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தான்.

உணவில் கவனமாக இருந்துவிட்டு நிமிர்ந்த துர்காவின் பார்வை, தற்செயலாகத்தான் தாய் அமர்ந்திருந்த புறம் சென்றது. மறுநொடி, புலன்கள் செயலற்றுப் போக இமைக்கவும் மறந்துபோனாள். சிறு பொழுதில், சுற்றுப் புறச்சந்தடிளால் சுயத்தை மீட்டவளுக்கு, அத்தனை இயல்பாக, நெடு நாட்கள் பழகிய வகையில் தாயோடும் அம்மம்மாவோடும் அளவளாவிக் கொண்டிருப்பவன் நிச்சயம் ஆச்சரியத்தையே ஏற்படுத்தினான். அவளறிந்து அவன் ஒரு சிடுசிடுப்பான்! தலைக்கனமோ எக்கச்சக்கம்! தான் என்ற திமிருக்குக் கேட்கவே வேண்டாம்.

எங்க அண்ணா இலேசில யாரோடும் கதைத்துப்பேசிப்பழக மாட்டார்டி. வீணாக அவரைச்சீண்டாதே லூசு! அவருக்கு இதெல்லாம் சுத்தமாகப் பிடிக்காது. ஒரு நாளைக்கு இல்லை ஒருநாள் நல்லா வாங்குவாய்! அவளின் பிரியத்துக்குரிய தோழி அஞ்சனாவின் எச்சரிக்கை இது. அதையெல்லாம் இவள் காதிலும் வாங்கிக்கொள்ளவில்லை. தோழி தடுக்கத் தடுக்கத் தான் அவனைச் சீண்டிப் பார்க்கவேண்டுமென்ற ஆவலே அதிகமானது. அதுதான், தோழியையும் பிரித்து, இவள் மனதிலும் வெறுமையையும் குடிவைத்திருந்ததே!

அன்றே இந்தாள் இருந்த பக்கமும் திரும்பியிராவிட்டால் ஆயிரத்தில இலட்சத்தில இவரும் ஒருவர். மனதில் எழுந்த பிசைவு நாக்கை வறளச்செய்ய, எச்சிலைக்கூட்டி, கஷ்டப்பட்டு விழுங்கிக் கொண்டவள், அவனிலிருந்து பார்வையை விலக்கவே நினைத்தாள். அதனிடையில், அவன் பார்வை இவளில் படிந்தது.


எங்கே இருக்கிறாள் என்று கேட்டிருப்பான் போலும்! அவள்தாய் இவர்கள் இருந்த இடத்தைக் காட்டிக்கொண்டிருந்தார். இங்கதான் வரப்போகிறார். புரிந்து போனதில் தடுமாறிப்போனாள் துர்கா. அவரோடு நேருக்கு நேராகக்கதைக்கும் அளவுக்கு நான்... அக்கணத்தை, அவளால் நினைவிலேயே பூர்த்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்யமுடியவில்லையே! அப்படியிருக்கையில், நிஜத்தில் சாத்தியமா என்ன?

அவன் மீதான அன்பென்பது, எவருமறியாது தன்னுள்தான் அடக்கி வைத்திருந்த அற்புத உணர்வல்லவா? என்றாவது, இருவரும் வாழ்வில் இணைந்து அந்நேசம் வெற்றிவாகை சூடுமா? என்ற கேள்வியேயில்லாது, இவளுள் ஸ்திரமாகப் படிந்து போனது அவ்வுணர்வு! அதன் சாத்தியத்தில் சந்தேகத்துக்கே பெரும்பங்கிருந்தாலும் புள்ளியாய் விழுந்து அழகிய கோலமாய் உருவெடுத்துவிட்ட அந்நேசத்தை அழிக்கமுடியாதுதானே தடுமாறிநிற்கிறாள்.



ஆனால், ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையும் கூடவே ஒட்டிக் கொண்டிருந்தது. எனக்கே எனக்கென்றிருந்தால் அதை யாராலும் மாற்றமுடியாது என்றதுளி நம்பிக்கையது! இப்போதோ, அவனைக் குழந்தையோடு கண்ட பின்னரோ, அது இனி நடவாது என்பது ஐயமின்றிப் புரிந்தாலும், மனம், அத்தனை சுலபத்தில் சமாதானம் அடைந்துவிடுமா என்ன?

சிரித்துப்பேசிப் பழகியவர்களில்லை. பார்வைகளால் சரிநேசத்தை உணர்த்திக் கொண்டதுமில்லை. இவள் புறமிருந்து குறும்பும் கேலியும் அவனைத்தீண்டி, சினக்கவும் எரிச்சல் கொள்ளவும் மட்டுமே வைத்திருந்தது. அதன் உச்சகட்டமாக, அன்று அவன் சிந்திய வார்த்தைகள்! தீண்டிய பார்வைகள்! விழி மூடித்திறந்தாள் துர்கா. அதிலிருந்து மலர்ந்தது தான் இந்த நேசம்! உள்ளத்தின் முணுமுணுப்போடு, கிளறப்பட்ட பழைய நினைவுகள், மையிட்ட நயனங்களையும் கசியச் செய்தன.

இப்போது எப்படி எங்கே சென்று மறைவதாம்? அவன் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தவாறே செய்வதறியாது அமர்ந்திருந்தாலும், தன்னுணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வரும் வேலையிலும் இறங்கிவிட்டாள்.

அவனோடு கதைத்துக்கொண்டே கூடவே வந்த துர்காவின்அம்மா, தம்பி யாரென்று தெரியுதாம்மா துர்கா? மகளிடமே கேட்டுவைத்தார். இவள் பதில்சொல்ல முன் ஆழமான பார்வையால் உற்றுப் பார்த்தவன், சில வேளைமறந்து போயிருப்பார் ஆன்ட்டி. நான் மொறட்டுவவிலிருந்து லீவுக்கு வரும் போது தங்கச்சியோடு கண்டிருக்கிறேன். சொன்னவன் குரலில் அத்தனை இயல்பு.

அப்போ அவ்வளவும் தானா? இவள் உள்ளத்தின் குரல் அவளுக்கே கேட்கும் போலிருந்தது. அசட்டுத்தனமான எதிர்பார்ப்பென்று தெரிந்தாலும் சட்டென்று அதைப்போக்கவும் முடியவில்லை. மீண்டும் கலங்கவா என்றன விழிகள்.

உங்கள் மகள் இப்படி அமைதியாக இருக்கிறதைப் பார்த்தால் என்னை யாரென்று தெரியேல்ல என்று நினைக்கிறேன்! அதே கூர்பார்வையோடு சொல்லிக்கொண்டுவர, நீங்க அஞ்சனாக்காவின் அண்ணாதானே? குறுக்கிட்டாள், துர்காவின் தங்கை சுஜி. உனக்கு இவரைத் தெரியவில்லையாக்கா? நம்ம அஞ்சனாக்கா. தமக்கையின் தோளில் தட்டிய சுஜி, மெல்லக் கண்சிமிட்டினாள். தமக்கை, அஞ்சனாவை மச்சாள் மச்சாள் என்று கலாட்டாசெய்வதை அறிந்திருந்தவளுக்கு, இப்போ அவனைக் கண்டதும் அன்றைய நினைவுகளில் தானாகவே முறுவல் அரும்பியது.

அதற்குப் பிறகும் அமைதியாக இருப்பது சரியல்லவே! ஹாய்! எப்படி இருக்கிறீங்க? என்றவள் பார்வை அந்தக் குழந்தையில்! அதற்கு அவன் பதில் சொல்லமுதல், அஞ்சனா எப்படி இருக்கிறாள்? என்று தோழி பற்றிவிசாரிக்க, அவனோ, இயல்பாகவே தங்கை பற்றிச்சொன்னான். அதே நேரம் பார்வை மட்டும் துர்காவை ஆழம் பார்க்கமுனைந்தது.

அந்நேரம் பார்த்து, நாமளும் சாப்பிடுவோம் சயந்தன். என்றபடி வந்தான் இவன் ஒன்றுவிட்டதங்கை கணவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் முன்னணி கல்விக்கையேடுகள் தற்போது விற்பனையில்... (தரம்- பாலர், 1, 2, 3, 4, 5, )

# மார்ச் மாதக் கையேடுகள்











உங்கள் பிள்ளைகள் மார்ச் மாதம் கற்ற சகல பாடங்களையும் வீட்டில் இருந்தவாறே சுயமாகப் பயிற்சி செய்ய உதவும். மாதாந்த அலகுப்பரீட்சைகளிலும், தவணைப் பரீட்சைகளிலும், புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சையிலும் வெற்றி கொள்வதை மையமாகக் கொண்டு கல்விச்சுடர் சிறப்பு வளவாளர் குழுவினால் தயாரிக்கப்படும். (முற்றிலும் பாடத்திட்டத்தை தழுவியது) மாதாந்த வெளியீடுகளே இவையாகும்.







**அனைத்து உதயன் பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.**

உங்கள் இடங்களில் இருந்தவாறே பிரதிகளை பெற்றுக்கொள்ள 0714273035 /0776569617 / 0718628372 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள்

**கல்விக்கூடங்களுக்கு விசேட கழிவு உண்டு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

# வண்ணாத்துப் பூச்சி

மதியம் ரெண்டு மணிக்கு திடீரென புறப்பட்டு முல்லைதீவு பிரதேச செயலகத்துக்கு வரச்சொல்லி தகவல் சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்தது மறுமுனையில் பேசிய குரல்.

அரக்க பறக்க அள்ளி சொறுகிய சாம்பல் நிற வாயல் சேலையோடு பக்கத்து வீட்டுக்கு ஓடினாள் பரமேசுவரி. ''அவசரமா பிரதேச செயலகத்துக்கு வரச்சொல்லி இருக்கினம் அவரப் பத்தின சேதியாத்தான் இருக்கணும், ஓடிட்டு வர்றன். மதியம் பள்ளிக்கூடம் விட்டு பிள்ளைங்கள் வரும், அதுகள கொஞ்சம் உங்க வீட்டில வச்சிக்கோங்க'' வேளம் சொல்லிவிட்டு சைக்கிளை நேராக செயலகத்



துக்கு ஓட்டினாள். சரியாக இருபதாவது நிமிடம் செயலக வாசலை தொட்ட சைக்கிளை டபுல் ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு செயலகத்துக்குள் நுளைகிறாள் பரமேசுவரி. முழு பெயர் முகவரி என அவள் உட்பட குடும்பத்தார்இகாணாமல் அக்கப்பட்ட தன் கணவனது தகவல்கள் எல்லாம் எடுத்துக் கொண்டனர். இது வழமையான ஒன்று தான்.

''ஏதேனும் தகவல் கிடைத்ததா என வினவினாள்''

''ரெண்டாயிரத்து ஒன்பதில் யுத்தம் உச்சகட்டத்தில் இருந்த போது காணாமல் போனதாக முறையிடப் பட்டிருக்கும் உங்கள் கணவர் சண்முகராசா வின் அங்க அடையாளங்களோடு ஒப்பிட்டு போகக்கூடிய ஒருவர் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். விரைவில் நல்ல தகவல் கிடைக்கும் என நம்புகிறோம். அவரின் இருப்பு நிரூபிக்கப்படும் வரை எதையும் நிச்சயமாக சொல்ல முடியாது.

தொடர்ந்து அவர் காணமல் போனவர்கள் பட்டியலிலேயே பத்திரமாய் இருப்பார் ஏதேனும் தகவல் கிடைத்தால் அறியத்தருவோம். இதில் ஒரு கையெழுத்து போடுங்கள்''

முகத்தில் ஒரு பிகாசம், கண்களில் ஈரம். இம்முறை ஆனந்த கண்ணீர் லேசான புன்னகையோடு கையெழுத்தை போட்டுவிட்டு ஈரமான கண்களோடு மீண்டும் சைக்கிளை மிதித்தாள். கழுத்தில் கிடந்த வெறும் மஞ்சல் கயிறு அடிக்கடி வெளியில் வந்து வந்து விழுந்தது. தன் கழுத்தில் தாலி கயிறு கிடப்பதே வெகு நாட்களின் பின்னர் இப்போது தான் உண்ர்கிறாள். கணவன் காணாமல் போனதிலிருந்து தன் நெற்றியில் பொட்டு வைத்ததே இல்லை. படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறாள் பள்ளிக்கூடம் போகிற இரண்டு பிள்ளைகளோடு.

வீட்டை அண்மித்ததும் சைக்கிளை விட்டு இறங்கிக் கொண்டாள். வீட்டு வாசலை அண்மித்தவளின் முகத்தருகே வேகமாய் பறந்து வந்த வண்ணாத்து பூச்சி ஒன்று எதேய்ச்சையாக அவள் நெற்றியில் உரசிப் போனது நெற்றியை தொட்டுப் பார்த்தவள் ஆனந்த கண்ணீரில் அப்படியே வாசலில் வீழ்ந்து அழுதாள். அவள் உச்சி நெற்றியில் வெகு நாட்களின் பின்னர் சிகப்பு நிறத்தை அப்பிவிட்டு சென்றிருந்தது அந்த வண்ணாத்துப் பூச்சி ...

போகவந்தலாவ
ப.கனகேஸ்வரன்
உடப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் ஆழம்

அன்பெனப் படுவது யாதெனில் யாவரும் இன்புற்றிருக்கச் செய்வதே துன்புற்றிருக்க அல்ல''

இயற்கையின் படைப்பில் அனைத்து உயிர்களும் அன்பின் வழியே இயங்குகின்றன.'அன்பே உலக மகாசக்தி' இது இயக்குசக்தி, ஆக்கும் சக்தி, அழிக்கும் சக்தி, அருளும் சக்தியென பல கோணங்களில் உயிர்களில் உறைந்துள்ளது.

தூய அன்பினால் ஒருவரைத் தூக்கிவிடவும் முடியும்

தீய அன்பினால் ஒருவரைத் தாக்கி அழிக்கவும் முடியும். இத்தனை அபூர்வ சக்தி வாய்ந்ததும் இது.

உயிர்குலத்தில் பெற்றோர், காதலர், நண்பர், பிராணிகள் என ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவிதமாக அன்பு ஆள்வதைக் காணலாம். எது எப் படி இருப்பினும்,

'அன்பு' எனும் உயிர்ப்பூ

ஒழுக்கம் சார்ந்து உள்ளார்ந்தமாய் மலரும்போதுதான் வாழ்க்கைத் தோட்டத்தில் வாடாமல் இருக்கும்.

இன்றைய காலத்தில் உலகம் உள்ளங்கையில் சுருங்கினாலும் உள்ளங் கள் பள்ளங்களிலே வீழ்கின்றன. புரிதல்,விட்டுக்கொடுப்பு இல்லாத அன் பால் உயிர்கள் பிரிவையே சந்திக்கின்றன.தற்கொலை, தன்னிச்சை முடிவு களால் தம்மை அழிக்கின்றன.

ஒருவர் பிறப்பு தொடக்கம் இறப்பு வரை அன்பென்ற நதியில் பயணிக் கவே விரும்புவர்.இதற்கு ஒவ்வொருவரும் பெறுவதிலும் கொடுப்பதிலும் குணமுடையவராக இருப்பதே சாலச்சிறந்தது. எத்தனை முதியோர் அன் பால் இன்புற்றிருக்க வேண்டிய காலத்தில் என்புருகி துன்புற்று முதியோர் இல்லங்களில் வாடுகின்றனர்.

அன்பும் ஒருவகையில் வரவு செலவு கணக்கைப் போன்றதே.

'அன்றாடம் கணக்கு பதியப்பட்டால்தான்
வாழ்வாதாரத்தை கணக்கிடலாம்
அனைவரிடமும் சரியாகப் அன்பு பகிரப்பட்டால்தான்
வாழ்க்கையில் உறவுகளை இணைக்கலாம்'

எனவே,

**''அன்பே உயிர்களுக்கு நிரந்தரம்
அதுவே வாழ்வின் உயர்தரம்''**



பிரேமா(எழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அலுவலகத்தில் உயர்வடைய ஐந்து வழிகள்

நம்மில் பெரும்பாலானோர் அனுதின இயந்திர வாழ்க்கையில் சிக்கிக் கொண்டு அன்பு, நட்பு, உத்வேகம் போன்ற நம் வாழ்க்கையின் அடிப்படைக் காரணிகளை இழந்து ஓர் இயந்திரம் போல் செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

பள்ளிப் பருவத்திலும், கல்லூரி வாழ்க்கையிலும் துள்ளித் திரிந்து வாழ்க்கையை மகிழ்வோடு மட்டுமே எதிர்கொண்ட நாம், வேலையில் சேர்ந்தபின் ஓர் இயந்திர மனிதன் போல் மாறிவிடுகின்றோம். வேலையில் மட்டுமல்ல, தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும், உறவுகளிலும் இதன் பாதிப்பு தெரியும் வண்ணமே ஆகிவிடுகிறோம். எங்கு இந்த மாற்றம் ஆரம்பிக்கின்றது.. அது எப்படி நம்மை முழுவதுமாக மாற்றிவிட்டது என்று அறியாமல் ''வேலையில் Job Satisfaction இல்லை ப்ரோ, ஒஃபீஸில் நிம்மதியே இல்லை'' என்று விரக்தியாக புலம்பும் ஆள் நீங்கள் என்றால் இந்தக் கட்டுரையை படித்த பின் உங்களுக்கு ஒரு புதுத்தெளிவு ஏற்பட வாய்ப்புள்ளது.

**1.உங்கள் பணியைப் போற்றுங்கள் :**

மிகச்சிறப்பான பணியை செய்வதற்கு நீங்கள் பெரிய பதவியில் இருக்க வேண்டியதில்லை. மார்டின் லூதர் கிங் ஜூனியர் இப்படிக் கூறுவார் ''உங்கள் பணி தெருக்களை சுத்தம் செய்வது என்றால், மைக்கேல் ஆஞ்சலோ எவ்வாறு ஓவியம் தீட்டினாரோ, அல்லது பீத்தோவன் எவ்வாறு இசையமைத்தாரோ, அல்லது ஷேக்ஸ்பியர் எவ்வாறு கவிதை எழுதினாரோ, அது போல் தெருக்களை சுத்தம் செய்வதில் நீங்கள்தான் சிறந்தவர் என்பது போல பணியாற்ற வேண்டும்.'' எனவே உங்கள் வேலை எதுவாக இருந்தாலும் அதில் உங்களின் பங்கு மிக அத்தியாவசியமானது என்று உணருங்கள்.

உங்களுடைய பணி, ஓர் உத்தரவைக் கேட்டு அதன்படி நடப்பது மட்டுமல்ல, உங்கள் செயல் பயனுள்ளதாக அமைந்ததா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதும் தான். இது பணியில் உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும்.

**2.தன்னம்பிக்கையை தகர்க்கும் சந்தேகங்களை இனம் காணுங்கள் :**

வேலையில் உங்கள் தன்னம்பிக்கை குறைவதற்கு முக்கிய காரணம், உங்கள் மேல் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள். உங்கள் நம்பிக்கையை சீர்குலைக்கும் மனிதர்களை, இடங்களை, தீய பழக்கவழக்கங்களை நீங்களே சுய பரிசோதனை செய்து பட்டியலிடுங்கள். இவற்றிடம் இருந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எவ்வாறு விடுபடுவது என்று சில வழிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் வகுத்து, அதனை ஒரு காகிதத்தில் எழுதி, காலையில் விழித்ததும் உங்கள் கண்ணில் படுமாறு ஒரு இடத்தில் ஒட்டிவிடுங்கள். நாள் முழுவதும் இது உங்களை Positive BP வைத்திருக்க உதவும். தயவு தாட்சண்யம் இன்றி உங்களை அவற்றிலிருந்து விடுவித்துக்கொள்வது

சினிமாவுக்குப் போலாமா என்று கேட்கும் மனதுக்கு நோ சொல்லுங்கள். இந்த மாதிரி, தேவையற்ற விஷயங்களுக்கு நீங்கள் முடியாது என்று கூறும் ஒவ்வொரு முறையும் வெற்றிக்கான பாதையில் நீங்கள் அதிவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை உணருவீர்கள்.



அவசியம்.

**3. பிரச்சினைகளை எதிர்கொள்ளுங்கள்**

பிரச்சினைகளில் இருந்து விலகிப்போவதால் அவைகள் சிறிதளவும் குறையப் போவதில்லை. உங்கள் வாழ்வின் மிகப்பெரிய பிரச்சினைகளை எதிர்த்து நிற்க ஆரம்பித்த அடுத்த நொடியே, அதன் சுமையில் இருந்து நீங்கள் விடுபட்டுவிடுவீர்கள் என்பதை அறிவீர்களா? ஒரு முறை முயற்சித்துப் பாருங்கள். உங்களின் வளர்ச்சிப்பாதையில் தடையாக உணரும் விஷயங்களை வேருடன் அகற்றுங்கள்.

**4. முடியாது என்று கூறிப் பழகுங்கள் :**

தேவை இல்லாத ஒரு விஷயத்துக்கு சரி என்று கூறும் ஒவ்வொரு முறையும் தேவையான ஒரு விஷயத்தை இழந்துகொண்டு இருக்கின்றீர்கள் என்பதை உணருங்கள். ஆதலால் முடியாது என்று கூறிப் பழகுங்கள். உதாரணத்திற்கு, ஒரு விஷயத்தை முடிக்க நீங்கள் வேலை செய்துகொண்டிருக்கும் போது உற்ற நண்பன் வாடா டீ சாப்டலாம் என்று அழைத்தால் நோ சொல்லுங்கள். அடுத்தநாள், நேரத்தில் வந்து ஒரு வேலையை செய்ய திட்டமெல்லாம் தீட்டியபின், இரவு

**5.வெளிப்படையாக இருங்கள் :**

உங்களுக்கு வேலை செய்யும் இடத்தில் இருக்கும் பிரச்சினைகள் பற்றி உங்கள் குடும்பத்தினருடனும், உங்களுக்கு நெருக்கமானவர்களிடமும் வெளிப்படையாக பேசுங்கள். இதன் மூலம் நல்ல புரிதல் ஏற்பட்டு தேவையற்ற மனக்கசப்புகளை தவிர்க்கலாம். தாங்க முடியாத மன அழுத்தம் உங்களுக்கு இருப்பதாக உணர்ந்தால் தயக்கமின்றி நல்ல மனநல மருத்துவரிடம் ஆலோசனை கேளுங்கள்.

**''உங்கள் பணியில் ஒரு டொப் ஸ்டாராக இருங்கள், வேலை என்னும் மேடையேறி உங்கள் இதயத்திலிருந்து பாடல்களைப் பாடி உங்கள் பார்வையாளர்களை அசத்துங்கள்''** என்று பிரபல வெற்றிப் பயிற்சியாளர் ரொபின் ஷர்மா கூறுவார்.

அலுவலகத்தில் நம்மைச் சுற்றி சுவாரஸ் யமான ஆட்கள் இருப்பார்கள். சொல்லப்போனால், வேலையைக் காதலித்துச் செய்பவர்களுக்கு பணியிடம் ஒரு சொர்க்கம்தான். இன்று முதல் நீங்களும் அலுவலகத்தில் அப்படி ஒரு சிறந்த நட்சத்திரமாக மாற முயற்சியெடுங்கள்.

**வாழ்த்துகள்!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

## ஜென் கதை உணர்த்தும் தத்துவம்

# நன்றி மறப்பது நன்றன்று



நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்பது தெய்வப் புலவரின் திருவாக்கு. ஒருவர் நமக்கு செய்யும் தீமையை நாம் உடனே மன்னித்து மறந்துவிடவேண்டும். அதேநேரத்தில் ஒருவர் நமக்கு செய்யும் நன்மையை நாம் எப்போதும் மறக்கக்கூடாது என்பதுடன், ஒருவர் தனக்கு செய்த நன்மையை நாம் மட்டுமல்லாமல், நம்முடைய பிள்ளைகளும் நினைவில் வைத்திருக்கும்படி அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அவர்களும் நாம் சொன்னதை நினைவில் வைத்திருப்பதுடன், அவர்களும் அதைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்கள்.

ஒரு ஜென் கதை இதை விளக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

அவர்கள் இருவரும் இணை பிரியாத நண்பர்கள். ஒருவருக்கு ஒரு துன்பம் வந்தால் மற்றவர் அந்த துன்பம் தனக்கே வந்ததாக எண்ணி வருந்துவார். அந்த அளவுக்கு அவர்கள் இருவரும் இன்ப துன்பங்களில் சமமாகப் பங்கெடுத்துக்கொள்வார்கள். ஒரு முறை அவர்கள் பாலை வனப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். சுடும் மணலில் நடக்கும் வேதனை தெரியாமல் இருப்பதற்காக அவர்கள் இருவரும் பேசியபடியே நடந்து சென்றார்கள்.

ஒரு கட்டத்தில் ஒரு விஷயத்தைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டு இருந்தபோது, அவர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு தோன்றிவிட்டது.

கருத்து வேறுபாடே அவர்களுக்குள் வாய்ச் சண்டையாக மாறி, ஒரு கட்டத்தில் ஒருவன் மற்றவனின் கன்னத்தில் அறைந்துவிட்டான். கடுமையான வெயிலில் நடந்த சோர்வு ஒரு பக்கம் வாட்ட, கூடவே தன்னுடைய அருமை நண்பன் தன் கன்னத்தில் அறைந்த வேதனையும் சேர்ந்துகொண்டது. அறை வாங்கியவன் ஒன்றும் பேசாமல் ஓர் ஓரமாகப் போய் உட்கார்ந்துகொண்டான். மணலில் தன் விரலால், 'இன்று என் உயிர்



நண்பன் என்னுடைய கன்னத்தில் அறைந்துவிட்டான்' என்று எழுதினான்.

அவன் என்ன எழுதினான் என்று மற்றவனுக்குப் புரியவில்லை. இருவரும் எதுவும் பேசாமலேயே பயணத்தைத் தொடர்ந்தார்கள். இருவருக்கும் தாகம் வாட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

அவர்களின் அதிர்ஷ்டம் வழியில் ஒரு பாலைவன ஊற்றைக் கண்டார்கள். நடந்ததை மறந்து அந்த ஊற்றில் இருந்த நீரை தாகம் தீரும்வரை அள்ளி அள்ளி பருகினார்கள்.

அப்போதுதான் அந்த விபரீதம் நிகழ்ந்தது. கன்னத்தில் அறை வாங்கியவனின் காலை யாரோ இழுப்பதுபோல் இருந்தது. ஆம், அவன் புதைகுழியில் சிக்கிக் கொண்டான்.

புதைகுழியில் சிக்கிக்கொண்ட நண்பனை மிகவும் சிரமப்பட்டு காப்பாற்றி கரை ஏற்றினான் கன்னத்தில் அறைந்த நண்பன்.

ஆபத்தில் இருந்து மீண்ட நண்பன் சற்று தொலைவு சென்று அங்கிருந்த பாறையின் மேல் அமர்ந்தான். ஒரு கல்லை எடுத்து தட்டி தட்டி எதையோ எழுத ஆரம்பித்தான்.

அவன் எழுதியது இதுதான்...

'இன்று என் உயிர் நண்பன் என்னுடைய உயிரைக் காப்பாற்றினான்' என்று.

இதையெல்லாம் பார்த்த நண்பன் கேட்டான், ''நான் உன்னை அறைந்தபோது மணலில் எழுதினாய்; இப்போது உன்னைக் காப்பாற்றியதை கல்லில் எழுதுகிறாய். ஏன் இப்படி கல்லில் சிரமப்பட்டு எழுதவேண்டும்? இதற்கு என்ன அர்த்தம்?'' என்று.

அறை வாங்கிய நண்பன் சொன்னான்: ''ஒருவர் நம்மை காயப்படுத்தினால், அதை மணலில் எழுதி வைத்



தால், காலப்போக்கில் மன்னிப்பு என்னும் காற்று அந்த எழுத்துகளை அழித்துவிடும்; ஆனால், அதுவே ஒருவர் நமக்கு நன்மை செய்தால், அதை கல்லில் எழுதி வைத்தால் காலத்தைக் கடந்து நிற்கும்'' என்றான்.

நன்றி இணையம்.

# Spoonerism

'சாகரம்' என்றால் 'மாக்கடல்' என்பது நமக்குத்தெரியும். ஆனால்.. 'சகாரம்' என்பது பலருக்கும் புரியாதது. இதனை 'எழுத்து மாறாட்டம்' அல்லது 'சொற்கள் மாறாட்டம்' என்றால் புரிய வாய்ப்புண்டு. இதனை Spoonerism என ஆங்கிலத்தில் அழைப்பார்கள்.

நம்மில் பலர் அவசரத்தில் அல்லது வேகமாகப்பேசும்போது தடுமாறுவதும் உண்டு. எழுத்துக்களையோ அல்லது சொற்களையோ மாறிப்போட்டுப் பேசுவதும் உண்டு. எடு: நகரம்ஃ நரகம் நமது மூளையின் தூண்டலைவிட வாயினுடைய துலங்கல் முந்துவதனால் இவ்வாறான எழுத்துக்கள் அல்லது சொற்கள் மாறாட்டம் அடைகின்றன என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

இதை Slips of the tongue என்பார்கள். இதை வேடிக்கையாக tips of the slung என்று சொல்வதும் உண்டு. ஆனால் சிலர் வேண்டுமென்றே இவ்வாறு மாற்றிப் பேசுவதும் உண்டு.

முல்லைத்தீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது காதலின் சங்கீதம்
புது குங்கும சந்தோஷம்
மாற்றும் மாலையும் ஏற்றும் தீபமும்
மங்கல பண்பாடும் ஸ்ரீ தேவியின் கல்யாணம்
மங்கல பண்பாடும் ஸ்ரீ தேவியின் கல்யாணம்

ஆணில் பாதி பெண்மை என்று வேதம் சொல்லியது
எந்த பாதி எங்கு சேரும் யார் தான் சொல்லுவது
தெய்வம் ஒன்று சேர்க்கும் சொந்தம் இங்கே சேர்கிறது
வேள்வி தீயில் சுயநலங்கள் வெந்து தீய்கிறது
நிலவினை கிரகணம் தீண்டியது
மறுபடி பௌர்ணமி தோன்றியது
விதியும் புதியது கதையும் புதியது
காலத்தின் தீர்ப்பு இது
தெய்வத்தின் சேர்ப்பு இது

இது காதலின் சங்கீதம்
புது குங்கும சந்தோஷம்
மாற்றும் மாலையும் ஏற்றும் தீபமும்
மங்கல பண்பாடும் ஸ்ரீ தேவியின் கல்யாணம்



காத்திருக்கும் சீதைக்கெல்லாம் ராமன் கிடைப்பதில்லை
ராவணார்க்கு சீதையென்று பிரம்மன் எழுதவில்லை
புதியபாதை போட்டுக் கொள்ள எவரும் மறுப்பதில்லை
பழிகள் கேட்கும் பழமை தன்னை யாரும் பொறுப்பதில்லை
பெண்ணுக்கு பெண்ணிங்கே எதிரியில்லை
பெண்மையை காட்டிலும் தெய்வமில்லை
அத்தை கண்களில் அன்னை தோன்றினால்
தோன்றினும் மாகாளி
அவள் பரிசுத்த பொன் தாயி (இது காதலின் சங்கீதம்....)

# ஒரு தேவதையாய்

கல்யாணம் என்பது எங்கெங்கோ இருக்கும் உறவுகளை இணைக்கும் சடங்கல்ல. அது இரண்டு மனங்களை இணைக்கிறது. அவர்களின் எண்ணங்களை இணைக்கிறது, உலகத்தின் சகல பந்தங்களை விடவும் திருமண பந்தமே உன்னதமானதாய் விளங்குகின்றது. மற்ற எல்லா உறவுகளும் ஒரு எல்லைக்குள் நிற்பவை. ஆனால் கல்யாணமோ ஒருவர் இறந்த பின்னும் மற்றவரை எண்ணங்களில் உறவாட வைக்கிறது. துணையை இழந்ததும் தீக்கங்குகள் போல எரிக்கும் நினைவுகளில் இருந்து மீளமுடியாது தவிப்பவர்கள் பலருள்ளனர். நினைவுத் தீயின் வேகத்தை இன்னொரு துணையால் அணைத்துவிட முடியுமா என்றால் அதற்கு பல காயங்களைக் கடக்கவேண்டும். பல அவமானங்களைச் சகிக்கவேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அளவில்லாத அன்புகாட்டத் தெரிய வேண்டும்.

சுந்தர் சுஜித்தா வாழ்விலும் அதுதான் நடந்தது. இருவருமே வாழ்வில் தமது முதல் துணையைப் பறிகொடுத்தவர்கள். பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டு பிள்ளைகளின் எதிர்காலம் கருதி திருமணமும் நடந்துமுடிந்தது. இருவருக்குமே ஒவ்வொரு பிள்ளைகள். கொஞ்ச நாள்தான் இப்படி வாழமுடியும், என பலரும் பலவிதமாய் கருத்துக்கள் சொன்னார்கள் தான், ஏன் அவர்களுக்கே கூட எத்தனை நாள் பந்தம் இதோ என்ற எண்ணமே அதிகமாய் இருந்தது. கணவனின் வீட்டுக்குள் புதுமருமகளாய் அடியெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

வைத்தாள் சுஜித்தா. வந்ததுமே பல விடயங்கள் அவளைக் கலங்க வைத்ததென்னவோ உண்மைதான். கணவனின் முகத்தில் தெரிந்த வெறுமையே அவனது மனதிலும் இருக்கிறது என்பதைப்புரிந்துகொண்டாள். சுந்தரின் ஒரே செல்ல மகன் ஆதவ், யாரோ சொன்ன சித்தி கொடுமையை அப்படியே மனதில் பதித்திருந்தான் என்பதை அவனது ஒவ்வொரு செயலும் சொல்லாமல் சொன்னது. மிரட்டும் பார்வையோடு வலம்வரும் மாமனாரைப் பார்க்கும் போது இதயம் ஒவ்வொரு முறையும் பல்டி அடித்துக்கொண்டது. இவர்களுக்கிடையில் தன் தாய் வீட்டில் இருக்கும் மகள் அபித்தாவை எப்படி இங்கே கொண்டுவருவதென்பது மிகப்பெரிய மனப்போராட்டமாய் மாறிப்போனது அவளுக்கு. இத்தனைக்கும் இடையில் மாமியார் காட்டிய பரிவும் அன்புமே ஒருவித தைரியத்தை தந்தது எனலாம்.

முதலில் எங்கிருந்து ஆரம்பிப்பது என யோசித்தவள், மாமியாரிடமே யோசனை கேட்டாள். தன் அன்பென்ற ஏவுகணையை முதலில் ஏவியது ஆதவ்விடம் தான். அவனுக்கு பிடித்தவைகளைத் தெரிந்துகொண்டாள். பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றையும் கவனித்துக்கொண்டாள். பத்து வயதுக் குழந்தை மனம் சட்டென்று ஒட்டிக்கொண்டது இவளிடம். மாமனாரிடம் மருமகளாய் அல்லாமல் ஒரு மகளாய் அன்பு காட்டினாள். பாசம் யாரைத்தான் கனியவைக்காது, இதில் அவளது மாமனார் மட்டும் விதிவிலக்கா என்ன? மைத்துனர்களிடம் அண்ணி என்ற உறவோடு நண்பியாகவும் நடந்துகொண்டாள். ''அண்ணி அதைக்கண்டீங்களா?'' ''அண்ணி சாப்பாடு ரெடியா?'' ''அண்ணி அண்ணாட்டபை கீயை வாங்கித்தாங்க'' என்னுமளவிற்கு அவர்களின் மனதில் இடம்பிடித்திருந்தாள். எல்லாவற்றையும் பார்த்து வார்த்தையில் மாமியார் பாராட்டினார் என்றால், கனிவோடு பார்த்து கண்களால் மெச்சினான் கணவன் சுந்தர்.

ஒரு விடயம் மட்டும் சுஜித்தாவிற்கு தெளிவாய் புரிந்தது. சுந்தர் என்பது ஒரு தனிமனிதன் கிடையாது. அம்மா, அப்பா, தம்பிமார், தங்கை இவர்களோடு தன் உயிராய் அவன் நினைக்கும் ஆதவ் என மொத்த குடும்பமும் தான் அவனது உலகம் என்பது. இவர்கள் அத்தனை பேர் மீதும் அவள் காட்டிய அன்பு அவனது உள்ளத்தை மெல்ல இளகவைத்தது. முதல் மனைவி ஆரணி மீது கொண்ட நேசம் ஒருபோதும் மாறாது என்ற அவனது எண்ணச்சுவர் மெல்ல உடையத்தொடங்கியது. சுஜித்தாவை கண்டாலே விலகிப்போனவன்மெல்லநெருங்கத் தொடங்கினான். அலுவலகம் செல்லும் போது அம்மாவிடம் மட்டுமே சொல்லிவிட்டுச் சென்றவன் நேருக்கு நேர் பார்த்து அவளைத் திணறச்செய்தான். சிரிப்பையே மறந்திருந்தவன் மெல்லப் புன்னகைத்தான், நாட்களின் நகர்வில் வாய்விட்டே சிரிக்கத்தொடங்கினான். அவளுக்காக புத்தகங்கள், அலங்காரப் பொருட்கள் வாங்கி வந்து மேசையில் வைத்தான். அவள் அதனை எடுத்துப்பார்க்கும் அழகை மறைந்திருந்து ரசித்தான். கண்ணுக்கு மை வாங்கிவந்தான், கண் மை போட்டுக்கொள்ளுங்கள், அழகாய் இருக்கும் என்றான். நாளடைவில் தன் உலகத்தில் நீயும் வா என்றான். வெளியே சிரித்தாலும் மனைவியின் கண்ணில் ஒருவித வலியைக் கண்டான், காரணம் புரிந்து சுஜித்தாவின் மகளை தானே சென்று அழைத்துவந்தான். அபித்தாவின் மீது அப்பா என்ற பாசத்தைக் கொட்டினான். தன் மகன், தன் மகள் என இருவரையும் சமனாக நடத்தினான்.

**காதலித்து கல்யாணம் செய்யும் பல முதல் திருமணங்கள் பொய்யாக மறுமணங்கள் சில வெற்றி பெறுகிறன. காரணம் அன்பென்ற ஒற்றைச் சொல்லே.**



நாட்கள் உருண்டன, மனைவியின் கைகளைப் பற்றிக்கொண்டு என் வாழ்க்கையில் நீ தேவதையாய் வந்தாய் என்றான். காலங்கள் கடந்தும் அழகான இல்லறம் இன்றுவரை அவர்களுக்குள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் தமிழ்நாட்டை வாழ்விடமாகவும்; கொண்ட பொலிகையூர் ரேகா எழுதிய மனிதர்கள் காத்திருக்கிறார்கள் நூல் வெளியீடு அண்மையில் தமிழ்நாட்டில் திருச்சியில் ஜமால் முகமது கல்லூரியில் இடம்பெற்றது. இவர் நீண்டநாட்களாக ஒளிஅரசியின் எழுத்து துறையுடன் இணைந்து பயணிக்கும் ஒரு வாசகியாவார். இவரது எழுத்துலகப் பயணம் மேலும் சிறப்புற்று வளர ஒளிஅரசியின் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.





முறிகண்டி யே.லக்சிதரன் எழுதிய ''என் பயணம்'' கவி நூல் வெளியீட்டு விழா 04-03 -2018 அன்று பி.ப 02.00 மணியளவில் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் படைப்பாளர்கள், கிராம மக்கள், சமூகஆர்வலர்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். லக்சிதரனின் கவிப்பயணம் மேலும் சிறப்புற ஒளிஅரசியும் வாழ்த்தி நிற்கின்றாள்.

# வாழ்த்துக்கள்

மாகாணமட்ட ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான வினாடிவினா பொது அறிவுப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற வலந்தலை அ.மி.த.க பாடசாலை மாணவர்கள். ஒளிஅரசியின் சார்பில் அனைத்து மாணவர் களுக்கும் வாழ்த்துக் கள் உரித்தாகட்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# United Creation

**Wedding Cards Print & Sale - CTP & Colour Separation**




**No. 51 A, Negombo Road, Peliyagoda.**




E-mail: unitprintek@gmail.com

Tel : 011-2938083
011-5767309

Mobile: 0777 347452


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org